
# இலங்கையின் கதை

எம். ராதாகிருஷ்ணபி



3216

JPL

C3216

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கதை

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
14-12-1993
யாழ்ப்பாணம்

ம. ராதாகிருஷ்ணா பிள்ளை
B.A., B.L.

KOHA
JPL

99863

அல்லயன்ஸ் கம்பெனி
244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபாற் பெட்டி எண் 617
மயிலாப்பூர் :: சென்னை-600 004.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

954.93

# BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| 1. | Title of the Book | : Elangayin Kathai |
| 2. | Author | : M. Radhakrishna Pillai, B. A., B. L. |
| 3. | Language | : Tamil |
| 4. | Edition | : Previous Edition, Apr. 1946<br>Revised Edition, Dec. 87 |
| 5. | Date of publication | : December 1987 |
| 6. | Copy Right Holder | : Publisher |
| 7. | Paper used | : 10.9 kg. D/Cr. white printing |
| 8. | Size of the Book | : 18.5 cms x 12.5 cms |
| 9. | Printing Point used | : 10 Point |
| 10. | Number of pages | : 104 Pages |
| 11. | Number of copies | : 1100 Copies |
| 12. | Artist | : Chitraleka. |
| 13. | Printer | : Sundaram Printing Works, Madras-600 014. |
| 14. | Binding | : Card Board Binding |
| 15. | Price | : Rs. 8-00 |
| 16. | Publisher (with full address) | : The Alliance Company, 244, R.K. Mutt Road, Post Box No. 617, Mylapore, Madras-600 004. Phone: 7 1 3 1 4 |
| 17. | Subject | : Story of Sri Lanka. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டை நோக்கி .....

''தமிழில் நல்ல நூல்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸ் ஸ்தாபகர் ஸ்ரீ வி. குப்புசாமி ஐயரை நான் பாராட்டுகின்றேன்.''

—**மகாத்மா காந்தி**

''நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளையும், பல நாடகங்களையும், பல மொழிபெயர்ப்புக்களையும் இன்னும் பல விஷயங்களையும் எளிய அழகிய நடையில் வெளியிட்டு வரும் அல்லயன்ஸாரை நான் பாராட்டுகின்றேன்.''

—**மஹாமஹோபாத்தியாய**
**Dr. உ. வே. சாமிநாத ஐயர்**

"Books Published by Alliance Co., are highly popular Books."

— Rt. Hon'ble V. S. Srinivasa Sastri

''தமிழில் பல அழகிய புத்தகங்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸாருக்கு நன்றி செலுத்தி அவர்களைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டுகிறேன்.''

—**சக்கரவர்த்தி ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார்**

''அல்லயன்ஸ் கம்பெனியார் நல்ல நூல்களை வெளியிடுவதில் தேர்ந்தவர்கள். அவர்களுக்குத் தமிழ் நாட்டார் தக்க ஊக்கம் தர வேண்டும் என விரும்புகின்றேன்.''

—**சத்தியமூர்த்தி**

''மயிலை அல்லயன்ஸ் கம்பெனியாரின் வெளியீட்டுத் திறத்தை ஈண்டு விரித்துக் கூற வேண்டியதில்லை. அதை நாடறியும். அல்லயன்ஸ் கம்பெனியாரால் வெளியிடப் பெற்ற நூல்கள் யாவும் தமிழ்நாட்டுக்குப் பல வழிகளிலும் பயன் விளைத்து வருதல் கண்கூடு. நாட்டு நலங்கருதி ஒழுங்கு முறையில் உழைக்கும் அவர்களுக்கு நாடு கடமைப் படுவதாக.''

—**திரு. வி. க.**

99863

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வாசிரியரின்
## வேறு நூல்கள்

1. தென்னாட்டுக் கோயில்கள் பாகம் I
2. தென்னாட்டுக் கோயில்கள் பாகம் II
3. வட நாட்டுத் தலங்கள்
4. அருள் கொழிக்கும் ஆலயங்கள்
5. அறம் காத்த அரண்கள்
6. சுகர் கூறிய கண்ணன் கதை
7. பாகவதக் கதைகள்
8. பிற்கால வைணவம்
9. வரலாற்றுக் கதைகள்
10. பலதேசத்துக் கதைகள்
11. அவதாரமும் கம்பரும்
12. தமிழர் வீரம்
13. உரிமையும் கடமையும்
14. பாரத நதிகள்
15. கம்பர் காட்டும் மகளிர்
16. இலங்கையின் கதை

மற்றும் சில......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOH
JPL

# இலங்கையின் கதை

உலகம் புகழத்தக்க இலக்கிய நூல்களைச் செய்த பெருமை சிங்களவர்க்கில்லையென்றாலும் இலங்கையில் காலடி வைத்த நாள் முதல் இன்று வரை தங்கள் தேச சரித்திரத்தை எழுதி வைத்த பெருமை அவர்களுக்கு உண்டு. இலங்கையின் சரித்திரத்திற்கு ஆதாரங்களாகச் சில நூல்கள் பாலி மொழியிலும், சிங்கள மொழியிலும், உள்ளன பாரதத்தில் சிங்களவர் எவ்வாறு உற்பத்தி யானார்கள், அவர்கள் இலங்கைக்கு எப்பொழுது வந்தார்கள் இலங்கைக்கு வந்த பின் பாரதத்துடன் எவ் வகையில் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பதையும் பற்பல இடங்களில் இந்த நூல்கள் கூறுகின்றன.

இவ்வரலாற்றை முதன் முதலாக எழுதியவர் மகாநாமர் என்ற பௌத்த பிட்சு. அவர் காலம் கி.பி.470 ஆகும். அவ் வரலாறுகள் கி.மு. 543இல் விசயனும் அவன் தோழர்களும் இலங்கையில் வந்து குடியேறியதிலிருந்து ஆரம்பித்து, கி.பி.301 வரை நாட்டில் நடந்த சம்பவங் களைப்பற்றிக் கூறுகின்றன. இவை பாலி மொழியில் எழுதப்பட்டிருந்ததால் பலருக்கு விளங்காமல் முத்திரைக் கவிகளாக இருந்தன. சார்சு டர்னர் என்பவர் பண்டிதர் களைக்கொண்டு இவற்றுள் சில பாகங்களை மொழி பெயர்த்தார். இவ் வரலாறுகள் அனைத்தையும் ஆங்கி லத்தில் மொழி பெயர்த்தவர் விசயசிங்க முதலியார் என்பவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரை சேர்ந்தவுடன் விசயன் ஆவலுடன் கீழே குதித்து நிலமகளை வணங்கினான். அவனுடைய தோழர்களும் கரையில் இறங்கினர். விசயன் இலங்கையில் காலெடுத்து வைத்த அதே தினத்தில்தான் புத்தர்பிரான் பரி நிர்வாணம் அடைந்தார். அன்றைய தினம் வைசாக பூர்ணிமை. தமது மதம் இலங்கையில் செவ்வனே பரவும் என்று புத்தர்பிரான் உணர்ந்தாராம்.

அவருடைய ஆணையால் இந்திரன் விசயனைக் காப்பதற்கெனத் திருமாலை இலங்கைக்கு அனுப்பி வைத்தானாம்; தம் மந்திர சக்தியால் விசயனைக் காப்பாற்றினார் திருமால் என்பர்.

## விசயன்

விசயன் இலங்கையை வந்தடைந்தபொழுது அப்பகுதியை இயக்கர் ஆண்டு வந்தனர். அவர்களுடைய அரசியாகிய குவேணி அவர்கள் வருகையை நன்கு உணர்ந்து கொண்டாள். விசயனுடைய தோழர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்தாள் குவேணி. தான் அந்நாட்டு அரசி என்றும் தன்னை மணந்து கொண்டால் அவன் அரசனாகலாம் என்றும் கூறினாள். தான் அயல் மனிதர்களுக்குப் புகலிடம் அளித்ததை நரமாமிச பட்சினிகளான இயக்கர்கள் உணர்ந்தால் தன்னைக்கொன்று விடுவார்கள் என்றும் தெரிவித்தாள்.

அப்போது தீவில் இயக்கர்குல முதல்வர் மகளுக்குத் திருமணம் நடந்துகொண்டிருந்தது. இயக்கர்கள் அனைவரும் அங்கே கூடியிருந்தனர். அவர்களைத் திடீரென்று தாக்கி நாட்டைக் கைப்பற்றும்படி விசயனுக்குப்போதித்தாள் குவேணி. தனது சிறிய சேனையுடன் அவர்களை எதிர்க்கத் தயங்கினான் விசயன். ஆனால் தான் உதவி செய்வதாகக் கூறி விசயனைத் தோழர்களுடன் அங்கே அழைத்துச் சென்று சூழ்ச்சி செய்து இயக்கர்களை நிர்மூல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக்கினாள் குவேணி. திடீரென்று தாக்கப்படவே பலர் போரில் மாண்டனர்; இன்னும் சிலர் ஓடி மறைந்து விட்டனர்.

விசயன் குவேணியை மணந்துகொண்டான். அவர்களுக்கு ஓர் ஆணும் ஒரு பெண்ணுமாக இரண்டு குழந்தைகள் பிறந்தன. தோழர்கள் உதவி கொண்டு அப்பகுதியைக் காடு திருத்தி நாடாக்கினான் விசயன். அவனை அரசனாக முடி சூட்டிக்கொள்ளும்படிக் கூறினர் தோழர்கள். மானிடப் பெண்ணை மணந்து கொண்டாலன்றித் தான் முடிசூடச் சாத்திரங்கள் அநுமதியா என்று கூறி மறுத்துவிட்டான் விசயன். இயக்கியை இராணியாக்கச் சாத்திரங்களில் அநுமதி இல்லை.

ஓர் அரசிளங்குமரி கிடைக்கும் வரை மகுடம் தரிப்பதை ஒத்திப் போடலாம் என்று கூறினான் விசயன். அதன் பின்னர் மந்திரிகள் ஒன்றுகூடி ஆலோசித்து மதுரைப் பாண்டியனிடம் பெண் பேசத் தூதனுப்பினர். பாண்டியன் விசயனைப்பற்றிய எல்லா விவரங்களையும் அறிந்துகொண்டு தன் பெண்ணை மணம் செய்து கொடுக்க ஒப்புக்கொண்டான். பரிவாரங்களுடனும் பல பெண் தோழியருடனும் பாண்டிய அரசிளங் குமரி இலங்கைக் கரையில் வந்திறங்கினாள். அவர்கள் மகாதித்த என்ற துறைமுகத்தில் வந்து இறங்கினார்கள்.

பாண்டியன் மகளை விசயன் மணந்து கொள்ளப் போவதை அறிந்த குவேணி கணவன் மீது சீற்றங் கொண்டாள். தன் மக்களுடன் பழைய இயக்கர்கூட்டத்தாரிடம் சென்று உதவி வேண்டினாள். ஆனால் அவர்கள் அந்தச் சதிகாரியை பிடித்துக் கொன்றுவிட்டனர். குழந்தைகள் மாத்திரம் தப்பியோடி விட்டார்கள். இப்போதுள்ள இலங்கையின் பழங்குடிகள் இவர்கள் சந்ததியாராம்.

விசயன் மாதித்த (மா தோட்டம்) விற்குச் சென்று அரச குமாரியை வரவேற்று இலங்கையின் அரசனாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிசூடிக் கொண்டான். அவன் 38 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் என்கிறார்கள். நாட்டில் விவசாயத்தைப் பெருக்கிக் காடு கெடுத்து வளப்படுத்தினான் விசயன். இவ்வாறு பாரத நாட்டு அரசனும் அரசியும் இலங்கையில் ஆட்சி புரிந்தனர். ஆயில் ஆசிரியர் இலங்கையில் குடியேறியதைப்பற்றிய கட்டுக் கதை இவ் வரலாறு என்பது சில சரித்திர ஆசிரியர்களின் கருத்து.

## பாண்டு வாசுதேவன்

விசயனுக்குப்பின் இலங்கையில் அரசாள அவனுக்குப் புதல்வர்கள் இல்லை. அரசு குடும்பத்தில் பிறந்த ஒருவனே சிங்களத்தில் தனக்குப் பின்னால் அமர வேண்டுமென்று விரும்பினான் விசயன். அவனுடைய தம்பிகளில் ஒருவன் பாரதநாட்டில் சிங்கபுரத்தை அப்போது ஆண்டுவந்தான். அவனுக்கு மூன்று புதல்வர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவனை அனுப்புமாறு தம்பிக்குத் தூது அனுப்பினான் விசயன். மூன்று சகோதரர்களில் இளையவனான வாசுதேவனை இலங்கைக்கு அனுப்பினான் மன்னன்.

பாண்டு வாசுதேவன் இலங்கையை அடைவதற்கு முன் விசயன் இறந்துவிட்டான். எனவே, வந்தவுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டான் பாண்டு. அதே காலத்தில் வடஇந்தியாவில் பல கலகங்கள் நடந்துகொண்டிருந்தன. அதன்காரணமாகப் பத்திரகாஞ்சனை என்பவள் பல தோழியருடன் கப்பலில் ஏறி இலங்கையை அடைய வேண்டியிருந்தது. பத்திரகாஞ்சனை இலங்கையில் வந்திறங்கினதை அறிந்த பாண்டு வாசுதேவன் அவளைச் சகல மரியாதைகளுடனும் வரவேற்றான். பேரழகியான அவளைத்தானே மணந்துகொண்டு முடிசூடினான். அவளுக்கு ஒன்பது பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பிறந்தனர். பத்திரகாஞ்சனையின் சகோதரர்கள் அறுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கே வந்து குடியேறிவிட்டார்கள். அவர்களுள் விசிதன் என்பவன் விசிதபுரத்தைக் கட்டினான். அநு ராதன் என்பவன் அநுராதபுரத்தைக் கட்டினான்.

பத்திரகாஞ்சனைக்கு ஒன்பது பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பிறந்தனர். பெண்ணின் பெயர் சித்திரை. அவள் வளர்ந்து அழகியானாள். அவள் வயிற்றில் பிறக் கும் பிள்ளை தன் மாமன்மார்களைக் கொன்று முடி சூடு வான் என்று சோதிடர்கள் கூறினர். இதைக் கேள்விப் பட்ட பாண்டு அவளுக்குத் திருமணமே நடத்தாமல் கன்னிப் பெண்ணாக வைத்திருக்கத் திட்டமிட்டான். ஆற்றங்கரையோரத்தில் கட்டுக்காவலுடன் எந்த ஆண் மகன் சகவாசமும் நேராதபடி அவளைச் சிறை வைத் தான் மன்னன்.

ஆனால் விதியின் விசித்திர சித்தம் வேறு வழியா யிருந்தது. பாரதத்தில் அரசு புரிந்து வந்த மற்றொரு மாமன் மகன் திக்காமினி என்பவன் சித்திரையின் அழ கைப்பற்றிக் கேள்விப்பட்டு இலங்கையை அடைந்தான். கட்டுக் காவலைக் கடந்து தோழியின் உதவியால் சிறை வைக்கப்பட்ட கன்னிமாடத்திற்குள் சென்றான். அவளுடன் சில காலம் ஒருவரும் அறியாமல் இன்புற்று வாழ்ந்தான். சித்திரை கர்ப்பவதியானாள். இச்செய்தி அரசனுக்கு எட்டியது. காவலைப் பலப்படுத்தினான் அரசன். அவளுக்குப் பிறக்கும் குழந்தையை உடனே கொன்றுவிட வேண்டு மென்று திட்டமிட்டான் மன்னன்.

## பாண்டு அபயன்

குழந்தை பிறந்தவுடன் அதை மிகச் சாமர்த்தியமாக வெளியேற்றிக் காட்டில் ஓர் இடையனிடம் விட்டு வைத் தாள் சித்திரை; அதற்குப் பதிலாக அப்போதே பிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண் குழந்தையை வரவழைத்துத் தான் பெற்ற மகவென்று அறிவித்தாள்.

பதினாறு ஆண்டுகள் காட்டில் வளர்ந்தான் சித்திரையின் மகன். அவனுக்குத் தன் பூர்வ வரலாற்றைத் தோழியின் மூலம் அறிவித்தாள் சித்திரை. அவனுக்குப் பாண்டு அபயன் என்று பெயரிட்டனர். பின்னர் ஓர் அந்தணனிடம் கல்வி கற்க அவனை அனுப்பி வைத்தாள். அந்தணனிடம் யுத்தப் பயிற்சியை நன்கு பெற்று ஒரு வீரனாக விளங்கினான் பாண்டு அபயன். தாய் இரகசியமாக அனுப்பிய பொருளைக் கொண்டு பெரிய சேனையைத் திரட்டி மாமன்மார்களின்மீது அவன் போருக்குச் சென்றான். போரில் மாமன்மார் உயிரைச் சூறையாடினான் பாண்டு அபயன். மூத்த மாமனை மட்டும் உயிருடன் விட்டுவிட்டான். மற்றொரு மாமன் மகள் பாலி என்பவளை மணந்து இலங்கையின் மன்னனாக முடி சூடிக் கொண்டான்.

அவன் காலத்தில் அநுராதபுரம் தலை நகராயிருந்தது. நகரின் சாலைகளைப் பெருக்கி வித்தரித்தான் பாண்டு அபயன். பல புதிய கட்டிடங்களை நிர்மாணம் செய்தான். விவசாயத்தை அபிவிருத்தி செய்து நாட்டைச் செழிப்பாக்கினான். இவ்வாறு எழுபத்தேழு ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் இவன்.

## தீசன்

பாண்டு அபயனுக்குப்பின் அவன் மகன் முத்து சிவன் பட்டமெய்தினான். இவன் சீரும் சிறப்புமாக அறுபது ஆண்டுகள் ஆட்சி புரிந்து நாட்டை வளப்படுத்தினான். இவன் காலத்தில்தான் மகா மேகவனம் என்ற பூங்கா அமைக்கப் பெற்றது. இவனுக்குப் பிறகு இவன் மகன் தீசன் பட்டத்திற்கு வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரித்திர பூர்வமான இலங்கையின் வரலாறு இவன் காலத்தில் தான் ஆரம்பமாகிறது. இதற்கு முன் ஆண்ட அரசர்கள் வரலாறு செவி வழி வந்த குறிப்புக்களைக் கொண்டு கி.பி ஏழாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது என்கிறார்கள். வரலாறுகள் பாரத நாட்டு இதிகாசக் கதைகளைத் தழுவியுள்ளமை நன்கு பெறப்படும். தீசன் காலத்தில் தான் உலகப் புகழ் பெற்ற மௌரிய சக்கரவர்த்தி அசோகர் பாரதத்தில் ஆட்சி புரிந்து வந்தார். அசோக சக்கரவர்த்தியும் தீசனும் முற் பிறவியில் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்று மகாவம்சம், இராசாவளி ஆகிய நூல்கள் கூறுகின்றன.

தீசனின் காலத்தில்தான் அசோகனுடைய மைந்தன் மகிந்தன் பல பௌத்த பிட்சுக்களுடன் இலங்கையை அடைந்தான். தீசன் இளம் பிட்சுவான மகிந்தனை வரவேற்று உபசரித்தான். தந்தையால் அனுப்பப்பட்டு, இலங்கையில் பௌத்த மதத்தைப் பிரசாரம் செய்யத் தான் அங்கே போந்ததாகக் கூறினான் மகிந்தன். இலங்கையில் தர்மோபதேசம் செய்ய மகிந்தனுடன் மஞ்சள் உடை தரித்த பல பௌத்த பிட்சுக்கள் வந்திருந்தனர். அதே இடத்தில் மகிந்தன் தீசனுக்குத் தர்மோபதேசம் செய்தான். தீசன் அப்போதே பௌத்த மதத்தைத்தழுவி தேவானாம்பிய தீசன் என்று பெயர் பெற்றான். மகிந்தனுக்கும் அவனுடன் வந்த பிட்சுக்களுக்கும் அரண்மனையில் இடம் அளித்தான். ஆயிரக்கணக்கான மக்கள் மகிந்தனின் உபதேசத்தைக் கேட்க அங்கே கூடினர்.

பெருந்திரளாகக் கூடி வரும் மக்களுக்கு அரண்மனையில் போதிய இடம் இல்லை. எனவே தந்தை உண்டாக்கிய மகா மேக வனத்தை மகிந்தனுக்கு அளித்துவிட்டான் தீசன். மகிந்தனும் பிட்சுக்களும் அங்கே தங்கியிருந்து மக்களுக்குத் தருமோபதேசம் செய்து வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனைப் பெண்டிர் பலர் இந்த உபதேசங்களைக் கேட்டு பிட்சுணிகள் ஆகிவிட விரும்பினர். அதற்காகத் தன் தங்கை சங்கமித்திரையைப் பாரதத்தினின்றும் வரவழைத்தான் மகிந்தன். தீசனின் சகோதரன் மனைவி அனுவா பல பெண்டிருடன் பிக்குணியானாள். சங்கமித்திரையிடம் புத்தகயையிலிருந்து புனித போதி மரத்தின் கிளையொன்றை அனுப்பி வைத்தார் சாம்ராட் அசோகர். இந்தப் போதி மரத்தைப் புனித வழிபாட்டுடன் அநுராதபுரத்திலே பிரதிட்டை செய்தான் தீசன். இது நாட்டப்பட்டு 2,200 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் நல்ல நிலையில் அதே இடத்தில் இருக்கிறது இந்த மரம்.

அனுவாவின் உதவியால் பெண்களுக்குத் தனிச் சங்கமொன்றை நிறுவினாள் சங்கமித்திரை. பல பௌத்த ஆலயங்களும், மடங்களும் கட்டினான் தீசன். புத்தரின் வலது புறத் தாடை எலும்பைத் தருவித்து அதைப் புனித அடக்கம் செய்தான். அதன் மீது தூபாராமம் என்ற பிரம்மாண்டமான தாது கோபுரம் அமைத்தான். தீசனுக்கு முதுமைப் பருவம் நெருங்கிவிட்டது. பட்டத்துக்கு வரும் அவன் மகன் மிகச் சிறுவனாயிருந்தான். எனவே ஆட்சியைத் தம்பி மகா நாமனிடம் (தன் மகன் வயதடையும் வரை) விட்டு வைக்க திட்டமிட்டான். ஆனால் அவன் இராணிக்கு அது விருப்பமில்லை. தானே புதல்வனுக்குப்பதில் ஆட்சி புரிய வேண்டுமென்பது அவள் அவா. இரகசியமாக மகாநாமனுக்கு நஞ்சு கலந்த உணவை அனுப்பினாள் ராணி. அவளுடைய புதல்வனோ சிறுவனே அந்த நஞ்சு கலந்த உணவை அருந்தி மடிந்துவிட்டான். இந்தச் சூழ்ச்சியை அறிந்த மகாநாமன் பயந்து தென்னிலங்கைக்கு ஓடி விட்டான். தீசன் மனமுடைந்து உயிர் நீத்தான்:

தீசனும் மகிந்தனும் முதலில் சந்தித்த இடத்தில் ஒரு விகாரை கட்டப்பட்டது. அவ்விடம் மகிந்தலை என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கி வருகிறது. பௌத்தருடைய யாத்திரைத்தலங்களில் அது ஒன்றாகக் கருதப்படுகிறது. மகிந்தன் அங்கே போந்த தினம் ஆனிப் பௌர்ணமி யாகையால் இன்று அந்தத் தினம் போச பண்டிகையென்று கொண்டாடப்பட்டு வருகிறது.

தீசாவிற்குப் பின்னால் அவன் சகோதரர்கள் சிறிது காலம் ஆட்சி புரிந்தனர். அவர்கள் ஆட்சித் திறனற்றவர்கள் ஆனபடியால் நாட்டில் குழப்பமும் கலகமும் ஏற்பட்டிருந்தன. அவர்களுள் சுரதிசன் என்பவன் மலபாரிகளைக் கூலிப்படையினராக அமர்த்திக் கொண்டு கலகத்தை அடக்கப் பார்த்தான்.

அக்காலத்தில் இலங்கையின் வடமேற்குப் பகுதியில் சைவர்கள் அடிக்கடி யாத்திரையாக வருவதுண்டு. இப்பகுதியில் சிங்களவர்கள் ஆட்சி வலுவுற்றிருந்தது. கடற்கொள்ளைக்காரர்களுக்குப் பயந்து படைகளுடன் வந்த அவர்கள் இப்பகுதியில் தங்குவார்கள். சேனன் குத்திகன் என்ற இரண்டு தமிழர்கள் மலபாரிலிருந்து இலங்கைக்கு வந்தார்கள் என்று மகா வம்சம் கூறுகிறது. கி. பி. எட்டாம் நூற்றாண்டு வரையில் சேரநாடு தமிழ் நாடாகவே இருந்தபடியால் மலபாரிகளைத் தமிழர் என்றனர். மலபாரிகள் என்பவர் மலையாளிகள் அல்லவென்றும், பாண்டிய நாட்டிலிருந்தும், ஒரிசா கட்டாக் முதலியநாடுகளிலிருந்தும் வந்து குடியேறியவர்கள் என்றும் கூறுவர்.

## ஏலேலன்

அந்த இருவரும் சிங்களவரை வடமேற்குப் பகுதியில் இருந்து துரத்திவிட்டார்கள். இதற்குபிறகு ஏலேலன்என்பவன் தமிழ் நாட்டிலிருந்து பெரும்படையுடன் வந்து சிங்களவர்களை முறியடித்துத் தனது ஆட்சியை இலங்கையில் நிறுவிவிட்டான். இவன் சோழ நாட்டவன் என்று சிலரும் மைசூரைச் சார்ந்தவன் என்று சிலரும் கூறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாத்காரத்தின் மூலம் நாட்டைக் கைப்பற்றிய இத் தமிழ் மன்னன் நீதி தவறாமல் ஆட்சி புரிந்ததாக மகா வம்சம் முதலிய நூல்கள் கூறுகின்றன, மநுநீதி சோழனைப்போல் இவனும் தன் மகனை நீதிக்காகத் தேர்க் காலில் இட்டதாக மேற்படி நூல் கூறுகிறது. அவனது தேர் ஓடும்போது ஒருமுறை தாது கோபுரத்தை இடித்து விட்டது. அதற்காகத் தானே தேர்க்காலில் விழுந்து இறக்கமுற்பட்டான் என்று மற்றொரு வரலாற்றையும் மகாவம்சம் கூறுகிறது. எது எவ்வாறாயினும் இக்கதைகளால் பெறப்படும் உண்மை ஏலேலனுடைய நீதிவழுவா நெறியாகும்.ஆதியிலிருந்தே பாரத நாட்டினரும், சிறப்பாகத் தமிழரும் இலங்கையில் ஆதிக்கம் செலுத்தி இருந்தது இதனால் பெறப்படும்.

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இலங்கையில் கல்யாணியை மாணிக்கரட்சிதன் என்ற நாகர் தலைவன்ஆண்டு வந்தான். இவன் விபீடணன் வழியில் வந்தவன் என்பர். இவன் விருப்பத்திற்கிணங்கப் புத்தர் பெருமான் கல்யாணிக்குப் போந்ததாகக் கூறுவர். ஆனால் புத்தர் பெருமான் விந்தியமலைக்குத் தெற்கே சென்றதில்லை என்பது சரித்திர ஆசிரியர்களின் கருத்து. புத்தரின் வருகையைக் கௌரவிக்க மாணிக்கரட்சிதன் இங்கே ஒரு பௌத்த விகாரையைக் கட்டினான் என்பர். பிரம்மாண்டமான புத்தர் சிலை இங்கே படுத்துக் கொண்டிருக்கிறது. காற் புறத்தில் உள்ள தனிச் சந்நிதிகளில் திருமாலும் விபீடணனும் முறையே எழுந்தருளியிருக்கிறார்கள்

தீசனுடைய மனைவியின் சதிக்குப் பயந்து மகாநாமன் தென்னிலங்கைக்கு ஓடி வந்து அங்கே ரொகணாவில் தனியாட்சி நடத்தி வந்தான். இவனுடைய சகோதரன் உதியன் கல்யாணியை ஆண்டு வந்தான். ஏலேலன் காலத்தில் இலங்கை மூன்று பிரிவாக இருந்தது. ராசரதாவின் தலைநகரான அநுராதபுரத்திலிருந்து ஏலேலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சி புரிந்தான். மலையரதாவுக்குக் கல்யாணி தலைநகராய் இருந்தது. அதற்குத் தலைவன் கலனிதீசன். ரொகணரதாவில் காகதீசன் ஆட்சி புரிந்து வந்தான். பின்னர் இருவரும் முறையே மகாநாமன், உதியன் ஆகியோரின் பேரப்பிள்ளைகள். இவர்களிருவரும் ஏலேலன் கீழ்ச் சிற்றரசராக இருந்தனர்.

## கலனிதீசன்

கலனிதீசன் என்ற கல்யாணதீசன் அங்குள்ள விகாரையைப் பெரியதாகக் கட்டினான். அவன் மனைவி அவனுடைய தம்பியுடன் கள்ள நட்பு வைத்திருந்தாள். இதை அறிந்த கல்யாணதீசன் மனைவியைக் கடுமையாக எச்சரித்தான். சந்தேகத்தின் பேரில் ஒரு பௌத்த பிட்சுவை எரியும் எண்ணெய்க் கொப்பறையில் இட்டான். இந்த அநீதியினால் கடல் கொந்தளித்தெழுந்து இலங்கையில் ஒரு பகுதியை விழுங்கிவிட்டது என்று மகாவம்சம் கூறுகிறது,

கடல் கொந்தளித்து நாட்டில் வெள்ளம் பெருகுவதைக் கண்டு மனக் கலக்கம் அடைந்தான் கல்யாணதீசன். தான் பௌத்த குருவிற்கு இழைத்த தீங்கின் எதிரொலியே இந்த விபத்து என்று உணர்ந்து வருந்தினான். இதற்கு ஒரு பரிகாரம் கூறும்படிச் சோதிடர்களைக் கேட்டான். எல்லா இலக்ணகங்களும் பொருந்திய ஓர் இளங்கன்னி தானாக மனமுவந்து கடலரசனுக்குத் தன்னைப் பலியாக இட்டுக் கொண்டால் இந்த விபத்து நீங்கலாம் என்று அவர்கள் கூறினார்கள். ஆனால் அவர்கள் கூறியபடித் தியாகம் செய்ய எந்தப் பெண் தானாக வருவாள் என்று அரசன் சிந்தித்தான். அரசனுடைய ஒரே மகள் தன்னையே பலியாகக் கொடுத்து நாட்டைக் காக்க முன் வந்தாள். அரசனுக்குத் தன் காதுகளை நம்ப முடியவில்லை. புதல்வியைவிட நாடு அவனுக்குச் சிறந்ததன்றோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியில் ஒரு கப்பலில் எல்லா வசதிகளுடனும் அவளை வைத்துக் கடலில் மிதக்க விட்டுவிட்டான் மன்னன். சிறிது நேரத்திற்குள் கப்பல் கண்ணிற் கெட்டிய தூரத்திற்கப்பால் சென்று மறைந்து விட்டது. கடலின் கொந்தளிப்பும் அடங்கி வெள்ளம் வடிந்துவிட்டது. மக்கள் நிம்மதி அடைந்தனர்.

புத்த பகவானைப் பிரார்த்தித்தபடி கப்பலில் நடுக் கடலில் சென்றுகொண்டிருந்த மன்னனின் மகள் தேவி உறங்கிவிட்டாள். விடிந்தவுடன் பார்த்தபோது கப்பல் வேற்று நாட்டின் கரையோரத்தில் ஒதுக்கப்பட்டுத் தன்னைச் சூழ்ந்து பெருங்கூட்டம் இருப்பதைப் பார்த்தாள் நங்கை. அவர்களின் இடையே ரொகணரதா நாட்டின் அரசன் நின்றுகொண்டு தேவியை வரவேற்றான். காகவந்தீசன் என்ற அவ்விளைஞன் தீசன் மரபைச் சேர்ந்தவன். இலங்கையின் ஒருபகுதியாகிய இந்தநாடு சிங்களவர் வசத்திலேயே இருந்தது. தேவியைச் சகல ஆடம்பரங்களுடனும் நகரத்திற்கு அழைத்துச் சென்றான் காகவந்தீசன். அவள் இசைவைக் கேட்டு அவளை மணந்து கொண்டு முடி சூடினான்.

தேவி இறங்கிய இடத்தில் ஓர் அழகிய பௌத்த விகாரையைக் கட்டினான். இந்த இடம் 'கிரிந்த' என்று வழங்கி வருகிறது. இது தீச மகாநாமாவில் உள்ளது. திருமணமாகிச் சில ஆண்டுகளாகியும் பிள்ளையில்லாக் குறை அரசனுக்கு மன வருத்தத்தைத் தந்தது. ஆனால் சிலஆண்டுகள் கழித்து அவன் மனைவி ஓர் ஆண் மகவு பெற்றாள். அந்த மகன் பிறந்தபோது பல நற்சகுனங்கள் ஏற்பட்டன. மலயரதாவிலிருந்து கல்யாணதீசனும்வந்து அந்தக் குழந்தையை ஆசீர்வாதம் செய்தான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துட்ட கெமுனு

இராணிக்கு இரண்டு ஆண்டுகள் கழித்து மற்றொரு ஆண் மகவு பிறந்தது. இரண்டு பிள்ளைகளும் வீரர்களாக வளர்க்கப்பட்டார்கள். பௌத்த பிக்குக்களை ஆதரித்து ஒற்றுமையுடன் இருப்பதாகத் தந்தைக்குஇரண்டு பிள்ளைகளும் வாக்களித்தனர்.

ஏலேலன் சபையில் சிங்களவர் பலர் நல்ல பதவியில் இருந்து வந்தனர். அவர்களுக்கு நல்ல சலுகைகளை அவன் அளித்தபோதிலும் சிங்களவர்களுக்கு அந்நியரின் ஆதிக்கத்துக்கு அடங்கியிருக்கப் பிரியமில்லை. எனவே, அவர்கள் பல சதியாலோசனைகள் செய்து அவன் ஆட்சியைக் கவிழ்க்க முயன்றனர். ஆனால் இதை ஏலேலன் உணர்ந்து கொள்ளவே அவர்கள் காகவந்தீசனிடம் ஓடி வந்து விட்டனர். இளவரசனான கெமுனுவின் மெய்க்காவலராக அவர்கள் அமர்ந்தனர். பெரிய படை ஒன்றைத் திரட்டிக்கொண்டு ஏலேலன்மீது படையெடுத்துச் செல்ல கெமுனு திட்டமிட்டான். நாட்டில் யுத்த ஆயுதங்களைத் தயார் செய்து கொண்டு பெரிய படையொன்றைத் திரட்டினான்.

## துட்ட கெமுனு- கி.மு. 166-கி.மு.137

ஏலேலன் மீது படையெடுத்து யுத்தத்திற்குச் செல்வதைக் காகவந்தீசன் விரும்பவில்லை. அந்த முயற்சியைக் கைவிட வேண்டுமென்று கெமுனுவுக்குக் கூறினான் அரசன். ஆனுல் கெமுனு பிடிவாதமாக இருப்பதைக் கண்டு அவனைச்சிறைப்படுத்தவிரும்பினான்அரசன்.இதை ஒற்றர்மூலம் அறிந்த கெமுனு காட்டிற்கு ஓடிவிட்டான். அவனேத் துஷ்ட கெமுனு என்று அரசன் அழைத்ததால் அப்பெயர் அவனுக்கு நிலைத்துவிட்டது. காட்டிலிருந்த காலத்திலும் துட்ட கெமுனு தன் முயற்சியைக் கைவிடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறிருக்கக் காகவந்தீசன் மன நோயால் இறந்து விட்டான். அவனுடைய இரண்டாவது மகன் தீசன் அப் போது திகவாபியில் இருந்தான். தந்தையின் மரணச் செய்தியைக் கேட்டு அவன் மகாகமைக்கு வந்து அரச னுக்குச் செய்ய வேண்டிய அந்திமக் கிரியைகளைச் செய்து முடித்து ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டான். மூத்தவன் இருக்க இளையவன் முடி சூடலாகாதென்று பிட்சுக்கள் மறுத்து பேசியும் தீசன் கேட்கவில்லை.

சில நாள் கழித்துத் தந்தை இறந்ததைப் பற்றியும், தம்பி மகாகமையில் முடி சூடிக் கொண்டதைப் பற்றியும் துட்டகெமுனு கேள்விப்பட்டான். உடனே மகாகமைக்கு விரைந்து வந்தான். ஆனால் அதற்குள் தீசன் திகவாபிக் குச் சென்றுவிட்டான். தமையனுக்கு ஆட்சியை விட்டுக் கொடுக்க அவன் விரும்பவில்லை. துட்டகெமுனுவுக்குத் துணையாக நாட்டுப்படைகள் அண்ணன் தம்பிகளுக்குள் ஏற்பட்ட கலகத்தில் கலந்துகொள்ள விரும்பவில்லை. எனவே, காட்டில் திரட்டி வைத்திருந்த படையுடன் தீசனைச் சென்று எதிர்த்தான் துட்டகெமுனு. ஆனால் போரில் தோற்றோடிக் காட்டிற்குள் மறைந்துவிட்டான்.

சில நாள் கழித்து மீண்டும் ஒரு பெரும் படையுடன் சென்று தம்பியை எதிர்த்தான் துட்டகெமுனு. தம்பியை நெடுந்தூரம் விரட்டியடித்துத் தோற்றோடச் செய் தான். பௌத்த விகாரைக்குள் சென்று புகுந்துகொண் டான் தீசன். அவனை அங்கே சென்று தாக்க துட்ட கெமுனு விரும்பவில்லை. ஆனால் தீசன் தன் குற்றங் களை உணர்ந்து அண்ணனிடம் மன்னிப்பு வேண்டினான். பௌத்த பிட்சுக்களும் அவனை மன்னித்துவிடும்படித் துட்டகெமுனுவுக்குக் கூறினர். முடிவில் துட்டகெமுனு தம்பியை மன்னித்து அவனைத் தன்னுடன் வைத்துக் கொண்டான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களவர்களிடம் நாட்டுப்பற்று வெறியையூட்டிக் கிராமங் கிராமமாகப் பிரசாரம் செய்தான் துட்ட கெமுனு. இதன் பயனாகப் பெரிய சேனையை அவன் திரட்டினான். அக்காலத்தில் இலங்கையின் வேந்தர்கள் திருமாலையும் முருகனையும் தங்களைக் காக்கும் தெய்வங்களாகக் கருதி வழிபட்டு வந்தனர். இந்தத்தெய்வங்களின் ஆசியுடன் பெருத்த சைனியம் பின் தொடர ஏலேலனின் இராச்சியத்தின்மீது சென்றான் கெமுனு. வழியில் படைகள் செல்லச் சரியான பாதையின்மையால் காட்டை அழித்து அங்கங்கே பாதைகள் உண்டாக்கிக்கொண்டு மேலே சென்றனர். மகாவலி கங்கையின் வடபுறம் ஏலேலன் ஆதிக்கத்தில் இருந்தது. அங்கே கரையின் வட புறத்தில் மகியங்களைக் கோட்டை இருந்தது, இதைத் திடீரென்று தாக்கிக் கைப்பற்றினான் கெமுனு. ஏலேலன் படைகள் பின்வாங்கிச் சென்றன.

இதற்கப்பால் கச்ச ஆதித்தன் கோட்டை கெமுனுவிற்குப் பலத்த எதிர்ப்பைக் காட்டியது. பல நாட்கள் முற்றுகை நடந்தும் வெற்றி கிட்டுவதாக இல்லை. எனவே கெமுனு ஒரு சூழ்ச்சி செய்தான். கோட்டையின் தளபதிக்குத் தன் தாயை இரண்டாவது மணம் முடிப்பதாகத் தூதனுப்பினான். தமிழ்த் தளபதி கெமுனுவின் பேச்சை மெய்யென்றெண்ணி அவனிடம் பேச வந்தான். திடீரென்று அவனைத் தாக்கிக் கொன்று கோட்டைக்குள் ஆட்களைப் புக வைத்துச் சதியினால் வெற்றியடைந்தான் கெமுனு. கெமுனுவின் வீரச் சரித்திரத்தில் இச்சதிச் செயல் ஒரு களங்கமாக நிலைபெற்று நின்றுவிட்டது.

அதன் பின்னர் சிங்களவர் படை சிறிது சிறிதாக முன்னேறி விசிதபுரக் கோட்டையை அடைந்தது. அநுராதபுரத்திற்குத் தெற்கில் கோண நதிக் கரையில் இருந்த இந்தக் கோட்டை மிகப் பலம் வாய்ந்ததாய் எதிரிகளால் அணுக முடியாததாயிருந்தது. சிங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் படை இக் கோட்டையைத் தாக்கியபோது அவர்கள் பக்கலில் பலத்த சேதம் ஏற்பட்டது. எனவே, துட்டகெமுனுவுக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை. தன் படைகள் சென்று தாக்கியவுடன் தமிழரின் எதிர்த் தாக்குதலுக்கு முன் பின்னடைய வேண்டியிருந்தது. ஒற்றர்களை அனுப்பி உளவறிந்ததில் வட புறம் பாதுகாப்புஅதிகமில்லை என்று உணர்ந்தான் துட்ட கெமுனு. எனவே, படையெழுச்சி முயற்சியில் தோல்வியுற்றுத் திரும்பிச் செல்வது போல் பாவனை காட்டி மறுபுறமாக ஆற்றைக் கடந்து வட புறத்தில் தாக்கினான் கெமுனு. இப்பகுதி எளிதில் விழவே கெமுனுவின் படைகள் கோட்டைக்குள் சென்று அதைக் கைப்பற்றிக் கொண்டன.

துட்டகெமுனுவின் வெற்றி இலங்கையின் பல பாகங்களிலும் பரபரப்பை உண்டாக்கியது. சிங்களவர் ஆயிரக் கணக்கில் அவன் படையில் வந்து சேர்ந்து கொண்டனர். இந்தப் படைகள் அநுராதபுரத்தை நோக்கிச் சென்றன. ஏலேலனுக்கு இச்செய்தி எட்டியது. எதிர்த்துவரும் சிங்களவரை மேலும் எதிர்த்துப் போர் புரிவதில் அதிகமான சேதம் விளையும் என்று உணர்ந்தான். எனவே, திடீரென்று ஒரு முடிவுக்கு வந்து துட்டகெமுனுவுக்கு நிருபம் எழுதினான். தங்கள் இருவருடைய ஆதிக்கப் போட்டியின் பயனாக ஆயிரக்கணக்கான மக்கள் பலியிடப்படுவது நியாயமில்லை யென்றும், அந்தப் போட்டியைத் தாங்கள் இருவரும் தனித்தனியாக நின்று போர் செய்து நிலை நாட்டலாம் என்றும் கூறினான்.

இதுஒரு சூழ்ச்சியென்று சிங்களவர் கருதினர். ஆனால் துட்டகெமுனுவுக்கு ஏலேலனுடைய நேர்மையில் அபார நம்பிக்கை உண்டு. உடனே தன்னந்தனியே கோட்டை வாயிலில் யானைமீது வந்து ஏலேலனைச் சந்தித்தான். ஏலேலனும் யானைமீது ஏறிச்சென்று துட்டகெமுனுவுடன் போர் செய்ய ஆயத்தமானான். இருவருடைய யானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் ஒன்றோடொன்று மோதிப் போராடின. துட்டகெமுனுவும் ஏலேலனும் ஈட்டி கொண்டு யுத்தம் புரிந்தனர். பயங்கரமான இந்தப் போரில் ஏலேலன் படுகாயப் பட்டு யானையினின்றும் கீழே விழுந்துவிட்டான். இரு பக்கத்துச் சேனைகளும் இந்த யுத்தத்தை இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தன.

துட்டகெமுனு யானையினின்றும் கீழே குதித்து மகா வீரனாகிய ஏலேலனுக்கு வணக்கம் செலுத்தினான் தரும யுத்தம் செய்ததற்காக அவனைப் போற்றினான் தமிழர்களையும் சிங்களவர்களையும் ஒரே மாதிரியாகப் பாவித்து ஆட்சிபுரிய வேண்டும் என்ற வேண்டுகோளுடன் ஏலேலனை ஆவி பிரிந்தது. துட்டகெமுனு அவ்வாறே வாக்களித்து அதை நிறைவேற்றினான்.

ஏலேலன் இறந்த இடத்திலேயே அவனுக்குச் சவச்சடங்குகள் நடத்தினான். அந்த இடத்தில் ஒரு கல்லறையை நிறுவி அவ்விடம் செல்பவர்கள் பாதரட்சையின்றி நடந்து செல்ல வேண்டுமென்று கட்டளை பிறப்பித்தான். தமிழர்களையும் சிங்களவர்களையும் இரு கண்கள்போல் மதித்து ஆட்சி புரிந்தான். கதிர்காமக் கடவுளுக்கு ஆலயத் திருப்பணி செய்து தமிழர் சிங்களவர் ஆகிய இரு திறத்தாரின் நல்லன்புக்கும் உரியவனாக விளங்கினான் துட்டகெமுனு.

துட்டகெமுனுவைச் சிங்களவர்கள் தங்கள் முதல் வீரனாகக் கொண்டாடுகிறார்கள். ஏலேலன் புதைபட்டதும் போரின் கொடுமைகளை நினைத்துக் கெமுனு வருந்தினான். புத்தருடைய அத்தியை விலையுயர்ந்த பொருள்களுடன் பூமியில் புதைத்து அதற்கு மேல் 270 அடி உயரம் கொண்ட ஒரு தூபியைக் கட்டினான். 1600 கற்றூண்கள் கொண்ட மண்டபம் ஒன்று கட்டி அதன் மேல் பித்தளைத் தகடுகளை வேய்ந்தான். இங்கே ஒன்பதினாயிரம் பிட்சுக்கள் தங்க வசதி அமைக்கப்பட்டது. லோகமாபயா என்பது அத்தூபியின் பெயர். இந்தச் சின்

னங்களைப் பார்த்துக் கொண்டே அவன் உயிர்துறந்தான் என்கிறார்கள். பௌத்த மதத்தில் பற்றுடையவன் போலவே கதிர் காமக் கடவுளிடத்தும் அவன் பக்தி பூண்டிருந்தான். தமிழர்களும் சிங்களவர்களும் இலங்கையில் முன் பின்னாகக் குடியேறியவர்களானபடியால் இருவரையும் ஒன்றாகப் பாவித்து ஆட்சி நடத்தினான். இந்த மனப்போக்கு பிற்காலத்திலும் நிலைத்திருக்கும் என்று அவன் எண்ணினான். நாகத்வீபம் முதலிய தீவுகளில் இருந்த தமிழர்களைப் பகைத்துக் கொள்ள அவன் விரும்பவில்லை.

துட்டகெமுனுவுக்குச் சாலி என்ற ஒரே பிள்ளை இருந்தான். அவன் தந்தையைப்போன்றே வீரனாகவும், அரசியல் தந்திர நுட்பங்கள் அறிந்தவனாகவும் விளங்கினான். ஒரு நாள் காட்டில் வேட்டையாடச் சென்ற அவன் வேட மங்கை ஒருத்தியைக் கண்டு காதலித்தான், அவளுடனே சில நாள் காட்டில் தங்கியிருந்தான். இளவரசனைத் தேடிக் கொண்டு வந்த மன்னனுடைய படையினர் ஆற்றங்கரைக்கு அருகில் காதலியுடன் அவன் அமர்ந்திருக்கக் கண்டனர். உடனே துட்டகெமுனுவிற்கு இந்தச் செய்தியைச் சொல்லியனுப்பினார்கள். இந்தக் காதலை அரசன் ஆதரிக்கவில்லை. ஒரு வேடுவச்சியை மணந்து இலங்கையின் சிங்காதனத்தில் ஏறச் சாத்திரமோ சட்டமோ அனுமதிக்காது. எனவே சாலிக்கும் வேடுவச்சிக்கும் காட்டிலேயே திருமணத்தை நடத்தி அவர்களை அங்கேயே குடி வைத்து விட்டான் மன்னன். தனது தம்பி சத்ததீசனை அரச பதவிக்குப் பிரகடனம் செய்தான். காதலுக்காக முடி துறந்த மன்னன் இலங்கையிலும் ஒருவன் இருந்தான்.

## சத்த தீசன்

சத்ததீசன் துட்ட கெமுனுவிற்குப் பின் அரச பதவி ஏற்றான். அண்ணன் தொடங்கிய ருவான் வெளிசயா என்ற கோபுரத்தை அவன் கட்டி முடித்தான். பௌத்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் நல்லாசியைப் பெற்று நல்ல முறையில் ஆட்சி நடத்தினான். அவனுக்குப் பின் அவன் பிள்ளைகளில் மூத்தவன் அரசுக் கட்டில் ஏறினான். அவனது இரண்டாவது மகன் மூத்தவனைக் கொலை செய்துவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினான். அவனும் பிள்ளையின்றி இறக்கவே மூன்றாவது மகன் பட்டம் எய்தினான். பிரதம மந்திரி இவனைக் கொலை செய்து விட்டு ஆட்சியைத் தான் கைப்பற்றிக் கொண்டான்.

இந்த மந்திரியின் ஆட்சியை ஒழித்துக் கட்ட மக்கள் ரகசியத்தில் ஆலோசித்து வந்தனர்.

அடுத்தபடி நாட்டை ஆளுவதற்கு அரச வமிசத்தில் வாரிசு இல்லை. எனவே, யானையின் கையில் மாலையைக் கொடுத்து அது மாலையிடுபவனை அரசனாக்கத் திட்டமிட்டார்கள். மாலையுடன் யானை காட்டிலுள்ள ஒரு சிறு கிராமத்தை அடைந்தது. அங்கே ஆலமரத்தடியில் பாதிப் பட்டினியால் படுத்துக் கொண்டிருந்த ஒரு சிறுவன் கழுத்தில் மாலையை அணிவித்தது.

யானையின் பின்னால் வந்த வீரர்கள் அனைவரும் திகைத்து நின்றனர். அந்தச் சிறுவன் அவனது தாயுடன் கிராமத்தில் ஒரு சிறு குடிசையில் வசித்து வந்தான். யானை அந்த இளைஞனைத் தன் முதுகின் மேல் ஏற்றிக் கொண்டது. வீரர்கள் அவன் தாய் இருந்த குடிசையை அடைந்ததும் ஆச்சரியத்தால் வாயடைத்துப் போயினர். குடிசையில் இருந்தவள் பிரதம மந்திரியால் கொலை செய்யப்பட்டு இறந்த அரசனின் மனைவி. அவளது புதல்வன் கழுத்திலேதான் யானை மாலையைச் சூட்டியது. பிரதம மந்திரிக்குப் பயந்து தன் சிறு குழந்தையுடன் காட்டிற்கு ஓடிவந்துவிட்டாள் ராணி. இப்போது மகன் பெரியவனாகியிருந்தான். அரச குடும்பத்தில் பிறந்தவனே அரசனாகக் கிடைத்தது பெரும் பாக்கியம் அல்லவா?

பின்னர் மக்களின் இரகசியப் படை அநுராதபுரத்தை நோக்கிச் சென்று அதனைத் தாக்கிப் பிரதம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரியை யமலோகம் அனுப்பியது. விசயன் வம்சத்தில் வந்த இளைஞன் வட்டகாமினி என்ற பெயருடன் சிங்காதனம் ஏறினான்.

## வட்டகாமினி

சில நாட்கள் கழித்துச் சோழ நாட்டிலிருந்து பெரிய படையுடன் சில வீரர்கள் அநுராதபுரத்தை அடைந்தனர். வட்டகாமினியால் அவர்களை எதிர்க்க முடியவில்லை; குழந்தை மகாநாகன், பெரியப்பன் மனைவி அனுலா தேவி, அவளுடைய மகன் ஆகியோருடன் ஓடிவிட்டான். அந்த வீரர்கள் நாட்டைத் தங்களுக்குள் பங்கு போட்டுக்கொண்டு ஆண்டனர். அவர்களுக்குள் ஒற்றுமையின்மையால் ஒருவர் தவிர மற்றவர்கள் சதிச் சூழ்ச்சியால் மாண்டொழிந்தனர்.

காட்டிற்கு ஓடிய வட்டகாமினி தம்புல மலையில் பதினைந்து ஆண்டுகள் தங்கியிருந்தான். அந்தக்காலத்தில் இரகசியமாக ஒரு படையைத் திரட்டிக் கொண்டான். அப்படையைக் கொண்டு அநுராதபுரத்தின் மீது சென்று சோழ வீரனை வெற்றி கண்டு அரச பதவியை மீண்டும் ஏற்றான். இதன் பின்னர் நாட்டில் நல்ல சீர்திருத்தங்களைச் செய்து மக்களை அன்புடன் ஆண்டு வந்தான்.

வட்டகாமினி காட்டிற்கு ஓடியபோது பின் தங்கிவிட்ட அவன் மனைவியைச் சோழ நாட்டு வீரன் தமிழகத்திற்கு அழைத்துக் கொண்டு போய்விட்டான். வட்டகாமினி மீண்டும் பதவி பெற்றதை அறிந்து அவளை இலங்கைக்கு எல்லா மரியாதைகளுடனும் அனுப்பி வைத்தான் அவ்வீரன். இவளுடைய தியாகத்தின் அறிகுறியாக இவள் திரும்பி வந்ததை விளக்கச் சுவனாராமா என்ற பௌத்த விகாரையைக் காட்டினான் வட்டகாமினி. பதினைந்து ஆண்டுகள் தான் தஞ்சம் புகுந்திருந்த தம்புல மலையை, சிற்பங்களையும் வண்ண ஓவியங்களையும் கொண்டு அழகு படுத்தினான். இவற்றைச் செய்ததால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்.

இவனுக்குப் பணமுடை அதிகமாயிற்று. அப்பொழுது காட்டில் வெள்ளிச் சுரங்கம் ஒன்று தெய்வ அருளால் அவனுக்குக் கிடைத்தது.

## அனுலா தேவி

வட்டகாமினிக்குப் பின் அனுலா தேவியின் மகன் மகாசூலன் பட்டம் எய்தினான். ஆறு ஆண்டுகள் ஆட்சி புரிந்து அவன் இறந்து விட்டான். சோம தேவியின் மகன் மகாநாகன் அதன் பிறகு பட்டத்திற்கு வந்தான். இவன் தீய குணங்கள் படைத்தவனாய்ப் பெண்களின் பின் திரிந்து கொண்டிருந்தான். மக்களுக்கு இவன் மீது கடுமையான எரிச்சல் இருந்து வந்தது. இவனுடைய பட்ட மனைவி அனுலா தேவியும் கெட்ட நடத்தை உடையவளாய் விளங்கினாள். அந்தப்புரக் காவலாளி சிவன் என்பவனுடன் இவள் தொடர்பு வைத்துக்கொண்டாள். இது இவள் கணவனுக்குத் தெரிந்து விட்டது அவன் சிவனைக் கொல்ல உத்தரவு பிறப்பித்தான். அதற்கு முன்னரே கள்ளக் காதலனைப் பதுக்கி வைத்து விட்டாள் அனுலா.

அதன் பின்னர் தன் கணவன்மீது அன்புகாட்டத் தொடங்கினாள் அனுலா தேவி. அவனை மயக்கி உணவில் நஞ்சிட்டு மாய்த்தாள் தானே அதன் பின் அரசாள எண்ணினாள் அவள். ஆனால் மந்திரியும் குடிகளும் மகாசூலன் மைந்தன் குடதீசனை அரசனாக்கினர். அவனுக்கும் நஞ்சூட்டி மாய்த்து விட்டாள் அரக்கி. தன் பழைய காதலனான அந்தப்புரக் காவலாளியைத் திருமணம் செய்து கொண்டு நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றாள் அனுலா தேவி. சில நாள் கழித்து அவனையும் யமலோகம் அனுப்பினாள் அனுலா. இவள் பல காதலர்களை நாடி ஒவ்வொருவராக அவர்களை யமலோகம் அனுப்பித் தானே முடிவில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாள். சீரழிந்த இவள் நடத்தையை நாட்டிலுள்ளோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் வெறுத்தனர். ஆனால் இவளை எதிர்க்க முன்வரவில்லை.

குடதீசனுக்குக் குடக்கண்ணதீசன் என்று ஓர் இளைய சகோதரன் இருந்தான். அண்ணன் கொலையுண்டதை அறிந்து தன் உயிருக்குப் பயந்து அவன் பௌத்த சந்நியாசி உடையில் காட்டிற்கு ஓடிவிட்டான். சில ஆண்டுகள் கழித்து நாட்டில் மனக்கசப்பு அதிகமாயிருப்பதை உணர்ந்து பெரும் படையுடன் அநுராதபுரத்தின் மீது படையெடுத்து வந்து ராணியை அவள் வசித்த மாளிகையோடு தீக்கு இரையாக்கினான். பிறகு அரசனாக முடி சூடினான்.

## லம்பகர்ணர்

இவனுக்குப் பின்னால் பக்தி கபயன் என்பவன் பட்டத்திற்கு வந்தான். இவன் பௌத்த மதத்தில் மிகுந்த பற்றுள்ளவன். ருவான் வெளிசயா என்ற ஆலயத்தைச் சுற்றிப் பெரிய பூங்கா வைத்தான். இவனுக்குப் பின் வந்த அரசர்கள் நால்வர் காலத்திலும் குறிப்பிடத் தக்க சம்பவங்கள் நடைபெறவில்லை. கடைசி மன்னன் குல அபயனுக்குப் பின்னால் சிங்காரவல்லி என்ற அவன் சகோதரி பட்டத்திற்கு வந்தாள். அவள் ஆட்சி நீடிக்கவில்லை. அவளுடைய சகோதரன்மகன் ஈழநாதன் என்பவன் அவளைக் கொலை செய்துவிட்டு முடி சூட்டிக் கொண்டான். அவன் காலத்தில் லம்பகர்ணர் என்ற சாதியார் ஆட்சியில் உரிமை கொண்டாடினார்கள். தாங்கள் உயர்ந்தகுலத்தவர்என்று அவர்கள் தங்களைக் கூறிக் கொண்டனர்.

ஈழநாதன் அவர்களிடம் பகைமை பாராட்டி இழிவான கூலி வேலைகளைச் செய்யும்படி அவர்களை அழைத்தான். இதனால் கோபங் கொண்ட லம்பகர்ணர்கள் அவனைத் தாக்கித் துரத்திவிட்டனர். ஈழநாதன் தமிழ் நாட்டிற்கு ஓடி விட்டான். சில காலங் கழித்துப் பெரும் படையுடன் வந்து லம்பகர்ணர்களைத்தோற்

கடித்து மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினான் ஈழநாதன். லம்பகர்ணர்களைக்கடுமையாகத்தண்டிக்க முற்பட்டான். ஆனால் அவன் தாய் குறுக்கிட்டு அவர்களை மன்னித்து விடும்படிக் கூறினாள்.

## சுபா

ஈழநாதனுக்குப் பின் அவன் மகன் சந்தமுக சிவன் ஆட்சிக்கு வந்தான். இவன் சைவ மதப் பற்றுடையவனாய் பல திருப்பணிகள் செய்தான். இவனுடன் பிறந்தவனான யசவாளகதீசன் இவனைத் தந்திரமாகக் கொன்று பட்டத்தைக் கைப்பற்றினான். இவனுக்கு இராச்சிய காரியங்களில் அதிக அக்கறை இல்லை. தன்னுடைய மந்திரியிடமே அக்காரியங்களை நடத்தும்படி விட்டுவிட்டான். அடிக்கடி மாறுவேடம் பூண்டு திரிந்து வருவான். இவனைப்போலவே உருவ ஒற்றுமையுடைய குதிரைக்காரன் சுபா என்பவனை அரசனாக அமர்த்திவிட்டு தான் குதிரைப் பாகன் உடையில் இருப்பான். இது மந்திரிக்குக்கூட தெரியாமல் இருந்தது குதிரைக்காரன் சதிகாரக்கூட்டத்தின் தலைவன். ஒருநாள் அரச உடையில் சபைநடத்தும் போது குதிரைக்காரன் வடிவத்திலிருந்த உண்மை மன்னனைச் சிரச்சேதம் செய்ய உத்தரவிட்டுவிட்டான். உண்மை அரசன் சிரச்சேதம் செய்யப்பட்டு மடிந்தான்.

பின்னால் இதைப்பற்றி அறிந்த இராணியும், மந்திரியும் பயந்து காட்டிற்குள் ஓடி ஒளிந்து கொண்டார்கள். குதிரைக்காரச் சுபா பகிரங்கமாகத் தன்னை மக்களுக்கு அறிவித்துக் கொண்டு ஆட்சி நடத்தினான். அவன் சதிச் செயலை அறிந்திருந்தும் மக்கள் அவனை எதிர்க்கப் பயந்தனர். அவன் மக்களைத் திருப்தி செய்யப் பௌத்த விகாரை பலவற்றைப் புதுப்பித்தான். பௌத்த சங்கத்தின் ஆதரவு அவனுக்கு அதன் பயனாகக் கிடைத்தது.

## வசபா

சுபாவிடம் லம்பகர்ண வமிசத்தைச் சேர்ந்த தளபதி ஒருவன் இருந்தான். அவனுக்கு வசபா என்ற மருமகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தான். சோதிடர்கள் அந்த வசபாவே ஆட்சியைக் கைப்பற்றிச் சிங்காதனம் ஏறுவான் என்று சுபா மன்னனுக்குக் கூறினர். வசபாவைத் தன்னிடம் அனுப்பும்படி மன்னன் தளபதிக்குக் கூறினான். ஆனால் தளபதியின் மனைவி வசபாவை எச்சரித்து ஓடிவிடும்படிக் கூறினாள். வசபா பௌத்த சங்கத்தினரிடம் சரண் புகுந்தான்.

சோதிடர்கள் கூறிய செய்தியைப்பற்றி அறிந்து கொண்ட வசபா தான் உண்மையிலேயே ஆட்சி புரிய விரும்பினான். அடிக்கடி அரசனின் படைகளைத் தாக்கி மறைமுகமாக நாட்டில் குழப்பத்தை உண்டுபண்ணி வந்தான். கீழ்ச் சாதிக்காரன் தங்களுக்கு அரசனாக இருப்பதை மக்கள் விரும்பவில்லை. இந்த வெறுப்பைப் பயன்படுத்திக்கொண்டு வசபா பெரியசேனையுடன் சுபாவைத் தாக்கினான். சுபாவும் அவன் நண்பர்களும் போரில் மடிந்தனர். லம்பகர்ண வமிசத்து வசபா முடி சூடினான்.

வசபா கி.பி.124—168 வரை நாற்பத்து நான்கு ஆண்டுகள் நல்ல முறையில் அரசாண்டான்என்கிறார்கள். இவன் காலத்தில் நாட்டில் அமைதி நிலவி மக்களுக்கு நிரந்தரமான ஆட்சி ஏற்பட்டது. இவன் தனக்கு உதவி செய்த மாமன் மனைவியையே மணந்து கொண்டான். வசபா பௌத்த விகாரைகளைப் புதுப்பித்தான். மதத்தில் மிகுந்த பற்றுடையவனாய் விளங்கினான். தனது போர்ச் செயல்களுக்கு வருந்திப் பிராயச்சித்தங்கள் செய்தான். பௌத்த சந்நியாசி போல் காலங்கழித்தான்.

## வங்க நாசிகன்

இவனுக்குப் பின் இவன் மகன் வங்கநாசிகன் அநுராதபுரியை ஆண்டு வந்தான். இவன் காலத்தில் மக்கள் ஆன்மீகத் துறையில் ஈடுபட்டவராய் இருந்ததன் பயனாக இராணுவத்தில் அதிகப்படியான அக்கறை காட்டவில்லை. தமிழகத்திலிருந்து வந்த ஒரு கொள்ளைக் கூட்டம் அநுராதபுரத்தை இடித்துத் தரை மட்டம் ஆக்கியது. வங்கநாசிகன் ஓடி விட்டான். ஊரைக் கொள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிட்டு அகப்பட்டதைச் சுற்றிக் கொண்டு பன்னீராயிரம் சிங்களவர்களைக் கைதியாக உடனழைத்து நாட்டிற்குத் திரும்பிவிட்டனர். இக் கொள்ளைக்காரர்கள். இவ்வாறு இலங்கையில் மறு முறையாகக் குழப்பம் நிறைந்திருந்தது.

## கயவாகு

வங்கநாசிகத் தீசனுக்குப் பின் இலக்கியப்புகழ் பெற்ற கயவாகு பட்டத்திற்கு வந்தான். சிங்களவர்கள் பன்னீராயிரவரைச் சோழ நாட்டு வீரர்கள் கைதிகளாகக் கொண்டு போனதை அறிந்து சோணாட்டின் மீது படையெடுத்துச் சென்றான். சிங்களவர்களை மீட்டுக்கொண்டதோடு நில்லாமல் பன்னீராயிரம் தமிழ் வீரர்களையும் கைதியாகக் கொண்டு வெற்றி வீரனாக இலங்கைக்குத் திரும்பினான் என்று கூறுகிறார்கள். இதற்குத் தென்னிந்திய சரித்திரத்தில் ஏதும் ஆதாரம் கிடையாது. இலங்கை வரலாற்று ஆசிரியர் சிலரும் இதை மறுத்துள்ளனர்.

இமய மலையிலே கல்லெடுத்து அதைக் கங்கையிலே நீராட்டிக் காவிரிப்பூம்பட்டினத்தில் கண்ணகி தேவி (பத்தினித் தெய்வம்)க்குக் கோயிலெடுத்தான் சேரன் செங்குட்டுவன். அந்த விழாவில் கடல் சூழ் வேந்தன் கயவாகு கலந்து கொண்டானென்று சிலப்பதிகாரம் கூறுகிறது. தமிழ் நாட்டுடன் உறவினனாகவே இருந்தான் என்பது இதனால் பெறப்படும்.

இலங்கையில் பத்தினித் தேவிக்குக் கோயில் எடுத்து வழிபட்டான். அதற்காக ஆண்டுதோறும் ஒரு விழா நடத்தி வந்தான். 'பொகாரா' என்ற தேசீயத் திருவிழா ஒன்றை ஆண்டுதோறும் அநுராதபுரத்தில் கொண்டாடினான். புத்தரின் நினைவாக நடத்தப்பட்ட திருவிழாவே அது என்கிறார்கள். தனது தாயின் வேண்டுகோளுக்கிணங்கி அநுராதபுரத்தை அடுத்துள்ள கதம்பவனச் சோலையில் ஒரு தாது கோபுரத்தைக் கட்டினான். அதற்கு மகாவிகாரை என்று பெயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கபோதி

கயவாகுவுக்குப் பின் ஒன்றரை நூற்றாண்டு வரை பல மன்னர்கள் ஆண்டார்கள். இரண்டாவது விசயன் காலத்தில் சங்கதீசன், சங்கபோதி, கோட்டாபயன் என்ற மூவர் சதியாலோசனை செய்து அவனைக் கொன்றனர். சங்கதீசன் நான்கு ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். கோட்டாபயன் அவனைக் கொலை செய்துவிட்டுச் சங்கபோதியை அரசனாக்கினான்

சங்கபோதி பௌத்த மதத்தில் பற்றுடையவன். புத்தரின் கொள்கைகளை வைராக்கியத்துடன் கடைப்பிடித்து வந்தான் அவனுக்கு ஆட்சியின்மீது விருப்பமில்லை; கோட்டாபயனது பிடிவாதத்தின் பேரில்தான் அரசேற்றான். புத்த தர்மத்தின் அடிப்படைக் கொள்கைகளான 'அட்டசீல'த்தை அநுசரித்து ஆட்சிபுரிய விரும்பினான். 'கொல்லாமை' அட்டசீலக் கொள்கைகளில் மிக முக்கியமானது. சங்கபோதி குற்றவாளிகளையும் தண்டிக்க மறுத்தான். இதனால் நாட்டில் குற்றங்களும் கொலைகளும் அதிகரித்தன. அரசாங்க நிர்வாகத்தில் மதக் கொள்கைகளைப் புகுத்தியதன் பயனைச் சீக்கிரத்தில் அறிந்துகொண்டான் சங்கபோதி.

அவன் காலத்தில் பெரிய பஞ்சம் ஒன்று உண்டாயிற்று. மழையின்மையால் மக்கள் உணவின்றிப் பட்டினியால் வாடினர். தான் சத்தியமாக அட்டசீலத்தை அநுட்டித்திருந்தால் மழை பொழிய வேண்டுமென்று சங்கல்பம் செய்துகொண்டு ரூவான் வெளிசயா தாதுகோபுரத்தின்மேல் படுத்து மூன்று தினங்கள் பட்டினி கிடந்தான். மூன்றாவது நாள் மழை பொழிந்து நாடு வளம் பெற்றது என்று மகாவம்சம் கூறுகிறது.

செங்கண் நோய் என்ற கொடிய வியாதி நாட்டில் பரவி மக்களைத் துன்புறுத்தியது. யட்சிணியைத் திருப்தி செய்ய பலி கொடுத்தால் இந்நோய் தீரும் என்று கூறவே, சங்கபோதி நாட்டில் பலி கொடுக்கும் வழக்

கத்தை ஆதரித்தான் என்று கூறுகிறார்கள். அட்ட சீலத்தை அநுட்டித்த சங்க போதி உயிர்ப் பலி கொடுப்பதை ஆதரித்திருக்கமாட்டான் என்பது சிலர் கருத்து. விழா எடுத்து யட்சிணியை வழிபட்டதாகக் கொள்வர்.

அவனுடைய தரும இராச்சியத்தில் மக்கள் கொலையும் கொள்ளையும் புரிந்தனர். கோட்டாபயன் இந்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்து அநுராதபுரியின் மீது படையெடுத்துச் சென்றான். யுத்தத்தினால் இரு பக்கமும் உயிர்ச்சேதம் நேரும் என்று உணர்ந்த சங்கபோதி சண்டை செய்யாமல் நாட்டை விட்டுச் சீயன் கோறளையிலுள்ள அத்தனகல்லிக்கு ஓடி விட்டான்.

அதன் பின் கோட்டாபயன் மேகவர்ணன் என்று பட்டப்பெயர் பூண்டு கி. பி. 254-இல் சிங்காதனம் ஏறினான். ஆனால் சங்கபோதி உயிர் இருக்கும் வரை தனது ஆட்சிக்கு ஆட்டந்தான் என்று அறிந்தான். ஆகவே, அவன் தலையைக் கொணர்பவருக்குப் பெரும் பரிசளிப்பதாக வாக்குறுதி கொடுத்தான். சங்கபோதியின் சாயலையுடைய பலபேர் தலைகள் உருண்டன. தலைவெட்டிகளுக்குப் பரிசு கிடைக்கவில்லை. அவை சங்க போதியின் தலையல்ல என்று அவர்களைத் துரத்திவிட்டான் கோட்டாபயன். தன்னால் பல தலைகள் உருளுவதைக் காட்டிலிருந்த சங்க்போதி ஓர் ஏழைக் குடியானவன் மூலம் அறிந்தான். தானே சங்கபோதி என்று அறிவித்துத் தன் தலையை வெட்டி எடுத்துச் சென்று கோட்டாபயனிடம் அளித்துப் பரிசுபெற்று வறுமை நோய்களையும்படிக் குடியானவனுக்குக் கூறினான் சங்கபோதி. அவன் தலையை வெட்டியெடுத்துச் சென்று அரசனுக்குக் காட்டிப் பரிசு பெற்றான் குடியானவன்.

இந்தச் செயலுக்குப்பின் கோட்டாபயன் முற்றும் மாறிவிட்டான். சங்கபோதியின் தலையைக் கொய்தது பற்றி அவனுக்கு அநுதாபமும் பாவ உணர்ச்சியும் ஏற்பட்டன. காட்டில் சங்கபோதியின் தலை கொய்யப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் அவனை அடக்கம் செய்து அதன்மீது பெரிய தாதுகோபுரம் எழுப்பினான், அதற்கு அத்தனகல்லி சமாதி என்று பெயர். அது இரண்டடுக்கு மாடி.

தன் பாவத்தைக் கழுவிக்கொள்ளப் புத்த சங்கத்தைச் சரணமடைந்தான் மன்னன். புனித போதி மரத்தைச் சுற்றிக் கல்சுற்று அமைத்தான். தினமும் பல பிக்குகளுக்குப் போசனம் அளிக்க ஏற்பாடு செய்தான்.

## வைதூலிய மதம்

இலங்கையில் மகிந்தனுடைய பௌத்த மதக் கொள்கைகள் ஆதியில் பரவியிருந்தன. இதற்குத் தலைமைக் குருபீடம் மகாவிகாரை. கி. பி. 29-இல் வட்ட காமினி அபயன் அநுராதபுரிக்குத் தெற்கே அபயகிரி விகாரையைக் கட்டினான். மகாவிகாரையில் பிட்சுக்களுக்குக் கட்டுப்பாடுகள் அதிகம். அந்தக்கட்டுப்பாடுகளை விரும்பாத பௌத்த பிட்சுக்கள் அபயகிரி விகாரைக்குச் சென்று புதிய கோட்பாடுகளைப் போதித்தனர். இந்த நெறி வைதூலிய பௌத்தம் எனப்படும். வட்டகாமினி காலத்தில் ஏற்பட்ட பிளவு நாளடைவில் அதிகமாகிக் கோட்டாபயன் காலத்தில் தீவிரமாகக் குமுறிக் கொண்டிருந்தது.

கோட்டாபயனுக்குத் தெத்துதிசன், மகாசேனன் என்னும் இரண்டு புதல்வர்கள் இருந்தனர். சங்கமித்திரன் என்பவன் அவர்களுக்கு ஆசிரியனாக இருந்தான். அவன் வைதூலிய மதத்தை ஆதரித்து வந்தான். ஆனால் தெத்துதீசன் வைதூலிய மதத்தை வெறுத்தான்.

## தெத்துதீசன்

கோட்டாபயன் இறந்ததும் மகாசேனனை அரசனாக்க அபயகிரி விகாரையினர் சதியாலோசனை செய்தனர். சங்கமித்திரன் இதற்குத் தலைமை வகித்தான். சதியாலோசனையை முறியடித்துத் தெத்துதீசன் முடிசூடினான். சங்கமித்திரன் பாரத நாட்டிற்கு ஓடிவிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டான். தெத்துதீசன் வைதூலிய மதத்தினரின் மீது பழி வாங்க அம்மதக் குருக்கள் பலரைக் கொலை செய்து கொடுமைப்படுத்தினான். அடியோடு அம்மதத்தை இலங்கையிலிருந்து தொலைத்துவிடத் திட்டமிட்டான். பழைய பௌத்த மதத்தை ஆதரித்துப் பல நல்ல காரியங்கள் செய்தான்.

## மகாசேனன்

பத்து ஆண்டுகள் ஆட்சி புரிந்தபின் அவன் இறந்தான். அவனுக்குப் பின் மகாசேனன் பட்டத்துக்கு வந்தான். இதை அறிந்ததும் பாரதத்துக்கு ஓடி விட்ட சங்கமித்திரன் இலங்கைக்குத் திரும்பி வந்துவிட்டான். மகாசேனனுடைய ஆதரவுடன் மகாவிகாரையில் உள்ளவர்களைக் கொடுமைப்படுத்தினான். விகாரையையே அழிக்க அவன் முற்பட்டபோது மக்கள் வெகுண்டு எழுந்தனர். அரசனுடைய மந்திரிகளில் ஒருவனே எதிரிகள் பக்கம் சேர்ந்து விட்டான். பெரும் படையைத் திரட்டிக் கொண்டு அரசன் மீது எதிர்த்து வந்தான். சங்கமித்திரன் கொலை செய்யப்பட்டான். அரசன் திகிலடைந்து தவித்துக் கொண்டிருந்தான். மந்திரி அரசனுக்கு நல்ல புத்தி கூறி மக்கள் ஆத்திரம் நியாயமானது என்று தெரிவித்தான்.

அதன் பின்னர் இடிக்கப்பட்ட செம்பு மாளிகையைப் புதிதாகக் கட்டி பழுதடைந்த விகாரைக்ளைப் புதுப்பித்தான். வேளாண்மையை விருத்தி செய்தான். பழைய மதத்துப் பௌத்த குருமார்களிடமிருந்து அபகரித்துக் கொண்ட நிலங்களைத் திரும்ப அளித்துவிட்டான். விவசாயத்துக்கு அநுகூலமாகப் பல ஏரிகளையும் குளங்களையும் வெட்டினான். காரகங்கை என்னும் ஆற்றில் 60 அடி உயரமும் 1320 அடி நீளமுமுள்ள பலமான அணை கட்டி நீர்த்தேக்கம் ஒன்று உண்டாக்கினான். இதற்கு மின்னேரியா என்று பெயர். இது இருபது மைல் சுற்றளவுடையது. கந்தளாய் என்ற மற்றொரு நீர்த்தேக்கத்தையும் இவன் கட்டினான். இத்தேக்கத்தின் மீது நீர் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குப் பாய்ந்து நாட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளப்படுத்தியது. இவையேயன்றிப்பதினான்கு வேறு நீர்த் தேக்கங்களையும் இவன் உண்டாக்கினான. எல்லாம் தானே நேரில் கண்காணித்து வந்தான். மக்கள் இவற்றை பெரிதும் பாராட்டி இவனுக்குக் கோயில் எடுத்தனர்.

மகாசேனன் கி. பி 304இல் இறந்தான். அவனோடு 'மகாவம்சம்' என்ற கலப்பில்லாத சிங்களவர் ஆட்சி முடிவு பெறுகிறது. மகாசேனனோடு விசயனுடைய சந்ததி முடிவு பெறுகிறது. சுமார் அறுபத்து நான்கு அரசர்கள் விசயன் காலத்திலிருந்து மகா சேனன் காலம் வரை ஆண்டார்கள் எனப்படுகிறது. சீருடனும் சிறப்புடனும் வெற்றி வீரர்களாக ஆட்சி புரிந்த விசயன் வம்சத்தை மகாவம்சம் என்று கூறியதில் தவறில்லை.

## சுலு வம்சத்து அரசர்கள்

மகாசேனனுக்குப் பின் இலங்கையை ஆண்டவர்கள் சுலு வம்சத்தார்கள். இவர்கள் காலத்தில் இலங்கை தனது பழம்பெருமையை இழந்து அந்நியர் ஆட்சிக்கு உட்பட்டது. இவர்களை அதன் பொருட்டுத் தாழ்ந்த வகுப்பினர் என்று கருதிச் சுலு வம்சத்தார் என்று அழைத்தனர்.

## புத்த தந்தம்

மகாசேனனுக்குப்பின் அவன் மகன் மேகவர்ணன் (கி.பி. 304—332 வரை) ஆட்சி புரிந்த ான். இவன் காலத்தில் புத்த தேவருடைய பல் ஒன்று இலங்கையில் பிரதிட்டை செய்யப்பட்டது. புத்த பகவான் இறந்தபின் அவரை எரித்தபோது உடலில் பல எலும்புகளும், பற்களும் கிடைத்தன. அவற்றைப் புனிதச் சின்னங்களாக மக்கள் வழிபட்டு வந்தனர். அச்சின்னங்களுள் புத்தரின் பல் ஒன்று கலிங்க தேசத்தரசனுக்குக் கிடைத்தது. அதை அவன் ஓர் ஆலயத்தில் வைத்து வழிபட்டு வந்தான். கலிங்கத்தின் மீது படை எடுத்து வந்த மாற்றரசன் அப் பல்லை அபகரிக்கப் பார்த்தான். ஆனால் கலிங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன் முன் ஏற்பாட்டுடன் அப்பல்லைப் பத்திரமாகத் தன் மகள் மூலமாக இலங்கைக்கு அனுப்பி விட்டான். அரசன் மகள் ஒரு பௌத்த பிட்சுணிபோல் வேடம் பூண்டு பல்லைத் தன் கூந்தலில் மறைத்து வைத்துக் கொண்டு இலங்கைக்குச் சென்று மேகவர்ணனிடம் அதை அளித்தாள்.

மேகவர்ணன் அந்தத் தந்த சேடத்தை மரியாதைகளுடன் பெற்றுக்கொண்டான். அதைச் செப்புப்பெட்டகத்தில் வைத்து அழகிய ஆலயம் ஒன்றில் பிரதிட்டை செய்தான் மேகவர்ணன். தந்த மாளிகை என்ற அந்த ஆலயம் கண்டியில் புத்தரின் நினைவுத் தூபியாக இப்பொழுது எல்லோராலும் வணங்கப்பட்டு வருகிறது. அந்த ஆலயத்திற்கு மானியமாக பல ஏக்கர் நிலங்களைக் கொடுத்தான் மன்னன். ஆண்டுதோறும் நடக்கும் திருவிழாவன்று அந்தத் தந்தம் எல்லாச் சிறப்புடனும் அபயகிரிவிகாரைக்கு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படும். பல மதச் சடங்குகளை அப்போது நடத்துவார்கள். அந்தத் தந்தத்தை உடையவனே இலங்கையின் அரசனாவான் என்று கூறுவர்.

அறுநூறு ஆண்டுகட்கு முன் தமிழரசன் வந்து அந்தத் தந்தத்தைக் கொள்ளையடித்துச் சென்றானென்றும் இலங்கை மன்னன் வேண்டுகோளுக்கிணங்கி அதைத் திருப்பிஅளித்துவிட்டானென்றும் கூறுகிறார்கள். போர்த்துக்கீசியர் கையில் அந்தத் தந்தம் பிற்காலத்தில் அகப்பட்டதென்றும் அதை அவர்கள் எரித்துவிட்டார்களென்றும் ஒரு வரலாறு உண்டு. ஆனால் கைப்பற்றப்பட்டது புத்தரது தந்தமல்ல என்பது ஒரு சாரார் அபிப்பிராயம். அது இலங்கையில் இன்று கண்டியிலுள்ள தந்த மாளிகையில் இருப்பதாகவே கருதிப் பௌத்தர்கள் வழிபட்டு வருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்த தாசன்

மேகவர்ணனுக்குப் பின் அவன் சகோதரன் இரண்டாவது தெத்துதீசன் பட்டத்துக்கு வந்தான். இவன் கலை ஆர்வம் கொண்டவன். புத்த ஆலயங்களிலும், மடங்களிலும் சிற்பங்களையும் சித்திரங்களையும் நிறைத்தான். இவனுக்குப்பின் இவன் மகன் புத்ததாசன் கி. பி. 341இல் பட்டத்துக்கு வந்தான். இவன் மருத்துவ சாத்திரத்தில் நிபுணன். கொடிய வியாதிகளை எளிதில் குணப்படுத்தினான். இவன் ரண சிகிச்சை செய்வதிலும் வல்லவன்; மிருகங்களுக்குச் சிகிச்சை செய்வதிலும் நிபுணனாய் விளங்கினான்.

ஒரு சமயம் நாகப்பாம்பு ஒன்று உடல் வீங்கிப் புற்றுக் கருகில் படுத்துக் கொண்டிருந்தது. அவ்வழியே சென்ற மன்னன் அதனை நிதானமாக இருக்கும்படிக்கூறிக் கத்தியால் உடலில் ஒரு பகுதியைக் கீறி ரண சிகிச்சை செய்தான். தன் நன்றியைத் தெரிவிக்க நாகம் அரசனுக்கு ஒரு மாணிக்கத்தைக் காணிக்கையாகத் தந்தது. ஒருவனுடைய கபாலத்தைப் பிளந்து அதனுள் மூளையைத் தின்று கொண்டிருந்த பிராணியை வெளியேற்றி மீண்டும் கபாலத்தைப் பொருத்தி அவனுக்குக் குணம் அளித்தான் அரசன் என்று ஒரு கதை வழங்குகிறது.

நாடு முழுவதும் மருத்துவச் சாலைகள் ஏற்படுத்தி ஒவ்வோரிடத்திலும் ஒரு வைத்தியனை நியமித்தான். மிருக வைத்தியசாலைகளும் ஏற்பாடு செய்தான் 'சாரார்த்த சங்கிரகம்' என்ற மருத்துவ நூலை எழுதி அதில் சிகிச்சை முறைகளை நன்கு விளக்கினான். அங்கவீனர்களுக்கும் அநாதைகளுக்கும் ஆதுலர் சாலைகள் ஏற்படுத்தினான்.

பாலி மொழியில் இருந்த புத்தமதப் பாடல்களைச் சிங்களத்தில் மொழி பெயர்ப்பித்தான். மதப்பற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம் உடையவனாதல்பற்றிப் புத்தாசன் என்றுபெயர் பெற்றான். மகா விகாரையைப் பெரியதாக்கி அதில் மயூராச்சிரமம் என்ற பகுதியைப் பிட்சுக்களுக்கெனத் தனியே ஒதுக்கினான். பல மானியங்களை மடங்களுக்கு எழுதி வைத்தான். மக்களின் உடற் பிணியையும் உள்ளப் பிணியையும் தீர்க்க முன் வந்த அவனைத் தெய்வமாக மக்கள் கொண்டாடினார்கள்.

## பாகியான்

புத்ததாசனுக்குப் பின் அவனுடைய மூத்த மகன் இரண்டாம் உபத்தீசன் அரசனானான். இவன் மதப் பற்றுடையவனாய் நல்ல முறையில் ஆட்சி புரிந்து வந்தான். இவன் இளைய சகோதரன் மகாநாகன் இவனைக் கொன்று விட்டு ஆட்சியைக் கைப்பற்றினான். இவன் கி.பி. 412-434 வரை அரசாண்டான். இவன் காலத்தில்தான் பாகியான் என்ற சீனயாத்திரிகர் இலங்கைக்கு வந்தார்.

பௌத்த மதம் சீனாவில் பரவியது. அந்நாட்டவர் பெரும்பாலோர் இம்மதத்தைத் தழுவினர். பாகியான் என்பவர் சீன தேசத்தில் பௌத்த மதத்தைத் தழுவிய பேரறிஞர்; பௌத்த புண்ணியத் தலங்களைத் தரிசிக்கவும், மதக் கொள்கைகளை அறியவும் பாரத நாட்டிற்குப் போந்தார். தம்முடைய யாத்திரைக் குறிப்புகளை அவர் நல்ல முறையில் எழுதி வைத்தார். நம்முடைய தேச சரித்திரத்தின் கால நிர்ணயத்திற்கு அவர் நூல் பேருதவி புரிந்துள்ளது. பாரதத்தைச் சுற்றிய பிறகு அவர் இலங்கையைக் கப்பலில் அடைந்தார். இரண்டு ஆண்டுக் காலம் அநுராதபுரத்தில் தங்கியிருந்து பௌத்த நூல்களின் பிரதியைக் கையால் எழுதிக் கொண்டார். அவர் காலத்தில் இலங்கையில் அறுபதினாயிரம் குருமார்கள் இருந்தனர் என்று அவர் கூறுகிறார். இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் அரசன் பௌத்த மதத்தில் மிகவும் பற்றுடையவ னாய் இருந்தான். மத குருமார்கள் மாதம் மூன்று முறை பௌத்த மதக் கோட்பாடுகளை மக்களுக்கு உபந் நியாசம் செய்வார்கள். அவர் காலத்தில் அறு நூறு வய துடைய போதி மரம் அங்கே இருந்தது. புத்த தந்தத் துக்கு விழாக்கள் ஆண்டுதோறும் சிறப்பாக நடை பெற்றன.

அநுராதபுரம் அழகான வீதிகளும் உயர்ந்த மாடங் களும் நிறைந்த ஊராக விளங்கியது. சிங்களவர் மதப் பற்று உடையவர்களாகவும் நேர்மையுடையவராகவும் இருந்தனர். புத்தருடைய 3) அடி உயரங் கொண்ட சிலை அரபயகிரி விகாரையில் இருந்தது. இலங்கையின் செல்வச் சிறப்பைப்பற்றியும் பாகியான் கூறியுள்ளார். அவர் கி. பி. 413ஐ ஒட்டி இலங்கைக்குப் போந்தார் என்பர்.

## புத்தகோசர்

பாகியானுக்குப் பின்னால் பாரத நாட்டில் மகத தேசத்திலிருந்து புத்தகோசர் என்ற அந்தணர் இலங் கைக்கு வந்தார். இவர் பேச்சின் வன்மையால் மதத்தை தர்க்க ரீதியில் மக்களுக்கு உபதேசம் செய்தார். புத்த ருடைய தொனியைப்போன்றே இவர் பிரசங்கங்கள் இருந் தமையால் இவருக்குப் புத்தகோசர் என்று பெயர் உண் டாயிற்று. மகேந்திரனுடைய உபதேசங்களைச் சிங்கள மொழியில் அக் காலத்தவர் எழுதி வைத்திருந்தார்கள். புத்தகோசர் அவற்றைப் பாலி மொழியில் பெயர்த் தெழுதினார். மூல நூல்களுக்கு இவர் பல வியாக்கி யானங்கள் செய்தார். புத்தருடைய கொள்கைகளைச் சுருக்கமாக 'விசுத்தி மார்க்கய' என்ற நூலில் விளக்கியுள் ளார். இலங்கையில் பௌத்த மதம் வேரூன்றக் காரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக இருந்தவர் இவரே என்பர். பின்னர் பாரத நாட்டிற்குத் திரும்பினார் புத்தகோசர்.

## சிகிரி

தம்பள்ள (டாம்புல்லா)யிலிருந்து வட கிழக்கே பதினெட்டு கி.மீட்டரில் சிகிரி இருக்கிறது. இதன் பெயர் சீய கிரி என்பது. சிகிரிக் கோட்டை ஒரு சிங்கம் நிமிர்ந்து படுத்திருப்பதுபோல் கட்டப் பட்டிருப்பதால் சீயகிரி என்று பெயர் பெற்றது. சீயம் என்றால் சிங்கம். கிரி என்றால் மலை. சீயகிரி நாளடைவில் சிகிரி ஆகி விட்டது. இந்தக் கல் மலையில் பாறைகளில் சிங்கங்களின் உருவங்கள் செதுக்கட்பட்டுள்ளன.

மலையின் உயரம் சுமார் அறுநூறு அடிதான் என்றாலும் மிகச் செங்குத்தாய் இருப்பதனால் ஏறுவது கடினமாக உள்ளது. மலையைச் சுற்றிக் கொண்டு குறுகலான பாதை வளைந்து மேலே செல்லுகிறது. மலைப் பாறையின் கீழேயுள்ள வாயிலின் வழியாக வடக்கே சென்றால் மேலே செல்லப் படிக்கட்டுகள் இருக்கின்றன. படிக்கட்டுகளின் மேலேறிச் சென்றால் ஒருகுகை இருக்கிறது. அதற்கு மேலே 40 அடி உயரத்தில் மற்றொரு குகை இருக்கிறது. அதற்குச் செல்ல இரும்புப் படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மிகச் செங்குத்தான இரும்புப் படிகள் மீது ஏறிச்சென்றதும் குகை வாயிலை அடையலாம். உலகம் வியக்கும் இருபதுக்கு மேற்பட்ட வண்ண ஓவியங்களை அக் குகைச் சுவர்களில் தீட்டியிருக்கிறார்கள். அறுபதடி நீளமும், பதினைந்து அடி உயரமும் கொண்ட இந்த இயற்கைக் குகையின் மேடு பள்ளமான சுவர்களிலே உயிர்க் களை ததும்பும் சித்திரங்கள் எழுதப் பட்டிருக்கின்றன. இவைகள் சுமார் 1500 ஆண்டுகட்கு முன் எழுதப்பட்டவை யென்றாலும் வர்ணங்கள் மாறா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல் சில நாட்களுக்கு முன் எழுதப்பட்டவை போல் காணப்படுகின்றன.

குகையிலிருந்து கீழே இறங்கி மற்றொரு குகையையும் கடந்து மலை வாயிலை அடையலாம். மலைப்பாதையின் திருப்பத்தில் சிங்கத்தின் முன் பாதங்கள் இரண்டு இருக்கின்றன. நகங்கள் மாத்திரம் மூன்றரை அடி நீளம் என்றால் எவ்வளவு பெரிய சிங்கத்தைக் கற்பனையில் கொண்டு அந்த முறையில் மலையை அமைத்திருக்க வேண்டுமென்பதை ஊகிக்க வேண்டியிருக்கிறது. இந்தச் சிங்க வாயில் வழியாகத்தான் ஒழுங்கற்ற பாறைகள்மீது மலையுச்சியை அடைய வேண்டும்.

மலையின்மேல் அரண்மனைகள், அந்தப்புர மாளிகைகள், கற்றடாகங்கள், பள்ளி அறைகள், நடன மண்டபங்கள் ஆகியவை இடிந்து கற்குவியலாகக் கிடக்கின்றன. இங்குள்ள ஒரு தண்ணீர்த் தொட்டி குறிப்பிட்ட அளவிற்குமேல் நீர்வந்தால், வடிந்து போகும்படியாக அமைக்கப் பட்டிருப்பது நம் கவனத்தைக் கவரும். தண்ணீர்த் தொட்டிக்குக் கீழ்ப்புறமாகச் சென்றால் தர்பார் கூடம் இருக்கிறது. தொட்டியின் கீழே ஒருகோயில் இருக்கிறது. புத்தர் சிலை ஒன்று இங்கே இருந்தது என்கிறார்கள்.

குகைகளில் அழகு வடியும் மின்னிடை கொண்ட நீண்ட கூந்தலையுடைய பல நிறப் பெண்களின் சித்திரங்கள் கண்ணுக்கு நல்விருந்து அளிக்கின்றன. இப் பெண்கள் கையில் பழமும் பூவும் கொண்டு கோயிலுக்குச்செல்லுகிறார்கள். பௌத்த பிட்சுக்கள் எழுதிய சித்திரங்களாக இவை கருதப்படுகின்றன.

## தாதுசேனன்

மகாநாகனுக்குப் பின்னால் தமிழர்கள் வந்தார்கள். மிகச் சில ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர். கி.பி. 436-இல் தமிழர்கள் மூன்றாம் முறையாக இலங்கையின்மீது படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து வந்து பௌத்த மடங்களையும் ஆலயங்களையும் நாசம் செய்து சில காலம் ஆட்சி புரிந்தனர். மகாநாகன் பரம்பரையில் வந்த தாதுசேனன் என்பவன் தமிழர்களை வெற்றி கண்டு கி.பி. 461-இல் முடி சூடிக் கொண்டான். தமிழர் அழித்துச் சென்ற புத்த விகாரைகளை அவன் புதுப்பித்தான். காளாவிக் குளத்தைக் கட்டினான். மகிந்தனின் சிலையைப் பொன்னால் செய்வித்து, அவன் தகனம் செய்யப்பட்ட இடத்திற்கு அதை எடுத்துச் சென்று விழாக் கொண்டாடினான்.

தாதுசேசனனுடைய மாமனார் மகாநாமன் என்ற பௌத்த குருவாக இருந்தார். அவரே மகாவம்சம் என்ற நூலை எழுதியவர். அவர் எழுதிய நூலிலிருந்து சிங்களவர் வரலாற்றையும், பௌத்த மதம் இலங்கையில் பரவிய வரலாற்றையும் அறிய முடிகிறது.

## கசியபன்

தாதுசேனனுக்கு மொகல்லன் என்ற புதல்வனும் ஒரு பெண்ணும் இருந்தனர். தாழ்ந்தகுலப் பெண் ஒருத்தியை அரசன் மணந்திருந்தான். அவள் வயிற்றில் பிறந்த கசியபன் என்ற மைந்தன் ஒருவனும் இருந்தான். தன் தங்கையின் மைந்தனுக்கே தன் பெண்ணை மணம் செய்வித்திருந்தான் தாதுசேனன். மகளை மிகக் கொடுமையாக நடத்திய தன் தங்கையை அரசன் உயிருடன் கொளுத்தி விட்டான். மருமகன் அப்போது படைத் தலைவனாயிருந்தான். தாய்க்கு இழைத்த கொடுமையை அவன் சகிக்கவில்லை. ஆசை நாயகியின் குமாரன் கசியபன் அவன் கோபத்தைத் தூண்டிவிட்டான். அவன் உதவி கொண்டு அரசனைச் சிறைப்படுத்திவிட்டுத் தான் சிங்காதனம் ஏறினான் கசியபன்.

அவனுடைய தம்பி மொகல்லன் இந்தியாவிற்கு ஓடிவிட்டான். தாதுசேனன் தனது அந்திய காலத்தில் குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
99863

மகாநாமமரையும் தான் வெட்டிய காலவேவா என்ற குளத்தையும் பார்க்கப் பிரியப்பட்டான். கசியபன் அவனை ஓர் ஒட்டை வண்டியில் காவலுடன் ஏற்றிக் குருவைக் காண அனுப்பினான். குருவிடம் சில நேரம் பேசி முடித்தபின் தாதுசேனன் தான் வெட்டிய குளத்தில் நீராடினான். அதன் பின்னர்ச் சங்கிலியால் பிணைத்துச் செல்லப்பட்டு உயிருடன் சமாதி செய்யப்பட்டான் தாதுசேனன்.

தந்தையைக் கொலை செய்த கசியபன் தன் பாவங்களுக்குப் பரிகாரமாக விகாரைகள் கட்டிப் பல நல்ல காரியம் செய்தான். அநுராதபுரத்தில் இருக்கப் பயந்து சீயகிரிக் கோட்டையை நிர்மாணம் செய்து அதில் பலத்த காவலுடன் இருந்துகொண்டு நாட்டை ஆண்டான். ஆனால் தமிழ் நாட்டிற்கு ஓடிச் சென்ற மொகல்லன் பெரும்படையுடன் வந்து கசியபனை எதிர்த்துப் போர் புரிந்தான். கசியபன் தோற்றோடித் தற்கொலை புரிந்துகொண்டான் என்கிறார்கள்.

## மொகல்லன்

மொகல்லன் கி.பி 497-இலிருந்து 515 வரை அரசாண்டான். தன் பகைவர்மீது சரியானபடி வஞ்சம் தீர்த்துக் கொண்டான். புத்தருடைய தலைமயிரை சீலகாலன் என்பவன் இந்தியாவிலிருந்து கொணர்ந்து மொகல்லனுக்கு அளித்தான். அதைப் புனிதமாகப் போற்றினான் மொகல்லன். குரு மகாநாமரிடம் பக்தி பூண்டு சீயகிரி விகாரையை ஆக்கி, அவருக்கு அளித்துவிட்டான். இவனுக்குப் பின் இவன் மகன் குமாரதாசன் ஒன்பது ஆண்டுகள் நாட்டை ஆண்டான்.

## குமார தாசன்

குமாரதாசன் இலக்கிய அறிவுபெற்ற புலவன். அவன் காலத்தில் காளிதாசன் என்ற புலவன் இலங்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தான். பாரத நாட்டுப் பெரும் புலவனே இக் காளி தாசன் என்பர் சிலர். ஆனால் உண்மையில் இக் காளி தாசன் இலங்கையில் மாத்துறை என்ற ஊரைச் சார்ந் தவன். சிங்கள மொழியில் புலமை பெற்றவன். கவி காளி தாசர் குமாரதாசன் காலத்திற்கு மிக முற்பட்டவர்.

மாத்துறைக் காளிதாசர் சிங்கள மொழியில் இரா மாயணத்தைச் செய்யுளாகப் பாடியுள்ளார். 'சானகி அரணம்' என்று நூலுக்குப் பெயர். அரசன், தானும் கற்றவனானமைப்பற்றி இவரை அன்புடன் ஆதரித்து வந்தான்.

குமாரதாசன் ஒரு தாசியின்மீது மையல் கொண்டு அவளுடைய வீட்டுக்கு அடிக்கடி சென்று வருவான். ஒரு நாள் ஒரு செய்யுளின் இரண்டு அடிகளை அவள் வீட்டுச் சுவரில்எழுதிவைத்தான். பின்னிரண்டுஅடிகளைப் பூர்த்தி செய்பவர்களுக்கு நல்ல பரிசு அளிப்பதாக விளம்பரம் செய்திருந்தான். தாசியின் வீட்டு வழியாகச் செல்ல நேர்ந்த காளிதாசன் சுவரில் பாட்டு எழுதப் பெற்றிருப் பதைக் கண்டான். பின்னிரண்டடிகளை எழுதிப் பாட் டைப் பூர்த்தி செய்தான். தாசிக்குப் பணத்தின்மீது பேராசை. காளிதாசனைத் தந்திரமாக வீட்டுக்குள் அழைத்துச் சென்று அவனைக் கொன்று ஒருவரும் அறியா வண்ணம் ஓர் இடத்தில் புதைத்து விட்டாள்.

தானே பாட்டைப் பூர்த்தி செய்ததாகக் கூறி அரச னிடம், அவன் வாக்களித்தபடி வெகுமதி வேண்டினாள். அரசன் சந்தேகமுற்று ஆராய்ந்ததில் உண்மை வெளி யாயிற்று. சதிகாரியைக் கொன்று அவள் உடலை ஆற்றில் எறிந்து விட்டான் மன்னன். பின்பு புலவனது உடலைத் தேடி, புதைத்த இடத்திலிருந்து மீட்டுச் சகல ஆடம்பரங்களுடனும் தகனக்கிரியை நடத்தினான். அவன் பிரிவை ஆற்றாத மன்னன் தானும் சிதையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்ந்து உயிர் துறந்தான். இந்தப் பெருஞ்செயல் எல்லோராலும் போற்றப்பட்டு வருகிறது. அவர்கள் தகனக் கிரியை நடந்த இடத்தில் பெரிய வெள்ளரச மரங்கள் பின்னர் முளைத்தெழுந்தன என்கிறார்கள்.

குமாரதாசன் சிறந்த தெய்வ பக்தி வாய்ந்தவன்; நீதியாய் ஆட்சி புரிந்தான். பௌத்த மதத்தில் பற்றுக் கொண்டிருந்தான்; மத நூல்களைப் பிழையின்றிப் பிரதியெடுத்தான். பெரும் புலவனாய்த் திகழ்ந்தான். ஆனால் கவிஞன் பிரிவை ஆற்றாதவனாய்த் தன் உயிரையே மாய்த்துக் கொண்டான்.

## சிங்களவர் ஆட்சி குன்றல்

குமாரதாசனுக்குப் பின் நாட்டில் குழப்பமும் கலகமும் மிகுந்திருந்தன. சுமார் ஐந்து நூற்றாண்டுகள் வரை பல மன்னர்கள் இலங்கையில் ஆட்சி புரிந்தார்கள். நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தை அடக்கி நல்லாட்சி புரிந்தவர்கள் அவர்களில் மிகச் சிலரே. மேலும், அரசுரிமை பற்றிப் போராட்டங்களும் சச்சரவும் ஏற்பட்டுத் தலைமைப் பீடமே ஆட்டங்கொடுத்தது. நாட்டில் கொள்ளை மலிந்தது. ஆலயங்களிலுள்ள பொருள்கள் கொள்ளை போயின. நிலைத்த அமைதி உள்ள ஆட்சி இன்மையால் விவசாயம் தடைபட்டுப் பஞ்சம் மலிந்தது.

குமாரதாசனுக்குப் பின் ஒரு நூற்றாண்டு கழித்து இலங்கை மன்னன் ஒருவன் தன்னாட்சியை நிலை நிறுத்தத் தமிழகத்திலிருந்து படைகளை வருவித்திருந்தான். அப்படையைச் சார்ந்தவர்கள் யுத்தத்திற்குப் பின் நாட்டில் கொள்ளையடித்து வாழ வேண்டியதாயிற்று. அநுராதபுரம் சுடுகாடாயிற்று. வேற்று நாட்டிலிருந்து படையை வரவழைத்த தம் மதியின்மையைக் குறித்துச் சிங்கள மன்னர்கள் வருந்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் அக்கிரபோதி கி பி. 673-இலிருந்து 689-வரை இலங்கையில் அரசாண்டான். அநுராதபுரத்தில் ஆட்சி புரிவது ஆபத்துக்கிடமானதென்று கண்டு பொல்ல நறுவைக்குச் சென்று அங்கிருந்து ஆட்சிபுரிந்தான் அரசன். அவனுக்குப்பின் நூறு ஆண்டுகள் கழித்து ஆட்சி புரிந்த சேனன் தலைநகரை பொல்லநறுவைக்கே மாற்றிக் கொண்டான். இலங்கையில் பௌத்த மதத்தின் ஆதி பீடமாய் அமைந்த அநுராத புரம் அதன் பின்னர்த் தன் பழைய புகழையும் சிறப்பையும் அடையவில்லை. அது இறந்தவர்கள் பட்டணமாக இன்று கருதப்பட்டு வருகிறது.

## தமிழர் படையெருப்பு: சேனன் காலம்

சேனன் என்பவன் காலத்தில் பாண்டிய மன்னன் இலங்கையின்மீது படையெடுத்து வந்து வட பாகத்தில் மகாபலகாமாவில் ஒரு கோட்டை கட்டிக் கொண்டான். இலங்கையில் இருந்த தமிழர்கள் பாண்டியனுடன்சேர்ந்து கொண்டார்கள். பாண்டியனது படை சேனனைப் பொல்லநறுவையில் தாக்கியது. நகரைக் காப்பாற்ற வல்லமையின்றிச் சேனன் அகப்பட்ட திரவியங்களை எடுத்துக் கொண்டு காட்டிற்குள் ஓடி ஒளிந்து கொண்டான். ஆனால் சேனனுடைய சகோதரர்களான காசியபனும் மகேந்திரனும் பாண்டியனை எதிர்த்துப் போர் செய்தனர். ஆனால் போரில் அவர்கள் இருவரும் உயிர் இழந்தனர். இதை அறிந்த சேனன் பாண்டியனுடன்சமாதானம் செய்து கொண்டான். ஆண்டுதோறும் பாண்டியனுக்குத் திறையளிப்பதாக ஒப்புக் கொண்டான். அதன் பின்னர்ப் பாண்டியன் மதுரைக்கு மீண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது சேனன்

சேனனுக்குப் பின் அவன் சகோதரன் காசியபன் மகன் இரண்டாவது சேனன் பட்டத்துக்கு வந்தான். அவன் காலத்தில் மதுரையில் பாண்டியனுக்கும் அவன் மகனுக்கும் இடையே பெரும் போர் நிகழ்ந்தது. பாண்டிய அரச குமாரன் தோற்றோடி இலங்கையில் ஒளிந்து கொண்டான், இரண்டாவது சேனன் அவனுக்கு உதவியாக ஒரு படையை மதுரைக்கு அனுப்பினான். மதுரையில் நடந்த போரில் பாண்டிய மன்னன் இறந்தான். அவன் குமாரன் அரசனானான். இலங்கையில் கொள்ளையடித்துக் கொணர்ந்த பொருள்களைத் திரும்பவும் அவர்களுக்கு அளித்தான் புதிய பாண்டிய மன்னன்.

## தப்புளு

சேனனுக்குப் பின்னால் நால்வர் ஆண்டனர். குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகள் அவர்கள் ஆட்சிக் காலத்தில் நேரவில்லை. அவர்களுக்குப் பின் வந்த ஆறாம் தப்புளு என்கிறவன் ஆட்சிக் காலத்தில் தென்இந்தியாவில் சோழனுக்கும் பாண்டியனுக்கும் போர் நடந்தது. போரில் தோற்ற பாண்டியன் இலங்கைக்கு ஓடி வந்து விட்டான். அவனுக்கு உதவியாக ஒரு படை திரட்டி இந்தியாவிற்கு அனுப்பத் தப்புளு முயன்றான். ஆனால் அது அவனுடைய பிரதானிகளுக்குச் சம்மதம் இல்லை. தன்னுடைய முடியையும் செல்வங்களையும் இலங்கையிலேயே வைத்து விட்டுப் பாண்டியன் தன் நாட்டுக்குத் திரும்பிச் சென்றான்.

## உதயன்

தப்புளுவுக்குப் பின்னர் வந்த அரசர்களுள் மூன்றாம் உதயன் காலத்தில் தமிழர் இலங்கை மீது ஐந்தாம் முறையாகப் படையெடுத்து வந்தனர். பாண்டியனுடைய முடி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்.

யுடன் அவனுடைய திரவியங்களையும் தன்னிடம் ஒப்ப டைக்கும்படிச் சோழன் கேட்டனுப்பினான். உதயன் பதில் கூறாமல் வாளாவிருந்தான். சோழன் ஒரு சேனை யை அனுப்பி உதயனை எதிர்த்தான். ஆனால் சோழ னுடைய படைகளை உதயன் அடித்து விரட்டி இந்தியா விற்குத் துரத்தி விட்டான்.

## ஐந்தாம் மிகுந்து

சில அரசர்களுக்குப் பின் ஆண்ட ஐந்தாம் மிகுந்து என்பவன் தமிழர்களைத் துணையாகக் கொண்டு அநு ராதபுரத்திலிருந்து ஆண்டு வந்தான். சிங்களவர் தமிழ்ப் படைஞர்களை விரும்பாமல் வரி கொடுக்க மறுத்துவிட்ட னர். இதனால் தமிழ் வீரர்களுக்கு ஊதியம் அளிக்க அரச னால் இயலவில்லை. அவர்கள் கலகம் செய்யவே மிகுந்து உறுகுணைக்குச் சென்று அங்கிருந்து அரசு புரிந்தான். இலங்கையில் உள்ள குழப்பத்தை அறிந்த சோழன் பெரிய சேனையை இலங்கைக்கு அனுப்பினான். தமிழர் படை இலங்கையில் வெற்றி பெற்று அரசனைச் சிறைப் படுத்தியது. பாண்டியன் முடி மற்றும் அவன் வைத்து விட்டுப்போன திரவியங்கள் அனைத்தையும் கொள்ளை யடித்துக் கொண்டு மிகுந்துவுடன் தமிழர் படைதமிழகத் திற்குத் திரும்பியது.

மிகுந்து கி.பி. 1001 முதல் 1038 வரை ஆட்சி புரிந் தான். 12 ஆண்டுகள் இந்தியாவில் சிறையில் இருந்து அங்கேயே இறந்து விட்டான் மிகுந்து. அந்தப் பன்னி ரண்டு ஆண்டுகள் சோழனின் பிரதிநிதியாக இலங்கையை ஒருவன் ஆண்டு வந்தான். ஆனால் நாட்டில் கலவரம் மிகுந்து கொள்ளையும் பஞ்சமும் ஏற்பட்டன.

## முதலாம் விசயவாகு

தமிழர்கள் அநுராதபுரத்தில் பலமுற்றிருந்த போதி லும், சிங்களவர் உறுகுணையைக் காப்பாற்றிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தனர். அவர்கள் அடிக்கடி தமிழருக்குத் தொந்தரை அளித்து வந்தனர். மிகுந்துவின் மைந்தனை ஆட்சிப் பீடத்தில் ஏற்ற முயன்றனர். ஆனால் அவன் பன்னிரண்டாம் வயதில் இறந்துவிட்டான். அதற்குப் பின்னால் அரசு உரிமையற்ற சிங்களவர் சிலர் உறுகுணையிலிருந்து ஆட்சி புரிந்தனர். அவர்களில் லோகேசுவரன் என்பவன் தமிழரை அடக்கிக் கதிர் காமத்திலிருந்து ஆட்சி புரிந்தான்.

பதினாறு ஆண்டு நிரம்பிய கீர்த்தி என்ற இளைஞன் கதிர்காமத்தில் ஆட்சிபுரிந்த சிங்கள அரசனைப் போரில் தோற்கடித்தான். கீர்த்தி ஐந்தாம் மிகுந்துவின் பேரன். அவனைச் சிங்கள வமிசத்து அரசனாக ஏற்றுச் சிங்காதனத்தில் அமர்த்தினர் மந்திரிகளும் பிரதானியரும். அவன் வீரவெற்றிகளின் காரணமாக அவனுக்கு விசயவாகு என்று பெயர் ஏற்பட்டது.

விசயவாகு இலங்கையிலிருந்து தமிழராட்சியைத் தொலைக்க வழி தேடினான். இதை ஒருவாறு அறிந்த தமிழ் மன்னன் கதிர்காமத்தின்மீது படையெடுத்துச் சென்றான். தமிழரை எதிர்க்கச் சக்தியற்றவனாய்க் காட்டில் மலைக்கோட்டைக்குள் சென்று ஒளிந்து கொண்டான் விசயவாகு. தமிழர் கதிர்காமத்தை அழித்துப் பொல்ல நறுவைக்கு மீண்டனர்.

தமிழர்மீது சிங்களவருக்கு அதிகமான வெறுப்பும் இருந்து வந்தது. பயத்தால் சக்தியற்றவராய் அவர்கள் ஒடுங்கிக் கிடந்தனர். வரி கொடாமல் தமிழருக்குத் தொல்லை விளைத்தனர். தமிழ் மன்னன் ஒரு சேனையை உறுகுணைக்கு அனுப்பி அவர்களை அடக்க முயன்றான். விசயவாகு அந்தச் சேனையை எதிர்த்து முறியடித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டிலிருந்து மேலும் பல படை வீரர்களை அனுப்பிச் சிங்களவரை அடக்கும்படி ஏவினான். சோழ மன்னன். ஆரம்பத்தில் வெற்றி கண்ட தமிழர் பின்னால் பெருந்தோல்வியுற்றனர். விசயவாகு பொல்லநறுவையைக் கைப்பற்றிக் கொண்டு அநுராதபுரத்திற்குச் சென்றான். கி.பி.1080-இல் அநுராதபுரத்தில் அவன் முடி சூடினான். இலங்கைக்குப் படைகளை மேலும் அனுப்புவதால் பயனில்லை என்றறிந்து சோழன் வாளா இருந்து விட்டான்.

விசயவாகு இலங்கை மன்னனாக முடி சூடியபோது நாடு சீர்குலைந்து அல்லல்பட்டிருந்தது. நாட்டு மக்களைத் திருப்தி செய்ய வேண்டி அவன் வரிகளைத் தக்கவாறு குறைத்தான். நிர்வாகத்தை ஒழுங்கு படுத்தினான் நாட்டை நல்ல முறையில் அரண் செய்து பகைவர் எளிதில் அண்டவொண்ணாதபடி காவல் நிறுவினான். விசயவாகு நல்ல அறிஞன். அவன் காலத்தில் பௌத்த மதம் பெயரளவிலேயே இலங்கையில் இருந்து வந்தது. தமிழர் ஆட்சியில் பௌத்த மடங்கள் இடிக்கப்பட்டுப் பௌத்த குருமார் மறைந்து விட்டனர். அவன் பௌத்த மடங்களை மீண்டும் புதுப்பித்தான். வெளிநாடுகளிலிருந்து பௌத்த குருமாரை வரவழைத்தான். புதிதாகக் குருமார்களை அபிடேகம் பண்ணி வைத்தான் பௌத்த குருமாருக்கு நன் கொடைகள் வழங்கிப் பல திருவிழாக்களை மீண்டும் நடத்தினான்.

திரிபிடகம் என்னும் பௌத்த நூலை அவன் சிங்கள மொழியில் பெயர்த்தெழுதினான். அதனைத் தினமும் ஓதுவதற்கு ஏற்பாடு செய்தான். சிவனொளி பாத மலையில் கௌதம புத்தரின் காலடிகள் இருந்தன. அம் மலைக்கு ஏறிச் செல்வது கடினமாயிருந்தது. விசயவாகு பாதையை நல்ல முறையில் செப்பனிட்டான். யாத்திரிகருக்கு மலையில் பல வசதிகள் செய்து கொடுத்தான். மிருகங்களின் நோயைக் கவனிக்க நல்ல மருத்துவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலைகள் ஏற்படுத்தினான். அவன் வித்துவான்களை ஆதரித்தான்.

இவ்வளவு செய்தும் அவன் காலத்தில் குட்டிக் கலகங்கள் நடந்து கொண்டிருந்தன. சோழனுடன் போர் செய்ய அனுப்பிய அவன் சேனை அவனையே எதிர்க்க ஆரம்பித்தது. ஆனால் விசயவாகு கலகக்காரர்களை ஒடுக்கி அவர்களை நன்றாகத் தண்டித்தான். ஐம்பத்தைந்து ஆண்டுகள் அரசு புரிந்து அவன் கி. பி. 1120-இல் இறந்தான்.

## விக்கிரமவாகு

விசயவாகு இறந்தபோது அவன் மூத்தமகன் விக்கிரமவாகு உறுகுணையில் இருந்தான். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு விசயவாகுவின் தம்பி சயவாகு பௌத்த குருமார்களின் உதவியால் சிங்காதனம் ஏறினான். விக்கிரமவாகு அவனுடன் போர் செய்து அவனை விரட்டியடித்துப் பொல்லநறுவையில் முடிசூட்டிக்கொண்டான்.

ஆனாலும் அப்போது இலங்கையில் நான்கு அரசர் இருந்தனர். விக்கிரமவாகுவின் சகோதரியின் கணவன் மானாபரணன் உறுகுணையில் ஆட்சி புரிந்துகொண்டிருந்தான். மானாபரணனின் சகோதரர்களான கீர்த்தி, ஸ்ரீமேகன், ஸ்ரீவல்லபன் என்பவர்கள் முறையே மானாசுலோவிலும், உடுண்டுறாவிலும் ஆட்சி புரிந்து வந்தனர். பின்னவர் இருவரும் மானாபரணனுக்கு அடங்கி அவன் கீழிருந்து ஆட்சிபுரிந்தனர். அவர்களுள் ஸ்ரீவல்லபன் விசயவாகுவின் பேத்தியை மணந்துகொண்டிருந்தான்.

இவ்வாறு நான்கு அரசர்கள் இலங்கையை ஆண்டு வந்தனர். விக்கிரமவாகுவுக்கு மற்றவர்கள் கீழ்ப்படிந்தவர்களல்லர். இதன் பயனாக நாட்டில் கலகமும் குழப்பமும் அதிகரித்தன. விக்கிரமவாகு அநியாயமான வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை விதித்து மக்களின் அதிருப்தியைப் பெற்றிருந்தான். தான் பட்டத்திற்கு வர குறுக்கே நின்ற புத்தகுருமாரைக் கொடுமைப்படுத்தினான். பௌத்த மடங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த மானியங்களைப் பிடுங்கிக்கொண்டான். புத்தகுருமார் அரசன் செயலுக்கு அஞ்சி உறுகுணைக்கு ஓடிவிட்டனர். அரசனின் சேனைவீரர்கள் நாட்டைக் கொள்ளையடித்து அக்கிரமம் செய்தனர்.

## பராக்கிரமவாகு

பொல்லநறுவையில் இருந்த முதலாம் விக்கிரமவாகு இறந்துவிட்டான். அவன் மகன் இரண்டாம் கசவாகு ஆட்சியேற்றான். உறுகுணையிலிருந்த மானாபரணனும் இறக்கவே அவன் நம்பி கீர்த்தி ஸ்ரீமேகன் உறுகுணைக்கு அரசனானான். மானாபரணனுக்குப் பராக்கிரமவாகு என்ற ஒரு மகன் இருந்தான். அவன் மகா தைரியம் படைத்தவன்; பெரியபலசாலி. அவன் சிங்களமொழியை நன்கு பயின்றிருந்தான். கலைகளில் மோகம் கொண்டவன். யுத்தப் பயிற்சி நன்கு பெற்றிருந்தான். யானையேற்றம், குதிரை யேற்றம், வேல் எறிதல் ஆகியவற்றை நன்கு பயின்றிருந்தான். எல்லாவற்றிற்கும் மேலாக நிதான புத்தியுடையவன்.

இலங்கையில் உள்ள குழப்பநிலையைக் கண்டு அவன் மனம் வருந்தினான். நாடு முழுவதும் ஒரு குடைக்கீழ்வர வேண்டுமென்று திட்டமிட்டான். இதற்காக வேண்டியவற்றையெல்லாம் அவன் மிக இரகசியமாகச் செய்தான். முதன் முதலில் ஆயுதங்களைச் சேகரித்தான். உறுகுணையில் சிற்றப்பனிடமே இருந்துகொண்டு நல்ல வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

பராக்கிரமவாகு தன்னுடன் ஒரு கூட்டத்தை அழைத்துக்கொண்டு கீர்த்தி ஸ்ரீமேகனுடைய சேனாதிபதி சங்கன் ஆதிக்கம் செலுத்தி வந்த பகுதியை அடைந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். அங்கே சங்கனைக் கொன்று விட்டான். அதனால் ஏற்பட்ட கலகத்தைச் சாமர்த்தியமாக அடக்கினான். தன்னைக் கொல்ல வந்தவர்களிடமிருந்து ஆச்சரியமாகத் தப்பினான். பின்னர், பொல்லநறுவையை நாடி இரண்டாவது கசபாகுவிடம் சென்றான். கசபாகு இயல்பாகக் கோழை. இவனுடைய வீரத்தை அறிந்து கொண்டிருந்ததனால் இவனை நல்ல முறையில் வரவேற்று உபசரித்தான். பொல்லநறுவையிலே அரச விருந்தினனாகச் சில காலம் இருந்தான் பராக்கிரமவாகு. கசவாகுவின் தங்கையை அப்போது மணந்து கொண்டான்.

தான் பொல்லநறுவையில் இருந்தபோது தனக்கு ஏற்பட்ட சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டான் பராக்கிரமவாகு. மக்களுடன் தொடர்புவைத்துக் கொண்டு அன்புடன் நடந்து வந்தான். உளவாளிகளை விடுத்து அவர்கள் மூலம் நாட்டிலுள்ள எல்லா விவரங்களையும் நன்கு உணர்ந்துகொண்டான். கசவாகுவினிடம் மக்களுக்கு வெறுப்பு ஏற்படும்படி அவன் தோழர்கள் ரகசியமாகப் பிரசாரம் செய்து வந்தனர்.

பராக்கிரமவாகு மக்களின் அன்பைப் பெற்றிருந்தது கசவாகுவின் பொறாமையைத் தூண்டிற்று. கீர்த்தி ஸ்ரீமேகன் இறக்கவே பராக்கிரமவாகு உறுகுணைக்குச் சென்று ஆட்சியை ஏற்றான். அவன் பதவியிலிருந்து யுத்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். கசவாகுவை எதிர்த்துப் போர் செய்ய ஒரு படையை அனுப்பினான். கசவாகு கைதியானான். ஆனால் படை வீரர் ஊரைக் கொள்ளையடித்ததைக்கண்டு மக்கள் உறுகுணையின் மற்றப்பகுதியில் ஆண்டுகொண்டிருந்த மானாபரணனது உதவியை நாடினார். மானாபரணன் பராக்கிரமவாகுவின் படையை விரட்டியடித்து வெற்றி கண்டான். ஆனால் மானாபரணன் ஆட்சியைக் கைப்பற்றித் தானே அரசாள விரும்பினான். இதை அறிந்த கசவாகு பராக்கிரமவாகுவின் உதவியை நாடினான். பராக்கிரம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகு உதவி புரிந்து மானாபரணனைத் தோற்கடித்தான்.

கசவாகுவிற்குப் பிறகு பராக்கிரமவாகுவே பொல்லநறுவைக்கு அரசனாவதென்று பௌத்த குருமார்கள் ஒப்பந்தம் செய்து கொடுத்தார்கள். கசவாகுவும் மானாபரணனின் உதவியை மறுத்துப் பராக்கிரமவாகுவே தனக்குப் பின் அரசனாக வேண்டுமென்று பிரகடனம் செய்தான். இதற்குப் பின் சில நாட்களில் கசவாகு இறந்தான். மானாபரணன் பொல்லநறுவையைக் கைப்பற்றச் சென்றான். ஆனால் பராக்கிரமவாகு அவனை எதிர்த்துப் பொருது நாட்டைவிட்டு ஓட்டிவிட்டான். பின்னர் தானே இலங்கையின் ஏக சக்கராதிபதியாகப் பொல்லநறுவையில் முடி சூட்டிக்கொண்டான்.

அதன் பின்னர் நாட்டை நல்ல முறையில் நிர்வாகம் செய்ய முயன்றான் பராக்கிரமவாகு. அதிகப் படியான வரிகளை அவன் நீக்கி, மக்களின் நன்மதிப்பைப் பெற்றான். முன்னைய அரசனின் கொடுமையால் ஊரைவிட்டு ஓடிச் சென்றவர்களை மீண்டும் நாட்டுக்கு வரவழைத்து அவர்களுக்குப் பழைய பதவிகளைத் திரும்ப வழங்கினான் ஏழைகளுக்கும், பிணியாளர்களுக்கும் உதவி செய்வதற்கு அநாதை ஆசிரமங்களும் வைத்தியசாலைகளும் ஏற்படுத்தினான். நீதி வழங்குவதிலும் அவன் பாரபட்சமாய் நடக்கவில்லை.

மதப்பற்றுடையவனாய் விளங்கினான் பராக்கிரமவாகு. சீரண நிலையிலிருந்த மடங்களையும் விகாரைகளையும் புதுப்பித்தான். பல கட்சிகளாகப் பிரிந்திருந்த பௌத்த குருமார்களை ஒன்றுபடுத்தினான். புதிய விகாரைகளைக் கட்டினான். அநுராதபுரத்தை மீண்டும் புதுப்பித்தான். நல்ல சாலைகளைப் போட்டான். கோட்டைகளும் அரண்களும் அங்கங்கே தோன்றின. விவசாயத்தை விருத்தி செய்ய அம்பங் கங்கையிலிருந்து 105 கி.மீ. நீளமுள்ள ஒரு கால்வாய் வெட்டி அதனுடன் கந்தளாய், மின்னேரி முதலிய ஏரிகளை இணைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டில் உண்டான கலகங்களை அவன் அவ்வப் போது அடக்கிவிட்டான். தமிழகத்தில் பாண்டியனுக்கும் சோழனுக்கும் போர் நடந்தது. பராக்கிரமவாகு பாண்டியனுக்கு உதவியாக ஒரு சேனையை அனுப்பி னான். ஆனால் அதற்குள் சோழன் பாண்டிய மன்னனை கொன்று வெற்றிக் கொடி நாட்டிவிட்டான். இலங்கையி லிருந்து சென்ற சேனாதிபதி இலங்காபுரம், சோழருடன் மீண்டும் போர்செய்து அவர்களை நாட்டைவிட்டு ஓட்டி இளவரசனான வீரபாண்டியனைச் சிங்காதனத்தில் அமர்த்தினான். சோழ நாட்டவர் சிலரைக் கைதியாக் கிக் கொண்டு அவர்களுடன் இலங்கைக்குத் திரும்பினான் இலங்காபுரம். அவர்களைக் கொண்டு இலங்கையில் குந்து கால் என்ற இடத்தில் பராக்கிரமவாகுவின் பெயரால் ஒரு கோட்டை கட்டினான். இராமேச்சரத்தைச் சோழ னிடமிருந்து கைப்பற்றி இலங்கையுடன் சேர்த்துக் கொண் டான். அவன் பாரதத்தையும் ஆண்டதற்கு அடையாள மாகப் பல நாணயங்கள் அடித்து இராமேச்சரத்தில் வெளியிட்டான். அவன் முப்பத்து நான்கு ஆண்டுகள் ஆட்சி புரிந்த பின் இறந்தான்.

## தமிழராட்சி

பராக்கிரமவாகுவிற்குப் பின் பல அரசர்கள் இலங் கையில் சில ஆண்டுகள் ஆண்டனர். அவர்களுக்குப் பிறகு லீலாவதி என்பாள் மும்முறை இலங்கையைக் கைப்பற்றி ஆண்டாள். அவள்காலத்தில் தமிழகத்திலிருந்து பாண்டி யன் ஒருவன் இலங்கைமீது படை எடுத்து வந்து அவளைத் துரத்திவிட்டுப் பராக்கிரம பாண்டு என்று பெயர் பூண்டு இலங்கையை ஆண்டான்.

கலிங்க நாட்டு மாகன் என்பவன் இலங்கையின் மீது படையெடுத்து வந்து பராக்கிரம பாண்டுவைத் தோற் கடித்துத் தானே அரசனானான். மாகன் கொடுங் கோலன். சிங்களவரைத் துன்புறுத்திக் குரூரமாய் நடத் தினான். பௌத்த விகாரைகளை இடித்துத் தள்ளிக்குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரைக் கொடுமைப்படுத்தினான். அவனுடைய சேனை வீரரின் கொடுமைகளைத் தாங்க மாட்டாமல் மக்கள் அவதிப்பட்டனர். இரத்தினவல்லி சமாதியை இடித்துத் தள்ளிப் புத்த சேஷங்களை அவன் அசுத்தமாக்கினான்.

## மூன்றாம் விசயவாகு

கொழும்புக்கு வடக்கேயுள்ள தம்பதேனியா கோட்டையில் ஸ்ரீ சங்கபோதி வமிசத்தில் வந்த விசயவாகு ஆதிக்கம் செலுத்தி வந்தான். அவன் பெரியசேனையைத் திரட்டிக் கொண்டு மாகனை இலங்கையின் வடபாகத்துக்கு விரட்டியடித்து மூன்றாம் விசயவாகு என்று பெயர் பூண்டு இலங்கையின் அரசனானான். ஆனால் கலிங்க மாகனுக்குப் பயந்து தம்பதேனியாவிலிருந்தே அரசு புரிந்தான். அவன் பௌத்த மதத்திற்கு அந்நியரால் ஏற்பட்ட கொடுமைகளை நீக்கி நல்ல முறையில் அரசாண்டான்.

## இரண்டாம் பராக்கிரமவாகு

மூன்றாம் விசயவாகுவுக்குப் பின் அவன் மைந்தன் இரண்டாம் பராக்கிரமவாகு பட்டத்திற்கு வந்தான். அவன் நன்றாகப் படித்தறிந்தவன். அநேக நூல்கள் எழுதியுள்ளான். புத்த கோசர் என்பவர் பாலி மொழியில் எழுதியிருந்த 'விசுத்தி மார்க்கய' என்ற நூலைச் சிங்களத்தில் பெயர்த்து எழுதினான். பௌத்த மதத்திலும் மிகுந்த பற்றுடையவன் அவன். அவனைப் பண்டித பராக்கிரமவாகு என்றழைத்தனர் மக்கள்.

அவன் ஆட்சிக்கு வந்தபோது கலிங்க நாட்டு மாகன் மற்றும் தமிழகத்திலிருந்தவர் ஆகியோரின் தொல்லை அதிகமாயிருந்தது. பராக்கிரமவாகு காளாவி என்னும் இடத்தில் அவர்களுடன் பொருது அவர்களில் பலரைக் கொன்று குவித்தான். இன்னும் பலர் அச்சம் அடைந்து பாரத நாட்டிற்கு ஓடி விட்டனர்.

மலேயா நாட்டிலிருந்து சந்திரபாநு என்பான் பெருஞ்சை சனியத்துடன் இலங்கைமீது படையெடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தான். அவர்கள் இலங்கையில் பல அட்டூழியங்கள் செய்தனர். பராக்கிரமவாகுவின் மருமகன் தலைமையில் ஒரு சேனை சென்று எதிரிகளை நிர்மூலமாக்கி நாட்டை விட்டு விரட்டியடித்தது. ஆனால் தமிழ் நாட்டில் திரட்டப்பட்ட படையுடன் மீண்டும் வந்து எதிர்த்தான் சந்திரபாநு இரண்டாம் முறையாக அவன் தோல்வியுற்று ஓடிவிட்டான்.

புறப்பகையை ஒழித்தபின் நாட்டைச் சீர் திருத்தும் வேலையில் ஈடுபட்டான் பராக்கிரமவாகு. பௌத்த விகாரைகளைப் புதுப்பிக்கும் வேலையில் கருத்தைச் செலுத்தினான். விகாரைகளில் விழாக்களை நடத்தி மடங்களைப் பரிபாலிக்க ஆட்களை நியமித்தான். பௌத்த மதத்தைப் பிரசாரம் செய்யக் குருமார்களை அமர்த்தினான். புத்தகுரு ஒருவர் பூசாவலி என்னும் நூலை எழுதினார். தர்மகீர்த்தி என்பவர் மகாசேனன் காலந்தொடங்கி இரண்டாம் பராக்கிரமவாகு காலம் வரை இலங்கை வரலாற்றைச் சூளு வமிசம் என்ற நூலாக இயற்றினார்.

காடு மண்டிக் கிடந்த அநுராதபுரத்தைச் சீர்திருத்திப் பொல்லநறுவையைப் பராக்கிரமவாகு புதுப்பித்தான். சிவனொளிபாத மலைக்குச் செல்லும் பாதையைச் சீர்திருத்தினான்.

தம்பதேனியாவில் தான் பிறந்த ஊரான நம்பம்பராய என்னுமிடத்தில் ஒரு புத்த விகாரை கட்டினான். புத்த தந்தத்தைப் பெரிய விழா நடத்தி அங்கே பிரதிட்டை செய்தான். அவன் பெரிய சாலைகளையும் பாலங்களையும் கட்டினான். பாரத நாட்டிலிருந்து பல பௌத்த அறிஞர்களை வரவழைத்து இலங்கையில் மதக் கல்வியைப் பரப்பினான்.

## மீண்டும் குழப்பம்

இரண்டாம் பராக்கிரமவாகு கி.பி.1285இல் இறந்தான். எப்போதும் போலவே மறுபடியும் இலங்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலகங்களும் குழப்பமும் மிகுந்தன. தமிழர்கள் இலங்கையின் வட பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஒரு பலமான இராச்சியம் தாபித்திருந்தனர். அவர்களும் தங்கள் இராச்சியத்தை வித்தாரமாக்க முயன்று வந்தனர். அவர்களுக்குத் தமிழகத்திலிருந்து சோழ பாண்டியர்கள் உதவி கிடைத்து வந்தது.

இந்த நிலைமையில் நான்காம் விசயவாகு பட்டத்துக்கு வந்திருந்தான். அவனுடைய மந்திரி மித்தசேனன் அவனைக்கொன்று விட்டுத் தான் ஆட்சியைக் கைப் பற்றினான். ஆனால் அவனை அரசனாக ஏற்றுக் கொள்ளச் சேனை வீரர் மறுத்து விட்டனர். அவர்களுள் தக்குரக்கன் என்பவன் அவனைக் கொன்று நான்காம் விசயவாகுவின் தம்பி புவனேகவாகுவை அரசனாக்கினான். பாண்டிய சேனை ஒன்று அப்போது இலங்கையின் மீது படையெடுத்து வந்து யாப்பாகுவைத் தரை மட்டமாக்கிவிட்டுப் புத்த தந்த சேடத்தைக் கவர்ந்து சென்று விட்டது.

புவனேகவாகுவுக்குப் பின் வந்த மூன்றாம் பராக்கிரமவாகு பாண்டியனுடன் உடன்படிக்கை செய்து கொண்டு புத்த சேடத்தை மீட்டு வந்தான். பொல்லநறுவை அடுத்தடுத்த தாக்குதலால் சீர் குலைந்திருந்ததால் குருநகெல்லை இலங்கையின் புதிய ஆட்சிப்பீடமாயிற்று.

மூன்றாம் பராக்கிரமவாகுவுக்குப் பின் நான்காம் பராக்கிரமவாகு அரசனானான். அவன் புத்த விகாரைகளைப் புதுப்பித்து புத்த தந்த சேடத்தைப் பற்றிய ஒரு வரலாற்றை எழுதுவித்தான். புத்த சாதகக் கதைகளை சிங்கள மொழியில் எழுதுவித்தான்.

அதற்குப் பின்னர் சிறப்பாக ஆண்ட மன்னன் மூன்றாம் விக்கிரமவாகு. இவன் கம்பளையைத் தலை நகராக ஆக்கிக் கொண்டிருந்தான். இவன் காலத்தில் யாழ்ப்பாணத்து அரசன் கொழும்பு, சலாபம் முதலிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களில் கோட்டைகளைக் கட்டித் தமிழர் ஆட்சியை ஒழுங்குபடுத்தினான். மூன்றாம் விக்கிரமவாகுவின் மந்திரி அழகர்கோன் தமிழரை இந்த இடங்களிலிருந்து துரத்திவிட்டான். அதன் பின்னர்க் கொழும்புக்கருகில் ஒரு பெரிய கோட்டையைக் கட்டினான். மக்கள் அங்கே குடியேறியதும் நகரத்தைச் சுற்றி உயர்ந்த செங்குத்தான மதிலைக் கட்டி அதற்கப்பால் அழகான அகழிகள் வெட்டி வைத்தான், அதற்குச் சயவர்த்தனக் கோட்டையென்று பெயர்.

## ஐந்தாம் புவனேகவாகு

மூன்றாம் விசயவாகுவுக்குப் பின் வந்த ஐந்தாம் புவனேகவாகு காலத்தில் யாழ்ப்பாணத்து அரசன் மீண்டும் படையெடுத்து வந்து ஒன்பது துறைமுகங்களைக் கைப்பற்றினான். தங்களுக்குக் கொடுத்து வந்த திறையைத் திரட்டுவதற்கு ஆட்களை நியமித்துவிட்டு ஊருக்குத் திரும்பி விட்டான். ஆனால் அந்த அதிகாரிகளை அழகேசுவரன் கொன்று விட்டான். கோபங் கொண்ட யாழ்ப்பாண மன்னன் பெருஞ்சேனையுடன் வந்து கம்பளையைத் தாக்கினான். அரசன்பயந்து ஓடி விட்டான். ஆனால் அழகேசுவரன் தைரியமாக அச்சேனனையையும் அதற்கு உதவியாகத் தமிழ் நாட்டிலிருந்து வந்த சேனைகளையும் சிதற அடித்து ஓடிப்போக வைத்தான். என்றாலும், சிங்களவரின் பலம் இதனால் குன்றி விட்டது எனலாம்.

எதிரிகள் முறியடிக்கப்பட்டதை அறிந்த ஐந்தாம் புவனேகவாகு மீண்டும் கம்பளைக்குத் திரும்பி வந்தான். ஓடிப்போன அவனை அரசனாக ஏற்க மக்கள் மறுத்தனர். அவனது சகோதரன் இரண்டாம் வீரவாகு இலங்கையரசனாகக் கம்பளையையும் மலை நாடுகளையும் ஆண்டு வந்தான். அவன் காலத்தில் சிங்கே என்னும் சீனச் சேனாதிபதி இலங்கைக்கு வந்தான். வீரவாகுவைத் தனக்குக் கீழ்ப்பட்டுத் திறை செலுத்துமாறு கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் வீரவாகு மறுக்கவே பெரிய சைனியத்துடன் வந்து அவனைத் தோற்கடித்தான். இலங்கை இராச வமிசத்தவனை ஆட்சியில் அமர்த்தி தங்களுக்குத் திறை செலுத்துமாறு ஏற்பாடு செய்து விட்டுச் சீனத்துக்குத் திரும்பி விட்டான் சேனாதிபதி சிங்கே.

## ஆறாம் பராக்கிரமவாகு

இதற்குப்பின் இலங்கையில் ஆண்ட சிறந்த அரசன் ஆறாம் பராக்கிரமவாகு (கி.பி. 1410-1462). சமயவர்த்த புரம் என்ற கோட்டைக் காடு அவனது தலைநகராய் விளங்கியது, அவன் மூன்று மாடியுடைய ஓர் ஆலயத்தைக் கட்டி அதனுள் புத்த தந்தத்தை மிகப் புனிதமாகப் பிரதிட்டை செய்தான். பௌத்த குருமாருக்குப் பொருள் வழங்கிஅவர்களை ஆதரித்தான். பௌத்த நூல்களின் பிரதி எழுதுபவர்களுக்கு ஆதர வளித்தான்.

பாரதத்தின் மேற்குக் கரையோரமாகவுள்ள கனரா தேசத்தரசன் ஒரு கப்பற் படையை அனுப்பி இலங்கையைக் கட்டுப்படுத்த முயன்றான். ஆனால் பராக்கிரமவாகு அந்தப் படையைச் சிதற அடித்து விரட்டி விட்டான். மலையாளத்துப் பிரதானி ஒருவன் பராக்கிரமவாகுவின் கப்பல் ஒன்றைக் கொள்ளை அடித்தான், அவன் ஊருக்கு ஒரு சேனையை அனுப்பி அவனைத் தோற்கடித்துத் திறை செலுத்தும்படிக் கட்டளையிட்டான். பராக்கிரமவாகு. கண்டிப் பகுதியை ஆண்ட அரசர்களில் ஒருவன் இவனது ஆட்சியை ஏற்க மறுக்கவே அவனை நீக்கிவிட்டு வேறொருவனை இவன் அரசனாக்கினான்.

தன் நாட்டிற்கும் தமிழர் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலுள்ள வன்னி என்னும் காட்டுப் பிரதேசத்தில் ஆட்சி புரிந்த தமிழர்களை வென்று தனக்குக் கப்பங் கட்டி வரும்படி ஏற்பாடு செய்தான். யாழ்ப்பாணத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் சம்புமளவன் என்பவன் மூலமாக அடக்கித் தன் ஆட்சிக்கு உட்படுத்தினான்.

ஆறாம் பராக்கிரமவாகு பெரிய வெற்றி வீரனாக விளங்கியதோடு நில்லாமல் கல்விமானாகவும் விளங்கினான். கோட்டைக்காட்டுக்கருகில் ஒரு பௌத்த கல்லூரியை நிறுவி அதில் ஸ்ரீராகுலா என்பவரை முக்கிய ஆசிரியராக நியமித்தான். அவர் பல மொழிகளைக் கற்ற வித்வான். காவியசேகரம் என்ற நூலை இயற்றினார்.

இவனுக்குப்பின் இவன் பேரன் மூன்றாம் சயவாகு பட்டத்திற்கு வந்தான். சம்புமளவன் என்ற பிரதானி இவனைக் கொன்றுவிட்டு ஆட்சியைக் கைப்பற்றினான். இவனுக்குப் பின்னால் பண்டித பராக்கிரமவாகு அரசாண்டான். சம்புமளவனுடைய சகோதரன் இவனை நீக்கிவிட்டுத் தானே எட்டாம் பராக்கிரமவாகு என்ற பெயருடன் அரசாண்டான். இவன் இருபது ஆண்டுகள் ஆட்சி புரிந்து இறந்தான். இவன் மூத்த மகன் தர்ம பராக்கிரமவாகு அதன்பின் பட்டத்திற்கு வந்தான். இவன் கி. பி. 1505 முதல் 1527 வரை அரசாண்டான். இவன் காலத்தில் போர்த்துகீசியர் இலங்கைக்கு வந்தனர். மெல்ல மெல்ல அவர்கள் தங்கள் அதிகாரத்தை இங்கே நிலை நாட்டினார்கள். இதற்குப் பின் சிங்களவரின் பலம் குன்றி விட்டது. அந்நியரின் ஆட்சிக்கு அவர்கள் அடிமையாயினர்.

## போர்த்துகீசியர்

இலங்கை பாரத நாட்டுடன் நீண்ட காலமாகத் தொடர்பு கொண்டிருந்த நாடு. தமிழர் பலமுறை இலங்கைமீது படை எடுத்துச் சென்று யாழ்ப்பாணத்தில் ஒரு தனி இராச்சியத்தை நிறுவிக் கொண்டனர். சீனர்களும் இலங்கையின் மீது படையெடுத்து வந்தனர். இவர்கள் அனைவரும் ஆசிய நாட்டினர். ஐரோப்பாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டத்தைச் சேர்ந்த போர்த்துக்கீசியர் பதினாறாம் நூற்றாண்டில் இலங்கையை அடைந்தனர்.

மிகப் பழங்காலத்திலிருந்தே சீனாவிலிருந்து பட்டும், பாரசீகத்திலிருந்து குதிரைகளும், இந்தியாவிலிருந்து மிளகு, பித்தளை முதலிய சாமான்களும் காலி, கொழும்பு ஆகிய துறைமுகங்களில் வந்து இறங்கும் இலங்கையில் யானைகளும் சிறந்த கருவாப்பட்டையும் கிடைத்து வந்ததால் அரேபியர் அங்கு வியாபார நிமித்தம் வந்து கொண்டிருந்தனர். இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் பெற்ற இரத்தினங்கள், வாசனைத் திரவியங்கள் ஆகியவற்றை அவர்கள் மேனாட்டவருக்கு விற்று வந்தனர்.

போர்த்துகல் தேசம் ஐரோப்பாக் கண்டத்தின் மேற்கத்திய நாடு. அவர்களுடைய மாலுமி ஒருவனான வாஸ்கோடகாமா என்பவன் இந்தியாவிற்குச் செல்ல நன்னம்பிக்கை முனை வழியாகக் கடல் மார்க்கம் ஒன்றைக் கண்டு பிடித்தான். இந்தியாவுடன் அராபியரைப்போல வியாபாரம் செய்து இலாபம் அடைய வேண்டுமென்று அவர்கள் நினைத்தனர். எனவே, இந்தியாவின் மேற்குக் கரையோரமாக உள்ள நாடுகளுடன் வியாபாரம் செய்ய முன் வந்தனர். இதனால் அவர்கள் அராபியருடன் போட்டியிட வேண்டியிருந்தது.

பெரிய கப்பற் படையுடன் ஆல்புகர்க் என்ற போர்த்துகீசியத் தளபதி பம்பாய்க்கருகிலுள்ள கோவாவில் வந்திறங்கி ஓர் இராச்சியத்தை அங்கே தாபித்தான். அவர்கள் நாளடைவில் மலாக்கா வரையில் வியாபாரம் செய்யத் தொடங்கினர்.

பிரான்ஸிக்கேடி அல்மேடா என்பவன் கோவாவில் போர்த்துகீசிய இராசப் பிரதிநிதியாக இருந்தான். இலங்கையின் மீது படை எடுத்துச் செல்லும்படி அவருக்குப் போர்த்துகலிலிருந்து ஆணை பிறந்தது. ஆல்மேடா கி. பி. 1506-இல் ஒரு படையுடன் காலியில் கப்பலில் வந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறங்கினான். அப்போது தர்மபராக்கிரமவாகு கொழும்புக்கருகிலுள்ள கோட்டைக் காட்டில் இருந்துகொண்டு அரசு புரிந்து வந்தான்.

போர்த்துகீசியர் கவசங்கள் அணிந்து துப்பாக்கி முதலியவைகளை உபயோகித்து வந்தனர் என்று பராக்கிரமவாகுவுக்குச் செய்தி எட்டியது. மேலும் அவர்கள் பொற்காசுகள் கொடுத்து மீன் முதலிய பண்டங்களை வாங்கித் தின்றனர் என்று அறிந்தான். மந்திரிகளின் ஆலோசனையின்பேரில் அவர்களுடன் நட்புக்கொள்வது நலமென்று கருதி அவர்களைச் சபைக்கு வரவழைத்துஉபசரித்தான். ஆண்டுதோறும் ஓரளவு கருவாப்பட்டையைப் போர்த்துகீசியருக்கு அளிக்க அரசன் ஒப்புக்கொண்டான். அதற்குப் பதிலாக நாட்டைப் பகைவரிடமிருந்து பாதுகாக்கும் பொறுப்பை அவர்களுக்குக்கொடுத்தான். போர்த்துகீசியர் அதை ஒப்புக்கொண்டனர். கருவாப்பட்டையும் கோவாவுக்குக் கப்பலில் எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து தாய்நாட்டிற்குச் சென்றது.

கி. பி. 1518-இல் பல கப்பல்களுடன் அவர்கள் இலங்கையை அடைந்தனர். கொழும்புவில் ஒரு மண் கோட்டையைக் கட்டிக்கொண்டார்கள். பிறகு நாளடைவில் கரையோரங்களிலுள்ள நகரங்களைத் தங்கள் வசமாக்கிக்கொண்டனர். ஆனால் இலங்கை மன்னனால் இதைத் தடுக்க முடியவில்லை. கோட்டைகளையும் கிறித்துவக் கோயில்களையும் அவர்கள் அங்கங்கே கட்டிக்கொண்டனர். சிங்களவர் பலரைத் தங்கள் மதத்தில் சேர்த்துக்கொண்டனர்.

அரசன் அவர்களுடன் போர் செய்து தோற்றான். கருவாப்பட்டை, இரத்தினங்கள், யானைகள் ஆகியவற்றை அவர்களுக்குத் திறையாக அளித்துச் சமாதானம் செய்துகொண்டான். கி. பி. 1520-இல் பிறிற்றோ என்று போர்த்துகீசியன் இலங்கைக்கு வந்து பழைய மண் கோட்டையைக் கட்டிக்கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்ம பராக்கிரமவாகுவுக்குப் பின் அவனுடைய சந்ததியார்களுக்குள் அரசுரிமைப்பற்றி அடிக்கடிசச்சரவுகள் ஏற்பட்டன. இவர்களுள் அவனுடைய பேரன் புவனேகவாகு போர்த்துகீசியர் உதவியுடன் ஆண்டான். ஆனால் சிங்கள அரச வமிசத்தவர் தனித் தனியாகப் பல சிறிய இராச்சியங்களாக பிரிந்து ஆட்சி செலுத்தி வந்தனர். போர்த்துகீசியர் சிங்களவரைக் கொடுமைப்படுத்தி அக்கிரமமான வரிகளை வசூலித்தனர். இதனால் சிங்களவர் இராச்சியம் கண்டிக்கு மாறிவிட்டது.

புவனேகவாகுவின் பேரன் தொன் சுவான் என்ற பெயருடன் போர்த்துகீசியரால் இலங்கை மன்னனாக் முடி சூட்டப் பெற்றான். போர்த்துகீகியர் கிறித்துவ மதத்தைப் பரவச் செய்வதில் கண்ணுங் கருத்துமாயிருந்தனர். ஆனால் யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்த சங்கிலி என்பவன் இதைப் பலமாக எதிர்த்தான். கிறித்துவ மதத்தவர் பலரை அவன் கொன்றான். தன் மகன் கிறித்துவனானதை அறிந்து அவனையும் கொன்றான்.

அப்போது அர்ச் சவேரியர் என்ற கிறித்துவப் பாதிரியார் இலங்கையை அடைந்து யாழ்ப்பாணம், மன்னார் முதலிய இடங்களில் மதப் பிரசாரம் செய்தார். மதத்தைப் பரவச் செய்ய சங்கிலி இடையூறாக இருக்கக் கூடாதென்று அவனுடன் உடன்படிக்கை செய்து கொண்டார்.

சங்கிலியின் ஆட்சி கொடுமை நிறைந்ததாயிருந்தது. எனவே அவனுடைய சிற்றப்பன் பரநிருப சிங்கனும், நண்பன் காக்கை வன்னியனும் போர்த்துகீசியருடன் இரகசிய உடன்படிக்கை செய்து கொண்டு சங்கிலியின் ஆட்சியைத் தந்திரமாக ஒழித்துக் கட்டினார்கள். கொடுங்கோலன் என்று குற்றஞ்சாட்டி அவனைக் கி. பி. 1580-ஆம் ஆண்டில் சிரச்சேதம் செய்துவிட்டனர்.

அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் விறுவிறுப்பாக ரோமன் கத்தோலிக்க மதத்தைப் பிரசாரம் செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

99863

போர்த்துகீசியர். இதில் பலாத்காரத்தையும் அவர்கள் கையாண்டனர். சைவ மடங்களை அழித்து மாதா கோயில்களைக் கட்டினார்கள்.

தொன் சுவானின் தம்பி மாயதுன்னை போர்த்துகீசியரை இலங்கையை விட்டுத் துரத்திவிட முயற்சி செய்தான். கண்டியிலிருந்த போர்த்துகீசியரைச் சிங்களவர் சித்திரவதை செய்தனர். போர்த்துகீசியர் தொன் சுவானை ஒரு படையுடன் மாயதுன்னையை எதிர்த்துச் செல்லும்படி ஏவினர். ஆனால் மாயதுன்னையின் மகன் திகிரி பண்டா அவர்களை எதிர்த்துச் சென்றான். மாயதுன்னை கோட்டைக் காட்டை முற்றுகையிட்டான்.

திகிரிபண்டா தன் தந்தையைக் கொன்று விட்டு கி.பி. 1581-இல் இராசசிங்கன் என்று பெயர் பூண்டு சீதவாக்கையிலிருந்து அரசு புரிந்தான். போர்த்துகீசியர் அவனை எதிர்த்துச் சென்றனர். ஆனால் அவர்களை முல்லேரியா என்னும் இடத்தில் சிதற அடித்து விரட்டியடித்தான் இராசசிங்கன். உள் நாட்டில் கலகத்தை அடக்க அவன் சென்றிருந்தபோது போர்த்துகீசியர் யாழ்ப்பாணத்தைக் (கி.பி.1591இல்) கைப்பற்றிக்கொண்டனர். வீரவாகு என்பவன் கண்டியை ஆண்டு கொண்டிருந்தான். அவனைக் கிறித்துவனாக்கினார்கள் போர்த்துகீசியர்.

இராசசிங்கன் புத்த மதத்தைக் கைவிட்டுச் சைவ மதத்தைப் பின்பற்றினான். சிவனொளிபாத மலையிலிருந்த புத்த ஆலயத்தைச் சைவரிடம் ஒப்புவித்தான். தன் நண்பன் ஒருவனாக சுந்தர பண்டா என்பவனை அநியாயமாகக் கொன்று விட்டான். அவன் மகன் கோணப்பு பண்டா போர்த்துகீசியரிடம் முறையிட்டான். அவன் மூலமாக உள் நாட்டில் கலகத்தை உண்டாக்கினார்கள். போர்த்துகீசியர். கோணப்பு பண்டா தொன் சுவான் என்று பெயர் பூண்டு கிறித்துவ மதத்தைத் தழுவினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரவாகு என்பவனைத் தொன் பிலிப்பு என்ற பெயருடன் கண்டிக்கு அரசனாக்கினார்கள் போர்த்து கீசியர். அது கோணப்பு பண்டாரவுக்கு வெறுப்பை அளித்தது. அவன் போர்த்துகீசியரை எதிர்த்துச் சென்று அவர்களைத் தோற்கடித்துப் பலரைச் சிறைப் படுத்தினான். அதன் பின்னர் இராசசிங்கனை எதிர்த்துச் சென்றான். அவனைப் படுகாயப் படுத்தித் தோற்கடித்தான். இராசசிங்கன் (கி.பி. 1592-இல்) இறக்கவே கிறித்துவ மதத்தைத் துறந்து பௌத்த மதத்தைத் தழுவி விமல தர்மன் என்ற பெயருடன் அரசனானான். கண்டி மன்னன் வீரவாகுவை நஞ்சூட்டிக் கொன்று தானே கண்டியிலிருந்து இலங்கை மன்னனாக ஆட்சி புரிந்தான்.

வீரவாகுவின் மகள் தொனா கதரினா என்பவளைக் கண்டி ராணியாக்கினான். போர்த்துகீசியக் கப்பற் படைத் தலைவனொருவன். ஆனால் விமலதர்மன் போர்த்துகீசியரைத் தோற்கடித்து, தொனாகதரினாவை மணந்து கண்டியின் தலைவனானான்.

கி. பி. 1603-இல் போர்த்துகீசியர் விமலதர்மனுடன் போர் தொடுத்தனர். அவர்களை ஓட ஓட விரட்டியடித்துத் துரத்தினான் விமலதர்மன். அவர்கள் கொழும்பிற்குத் தப்பியோடிவிட்டார்கள் அது முதல் கரையோரத்திலிருந்து வியாபாரம் செய்து வந்தனர்.

## ஆலந்து நாட்டு டச்சுக்காரர்கள்

ஆலந்து நாட்டினர் போர்த்துகீசியரிடமிருந்து கிழக்குத் தேசத்துச் சாமான்களை வாங்கி வந்தனர். இந்தியாவிற்குச் செல்லும் மார்க்கத்தைப்போர்த்துகீசியர் இரகசியமாகவே வைத்திருந்தனர். ஆனால் ஆலந்து தேசத்தினர் கிழக்கு இந்திய வர்த்தக சங்கம் என்ற சங்கத்தைத் தோற்றி இந்தியாவுடன் வியாபாரம் செய்ய முயன்றனர். கி.பி. 1602-இல் ஸ்பில்பர்ஜன் கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் வழியை அறிந்துகொண்டு மட்டக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களப்பில் வந்து இறங்கினான். அவனை மக்கள் அன்புடன் வரவேற்றனர்.

அரசன் விமலதர்மன் கண்டியிலிருப்பதை அறிந்து ஸ்பில் பர்ஜன் அவனைக் காணச் சென்றான். போர்த்துகீசியரை ஒல்லாந்தர்களின் உதவியால் நாட்டைவிட்டுத் துரத்திவிடலாம் என்ற எண்ணத்தினால் அவர்களை இலங்கையில் கோட்டை கட்டிக் கொண்டு வியாபாரம் செய்ய அநுமதித்தான் விமலதர்மன்.

அடுத்த ஆண்டில் சிபால் பீ வீரத் என்ற ஒல்லாந்தர் சேனைத் தலைவன் போர்த்துகீசியக் கப்பல்கள் சிலவற்றைக் கைப்பற்றிப் பின்னர் விட்டுவிட்டான். இதை விமலதர்மன் விரும்பவில்லை. எனவே, அவன் வீரத் என்பவனைக் கொலை செய்து ஒல்லாந்துரை விலக்கிவிட்டான்.

விமலதர்மனுக்குப் பின் அவன் மனைவி தொனா கதிரனா அரசாட்சியை ஏற்றுக்கொண்டாள். அவள் ஊவா நாட்டுச் செனரதன் என்பனை மணந்துகொண்டாள். செனரதன் கி. பி. 1612-இல் ஒல்லாந்தருடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டான். திருக்கோணமலையின் அருகில் உள்ள கொட்டியாரத்தில் ஒல்லாந்தருக்கு ஒரு கோட்டை கட்டிக் கொடுத்தான். அவர்கள் இலங்கையில் தயக்கமில்லாமல் வர்த்தகம் செய்ய அநுமதிக்கப்பட்டனர்.

போர்த்துகீசியர் சைமன் கோரியாவின் தலைமையில் கொட்டியாரத்திற்கு ஒரு பெரும்படையை அனுப்பினர். அந்தப் படை கோட்டையை இடித்துப் பல ஒல்லாந்தரைக் கொன்றது. ஆனால் திரும்பும் வழியில் அவர்களைச் செனரதன் எதிர்த்துப் பலரைக் கொன்றான். அதன் பின்னர் ஒல்லாந்தர் செனரதனுக்கு உதவி செய்ய மறுக்கவே டேனியர் உதவியை அவன் நாடினான். டேனியர் படை இலங்கையில் வந்தபோது அவர்கள் உதவியை ஏற்கச் செனரதன் மறுத்துவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்.

இது போர்த்துகீசியருக்குச் சாதகமாயிற்று. அவர்கள் திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் கோட்டைகள் கட்டிக்கொண்டு தங்களைப் பலப்படுத்திக் கொண்டனர். தொன் சுவான், தர்மபாலன் இறக்கும் போது, தனக்குப்பின் இலங்கை அரசாட்சி போர்த்துகீசியரைச் சேர வேண்டும் என்று மரண சாசனம் எழுதி வைத்து இறந்தான். போர்த்துகீசியர் யாழ்ப்பாணத்திலும் ஒரு கோட்டையைக் கட்டிக் கொண்டனர்.

டேசா என்பவன் தலைமையில் செனரதன்மேல் கண்டியை நோக்கி ஒரு படையைப் போர்த்துகீசியர் அனுப்பினர். செனரதன் ஊவாவுக்கு ஓடிவிட்டான். போர்த்துகீசியர் பல கிராமங்களைத் தீக்கிரை ஆக்கி விட்டு ஊவாக்கருகில் தங்கியிருந்தனர். அவர்களைத் திடீரென்று செனரதன் சூழ்ந்துகொண்டு தாக்கினான். சிங்களவர் பலர் அவன் பக்கம் சேர்ந்துகொண்டனர். டேசா கொல்லப்பட்டான். அதன் பின்னர்ப் போர்த்துகீசியர் சமாதானம் செய்துகொண்டனர். செனரதனுடைய மகன் இராசசிங்கனே இந்த வெற்றிகளுக்கு மூல காரணமானவன்.

விமலதர்மனின் குமாரர்கள் மாந்தளை, ஊவா என்ற நாடுகளை ஆண்டு வந்தனர். தந்தைக்குப் பின் இராசசிங்கன் கண்டியின் அரசனானான். ஆனால் போர்த்துகீசியர் உபத்திரவம் பொறுக்கக் கூடியதாயில்லை. எனவே, இந்தியாவில் பழவேற்காட்டில் கோட்டை கட்டிக்கொண்டிருந்த ஒல்லாந்தரின் உதவியை இராசசிம்மன் நாடினான். இதை அறிந்த போர்த்துகீசியர் கண்டியின்மீது படையெடுத்துச் சென்று ஊரை எரியூட்டிப் பாழாக்கினார்கள். ஆனால் இராசசிங்கன் அவர்களை வழி மறித்துத் தோற்கடித்துப் பலரைக் கொன்றான். அவர்களில் மீண்டவர் மிகச் சிலரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் போருக்குப் பின்னர் கோள்டர் என்ற ஒல்லாந்தர் தளபதி மட்டக்களப்பில் வந்திறங்கினான். இராசசிங்கனின் சேனை அவனுடன் சேர்ந்து கொண்டு அங்கிருந்த போர்த்துகீசிய சேனையைச் சிதற அடித்து விரட்டியது. இராசசிங்கன் ஒல்லாந்தருடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டான். அதன்படி ஒல்லாந்தர்கள் இராசசிங்கனுக்கு உதவி புரிய வேண்டும். படைச்செலவுக்காக அரசன் பணங்கொடுத்தான். ஒல்லாந்தர் தனியே வியாபாரம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். வேறொருவருடனும் அரசன் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்பது நிபந்தனை.

ஒல்லாந்தர் திருக்கோணமலை, நீர்க்கொழும்பு, காலி, மாந்துறை முதலிய இடங்களைத் தங்களுடையதாக்கிக்கொண்டனர். இதை அறிந்த இராசசிங்கன் அவர்கள் இலங்கையைக் கைப்பற்ற எண்ணங் கொண்டுள்ளார்களென்று எண்ணிப் படைச் செலவுகளைக் கொடுக்க மறுத்துவிட்டான். ஒல்லாந்தரை அவன் சட்டை செய்யவில்லை. என்றாலும், அவர்கள் கரையோரங்களில் தங்கள் வியாபாரத்தை இலாபகரமான முறையில் நடத்திக் கொண்டிருந்தனர்.

அடிக்கடி போர்த்துகீசியரும் ஒல்லாந்தரும் வியாபாரப் போட்டியால் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். இராசசிங்கன் கண்டியில் தனியே ஆட்சி புரிந்துவந்தான். கொழும்புக் கோட்டை போர்த்துகீசியர் வசம் இருந்தது. அதை ஒல்லாந்தர் முற்றுகையிட்டனர். இராசசிங்கனும் ஒரு படையுடன் சென்று அக் கோட்டையைத் தாக்கினான். போர்த்துகீசியர் வலியிழந்து கோட்டையை ஒல்லாந்தரிடம் ஒப்படைத்தனர். அதன் பின்னர்ப் போர்த்துகீசியர் ஆட்சி இலங்கையில் குன்றிவிட்டது. ஒல்லாந்தர் கரையோரமுள்ள நாடுகளில் ஆதிக்கம் செலுத்திக்கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருந்தனர். அக்காலத்தில் நொக்ஸ் என்ற ஆங்கிலேயர் இலங்கையில் திருக்கோண மலைக்கருகில் வந்திறங்கினார். அவரையும் அவருடன் வந்தவர்களையும் இராசசிங்கன் சிறையில் அடைத்து விட்டான். சில ஆண்டுகள் கழித்து அவர்கள் சிறையிலிருந்து தப்பியோடி விட்டனர்.

## ஆங்கிலேயர் வருகை

ஒல்லாந்தர்கள் மாந்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வரை மேற்குக் கரையோர நாடுகளை அரண் செய்து கொண்டு வர்த்தகம் செய்து வந்தனர். ஆனால் அராபியரின் போட்டியை அவர்களால் தடுக்க முடியவில்லை. அவர்கள் பல பள்ளிக்கூடங்கள் நிறுவிக் கிறித்துவ மதப் பிரசாரம் செய்தார்கள். மக்களிடம் வரி விதித்து, கருவா, ஏலம் முதலிய பொருள்களை அபகரித்தனர்.

இராசசிங்கன் ஆட்சி கண்டியில் கொடுங்கோல் ஆட்சியாக இருந்தது. மக்கள் கலகம் செய்யவே அவன் மலை நாட்டிற்கு ஓடிவிட்டான். அவனுடைய பன்னிரண்டு வயதுள்ள மகனை அரசனாக்கினார்கள் குடிகள். ஆனால், இராசசிங்கன் மீண்டும் வந்து சிங்காதனத்தைக் கைப்பற்றிக் கொண்டான். அப்போது இங்கிலாந்திலிருந்து ஒருபிரபு இலங்கைக்கு வந்தார். பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையே இந்தியாவில் போர் நடந்து வந்தது. சில பிரெஞ்சுக்காரர்கள் இராசசிங்கனிடம் சென்று விலையுயர்ந்த காணிக்கைகளுடன் அவனைப் பேட்டி கண்டனர். திருக்கோண மலையில் ஒரு கோட்டை கட்டிக்கொள்ளும்படி அரசன் அவர்களுக்கு அநுமதி தந்தான். ஆனால் அந்தக் கோட்டையை ஒல்லாந்தர் சிறிது நாளில் கைப்பற்றிக் கொண்டனர்.

இராசசிங்கனுக்குப் பின் அவன் மகன் மகாத்தன் விமலதர்மன் கி.பி. 1687-இல் பட்டத்திற்கு வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மதுரை அரச குமாரியை மணந்தான். அவன் காலத்தில் ஒல்லாந்தர் மிகுந்த செல்வாக்கடைந்தனர். அரசன் அவர்களுடன் நட்புக் கொண்டிருந்தான். ஒல்லாந்தர்கள் தாங்களும் இலங்கையில் உரிமை பெற்றவர்கள் என்று கூறிக்கொண்டு செயல் புரிந்து வந்தனர். அரசன் கி.பி. 1707-இல் இறந்தபோது அவன் மகன் வீர பராக்கிரம நர ராசேந்திர சிங்கன் பட்டத்திற்கு வந்தான். இவன் முதலில் கொடியவனா யிருந்து பின்னர்த் திருந்தி நல்லாட்சி செய்தான். இவன் மதுரை அரச குமாரியை மணம் புரிந்தான். இவனே இலங்கையின் கடைசிச் சிங்கள அரசன். புத்திர சந்தானம் இல்லாமல் இவன் இறந்தபோது இவனுடைய மனைவியின் சகோதரன் ஸ்ரீ விக்ரம ராச சிங்கன் கி. பி. 1739-இல் அரசனானான். இவன் மதுரை அரசகுமாரியை மணந்தான். புத்திரன் இல்லாமல் கி.பி. 1747-இல் இவனும் இறந்தான்.

இவனுக்குப் பின் இவன் சகோதரன் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் அரசனானான். இவனுடன் போர் தொடுத்துக் கி. பி. 1761-இல் கண்டியைக் கைப்பற்றிக் கொண்டனர் ஒல்லாந்தர். அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு நாட்டை ஆண்டான் இவன்.

இதே காலத்தில் ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர் களுடன் போரிட்டு இந்தியாவில் சென்னை, வங்காளம் முதலிய இடங்களில் தங்கள் ஆதிக்கத்தை நிறுவி யிருந்தனர். இலங்கை உலக முழுவதற்கும் நடு நாயக வர்த்தக பீடமாய் அமைந்திருந்தது. ஒல்லாந்தர் இலங்கையில் ஏக போக உரிமையாக வியாபாரம் செய்து வந்தனர். கி. பி. 1782-இல் இங்கிலாந்துக்கும் ஒல்லாந்துக்கும் யுத்தம் ஆரம்பமாயிற்று. கி. பி. 1795 இல் திருக்கோணமலைக்கு ஒரு படையை அனுப்பி ஒல்லாந்தரின் கோட்டையை ஆங்கிலேயர் கைப்பற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிக் கொண்டனர். அதன் பின்னர் யாழ்ப்பாணத்தை ஆங்கிலேயர் மெல்லக் கைப்பற்றிக் கொண்டனர். அடுத்த ஆண்டில் கொழும்பு அவர்கள் வசமாகியது. ஒல்லாந்தரிடமிருந்து காலியையும், நீர்த் துறையை யும் அவர்கள் பெற்றுக் கொண்டனர்.

கண்டி நாடு மாத்திரம் இராசாதிராசசிங்கன் கையில் இருந்தது. அவன் கி.பி. 1798-இல் இறந்தான். இங்கிலாந்து அரசரான மூன்றாம் ஜார்ஜ், பிரடெரிக் நார்த் என்பவரை இலங்கையின் தேசாதிபதியாக நியமித்தார்.

இராசாதிராசசிங்கனுடைய மனைவியருள் உபேந்திரை என்பவளுடைய சகோதரிக்கு ஒரு புதல்வன் இருந்தான். அவன் கல்வியறிவு இல்லாதவன். அவனைப் பெயருக்கு அரசனாக்கித் தானே நாட்டை ஆள எண்ணினான். முதல் மந்திரி பிலா மைத்தலாமை. ஸ்ரீ விக்கிரமராசசிங்கன் என்ற பெயரோடு அவனை அரசனாக்கினான் முதல் மந்திரி. எதிர்த்தவர்களைச் சிறையிலிட்டும் கொன்றும் அவன் பழி தீர்த்துக் கொண்டான்.

உபேந்திரையின் சகோதரன் முத்துசாமி என்பவன் ஆங்கிலேயரிடம் சரண் புகுந்தான். அவனுடைய இரண்டு பெண்களையும் பலாத்காரமாக மணந்து கொண்டான் அரசன். மந்திரி பிலா மைத்தலாமை ஆங்கிலேயருக்கு ஒரு கடிதம் எழுதினான். தனக்கு அரச பதவியளிப்பதானால் கண்டி அரசனைக் கொன்று விடுவதாக எழுதியிருந்தான். அரசனைக் கொலை செய்ய அவர்கள் உடன்படவில்லை. ஆகவே ஆங்கிலே யருக்கு அரசன்மீது பகைமை உண்டாக்க முற்பட்டான் பிலா மைத்தலாமை. ஆங்கிலேயருக்கு எதிராக மக்க ளைக் கலகம் செய்யும்படித் தூண்டினான். புத்தளத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்த சோனகரின் சரக்குகளைக் கொள்ளையடித்தான். சோனகர் ஆங்கிலேயருக்குக் கீழ்ப்பட்டிருந்தனர். நஷ்ட ஈடு கொடுக்கும்படி ஆங்கிலேயர் அரசனைக் கேட்டனர். அரசன் மறுக்கவே அவனை எதிர்க்க ஒரு சேனையைக் கண்டிக்கு அனுப்பினர்.

அரசனும் பிலாமைத்தலாமையும் கண்டிக்கு ஓடிவிட்டனர். ஆங்கிலேயர் முத்துசாமியை அரசனாக்கினார்கள். ஒரு சேனையை அவனுக்கு உதவியாகக் கண்டியில் வைத்தனர். பிலாமைத்தலாமை ஸ்ரீவிக்கிரமனைப் பிடித்துக் கொடுப்பதாக ஆங்கிலேயருக்கு எழுதினான். அவர்கள் சேனை அனுப்பியபோது அவர்களை அங்குமிங்குமாக அலக்கழித்தான். அதற்குள் ஸ்ரீவிக்கிரமன் ஓடிவிட்டான். பிலாமைத்தலாமைமீது ஆங்கிலேயருக்குச் சந்தேகம் உண்டாயிற்று. மேலும் அவன் நார்த்தைச் சிறைப்படுத்தப் பார்த்தது இதை உறுதிப்படுத்தியது.

இதற்குள் ஸ்ரீ விக்கிரமன் பெருஞ்சேனையுடன் வந்து ஆங்கிலேயரைத் தாக்கிப் பலரைப் படுகாயப் படுத்தினான். ஆங்கிலச் சேனை முத்துசாமியுடன் புறப்பட்டுத் திருக்கோண மலையை நோக்கித் திரும்பிச் சென்றது. வழியில் அவர்களைத் தந்திரமாகக் கண்டிக்கு வரவழைத்தான் ஸ்ரீ விக்கிரமன். முத்துசாமியைச் சிரச்சேதம் செய்து ஆங்கிலேயர் பலரைச் சித்திரவதை செய்தான். சிலரைத் தூக்கில் இட்டான். அவர்கள் கையில் இருந்த நாடுகளையும் கைப்பற்றிக்கொண்டான்.

இந்தக் கொடுமைகளை அறிந்த ஆங்கிலேயர் இந்தியாவிலிருந்து உதவிக்குப் படையைத் தருவித்தனர். உள் நாட்டில் பல கலகங்கள் ஏற்பட்டதைத் 'தடுக்கப் பிலாமைத்தலாமையின் உதவியை அரசன் நாடினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலர் மைத்தலாமை அந்தக் கலகத்தை அடக்கினான். அவன் நடத்தையில் நேர்மை இல்லை என்று அறிந்து அரசன் அவனையும் அவன் குடும்பத்தினரையும் சிரச்சேதம் செய்துவிட்டான்.

சர் ராபர்ட் பிரவுன்ரிக் கி.பி. 1812-இல் தேசாதிபதியானார். கண்டியில் அரசனுக்கு ஏகேலப்பலை, முள்ளிக்கொடை ஆகியோர் மந்திரிகளாயிருந்தனர். ஏகேலப்பலை, நல்ல முறையில் நடந்து கொண்டிருந்தும் அரசனுக்கு வன்மீது நம்பிக்கை இல்லை. இதை அறிந்த ஏகேலப்பலை பகைமை கொண்டு ஆங்கிலேயருடன் உறவு கொண்டான். அரசனுக்குத் திரட்டப்பட்ட வரியை அனுப்பாமல் விட்டுவிட்டான். அவனைக் கண்டிக்கு வந்து போகும்படி அரசன் உத்தரவிட்டான். ஏகேலப்பலை அந்த உத்தரவைச் சட்டை செய்யவில்லை. அவனைப் பதவியினின்றும் நீக்கிவிட்டு முள்ளிக்கொடையை முதல் மந்திரியாக நியமித்தான் அரசன். ஏகேலப்பலையைச் சிறைப்பிடிக்க ஆளை அனுப்பியபோது அவன் ஓர் ஆங்கிலேயரிடம் சரணம் அடைந்துவிட்டான். வெறி கொண்ட ஸ்ரீவிக்கிரமன் ஏகேலப்பலையின் மனைவி மக்களைக் குரூரமாகக் கொன்றான். இந்தச் செய்கையைக் கண்டு கண்டி மக்கள் பீதியும் கலக்கமும் அடைந்தனர்.

ஏகேலப்பலை ஆங்கிலேயரிடம் இதைப்பற்றி முறையிட்டுக் கொண்டான். வர்த்தகத்தின் பொருட்டுக் கண்டிக்குச் சென்றிருந்த சில சோனகர்களின் காதையும் மூக்கையும் அரசன் அறுக்கச் செய்தான். தன் படைகளை அனுப்பி ஆங்கிலேயர் உள்ள இடங்களில் தீயிடும்படி ஏவினான். உள் நாட்டில் அவன் செய்த அக்கிரமங்களுக்குக் கணக்கில்லை. காரணமில்லாமல் சந்தேகம் கொண்டு சிலரைக் கடுமையாகத் தண்டித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருக்கு எந்த நிமிஷத்தில் என்ன நேருமோ என்று அனைவருக்கும் நெஞ்சில் அச்சம் குடி கொண்டிருந்தது.

கி.பி. 1815-இல் ஆங்கிலேயர் கண்டியை நோக்கிப் படையெடுத்துச் சென்றனர். கண்டி நகர மந்திரிகள் ஆங்கிலேயர்களுடன் சேர்ந்து கொண்டனர். மத சம்பந்தமான விஷயங்களில் தலையிடுவதில்லையென்று தேசாதிபதி கூறியதும், மக்கள் ஆதரவு ஆங்கிலேயருக்குப் பெருகியது. முள்ளிக் கொடையும் ஆங்கிலேயருடன் சேர்ந்து கொண்டான். ஸ்ரீ விக்கிரமன் மனைவியருடன் தும்பறை என்னும் இடத்திற்கு ஓடி மலையில் ஒளிந்து கொண்டான். ஆனால் அவனை ஏகேலப்பலையின் ஆட்கள் பிடித்து ஆங்கிலேயரிடம் ஒப்புவித்தனர்.

கண்டியில் பிரவுன்ரிக் தலைமையில் ஒருசபைகூடியது. ஏகேலப்பலை, முள்ளிக் கொடை மற்றும் நாட்டுப்பிரபுக்கள் அனைவரும் சபையில் கூடியிருந்தனர். எல்லோரும் ஓர் உடன்படிக்கை எழுதி அதில் கையெழுத்திட்டார்கள். ஸ்ரீவிக்கிரமன் ஆட்சியினின்றும் நீக்கப்பட்டான். கண்டி இராச்சியம் ஆங்கிலேயருடையதாயிற்று. நாட்டின் சட்டங்களைப் புதிய அரசியலார் மாற்றக் கூடாதென்றும் மத விஷயங்களில் அவர்கள் தலையிடக் கூடாதென்றும் முடிவாயிற்று. அதிகப்படி வரிகள் விதிப்பதில்லை என்று ஆங்கிலேயர் உறுதி கூறினர். இந்த ஒப்பந்தம் முடிந்ததும் இலங்கை ஆங்கிலேயர் வசமாயிற்று. அவர்கள் கொடி நாடு முழுவதும் பறந்தது. இரண்டாயிரம் ஆண்டுகள் ஆண்ட சிங்களவர் இராச்சியம் மாறி ஆங்கிலேயர் ஆட்சி இலங்கையில் நிலவியது. கி.பி 1816-இல் ஸ்ரீவிக்கிரமன் இந்தியாவில் வேலூருக்குக் கப்பலில் அனுப்பப்பட்டான். அவன் கி.பி. 1832-இல் வேலூரில் இறந்தான்.

இலங்கையின் நிர்வாகம் இராசப்பிரதிநிதி, பிரதம நீதிபதி, பொக்கிஷதார் ஆகிய மூவர் கூடிய கமிட்டியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் இருந்தது. பல உத்தியோகத்தர்கள் அதிகாரி களாக நியமிக்கப்பட்டனர் ஆங்கிலேயத் தானாபதி ஒருவரும் படையொன்றும் கண்டியில் இருந்தன. ஏசே லப்பலை முதல் அதிகாரத்தை மறுக்கவே முள்ளிக் கொடைக்கு அது வழங்கப்பட்டது.

நாட்டில் அமைதி நிலவியதென்றாலும் அந்நிய ராட்சியைச் சிங்களவர் வெறுத்தனர். மந்திரிகளுக்கு அதிகமான வருமானம் கிடைக்கவில்லை. பழக்க வொழுக்கங்களால் மாறுபட்ட இரு சமூகத்தினருக்கும் இடையே மாச்சரியம் ஏற்பட்டது. ஒரு போலி மனிதன் தான் கண்டிக்கு அரசன் என்று கலகம் செய்தான். அவனுடன் சிலர் சேர்ந்து கொண்டனர். ஆனால் கலகத்தை விரைவில் ஒடுக்கி மூல காரணமானவர்களை ஆங்கிலேயர்கள் தண்டித்தனர்.

அதன் பின்னர் ஆங்கிலேயர் அப்போதுள்ள சட்டங்களைச் சிறிது மாற்றி நீதி விசாரணைக்கு ஆங்கி லேயப் பிரமுகர்களை நியமித்தார்கள். பழைய வரிகளை நீக்கி நல்ல முறையில் நிர்வாகத்தை நடத்தி மக்களின் நம்பிக்கையைப் பெற்றனர். அவ்வப்போது நேர்ந்த கலகங்களைச் சாமர்த்தியமாய் அடக்கி நாட்டில் பல நன்மைகளைச் செய்தனர், பின்னால் வந்த பிரதி நிதிகள்.

இந்த இராசப்பிரதிநிதி பிரிட்டிஷ் அரசருடைய பிரதிநிதியாய் ஆட்சி செய்பவர். அவர் ஐந்து ஆண்டுக் காலம் பதவி வகிப்பார். பின்னர் வேறொருவர் அனுப்பப்படுவார். அவருக்கு உதவி செய்ய இரண்டு சபைகள் இருந்தன. இந்தச் சபை கள் நாட்டில் புதிய சட்டத்தை நிறைவேற்றி, வரு வாயைக் கொண்டு எவ்வாறு நிர்வாகத்தை நடத்துவது என்பது பற்றித் தீர்மானங்கள் செய்யும். இந்தச் சபைகளில் ஒன்றில் சனப் பிரதிநிதிகளே அதிகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டங்களை அநுமதிப்பதற்கும் தள்ளி விடுவதற்கும் தேசாதிபதிக்கு உரிமை உண்டு. ஆனால் இந்த அதிகாரத்தை அவர் சாக்கிரதையாக உபயோகப்படுத்த வேண்டும். தேசாதிபதிக்கு அடுத்த பெரிய அதிகாரி (கலோனியல் செக்ரெடரி), குடியேற்ற நாடுகளின் காரியதரிசி. இலங்கை ஒன்பது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு 'ஏஜெண்ட்' என்பவரை இவர் நியமித்தார். வரிகளை வசூல் செய்து, விவசாயத்தை அபிவிருத்தி செய்து அந்த மாகாணப் பகுதிக்குத் தலைவராயிருந்து இந்த ஏஜெண்ட் செயலாற்றினார்.

வீதிகள் போடுதல், புகை வண்டிப் பாதை ஏற்படுத்தல், கல்வி அபிவிருத்தி முதலியவைகளைச் செய்ய நிலவரி, கப்பற் சரக்குகளுக்குத் தீர்வை, கலால் குத்தகை வரி இவைகளை விதித்து முன்னேற்றம் செய்யப்பட்டது. நீதி பரிபாலனத்திற்கு நீதி மன்றங்களும் அவற்றிற்குமேல் அப்பீல் மன்றங்களும் நிறுவப்பட்டிருந்தன.

இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப் பிறகு இலங்கை சுய ஆட்சி பெற்றுக் குடியேற்ற நாடுகளின் அந்தஸ்தைப் பெற்றுள்ளது.

## யாழ்ப்பாண வரலாறு

இலங்கையின் வட பாகத்திலுள்ள யாழ்ப்பாணம் மூன்று புறமும் கடலால் சூழப்பட்டிருக்கிற ஒரு தீபகற்பம். கி.பி. முதல் நூற்றாண்டிலேயெ இப் பகுதியில் ஒரு தமிழ் ராச்சியம் இருந்தது. ஆனால் அந்த இராச்சியத்தைப் பற்றியும் அதை ஆண்ட அரசர்களைப் பற்றியும் எவ்விதமான தகவல்களைக் கூறும் நூல்கள் காணப்படவில்லை. மகாவம்சம், சுலு வம்சம் முதலிய நூல்களும் இலங்கையின்மீது தமிழர் படையெடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததைக் கூறுகின்றனவே யொழிய யாழ்ப்பாண இராச்சியத்தைப்பற்றி ஒன்றுமே கூறவில்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் ஒரு தனித் தமிழ் அரசு இருந்தது என்னவோ உண்மை.

யாழ்ப்பாண இராச்சியம் தோன்றியதைப் பற்றி ஒரு கதை உண்டு. தமிழரசர்கள் வலகம்வாகு காலத்தில் இலங்கைமீது படையெடுத்து வந்து சில காலம் அந் நாட்டை ஆண்டு வந்தனர். அந்தக் காலத்தில் இரண்டு கண்ணும் இழந்த யாழ்ப்பாணன் ஒருவன் தமிழகத்திலிருந்து அரசனைக் காண வந்தான். குருடனை அரசன் பார்க்கக் கூடாதென்று மந்திரிகள் ஒரு திரைக்குப் பின்னால் அவனை நிற்க வைத்து மன்னனுக்கு அறிமுகப் படுத்தினர்.

மன்னன் வெவ்வேறு கோலங்களில் காட்சி அளித்ததைக் குருடன் அவ்வக் கோலங்களில் புகழ்ந்து யாழில் பாடினான். குருடனாயிருந்தும் தன் கோலங்களை அறிந்து பாடிய சீர்மைக்கும், அவன், யாழ் வாசிக்கும் திறமைக்கும் மெச்சி அரசன் இலங்கையின் வடபாகத்தை அவனுக்கு அளித்தான். யாழ்ப்பாணனுக்கு அளித்த நிலப்பகுதி யாழ்ப்பாணம் என வழங்கியது. அந்த நிலப் பகுதி வெறும் மணற்றிடல். பாணன் தமிழகத்திற்குச் சென்று பலரை அழைத்து வந்து அவர்களுடன் அங்கே குடியேறினான் என்பர்.

யாழ்ப்பாண வைபவ மாலை, கைலாய மாலை என்னும் நூல்கள் வேறு விதமான ஒரு வரலாற்றைக் கூறும். ஆதியில் மாதோட்டம், மன்னார், மணற்றிடல் முதலிய இடங்களில் தமிழர் வசித்து வந்தனர். மணற்றிடலின் வட பாகத்தில் உள்ள மலையொன்றில் கீரியின் முகத்தை உடைய ஒரு முனிவர் தவம் செய்து வந்தார். அதன் பொருட்டு அம்மலை கீரிமலை அல்லது

நகுல கிரி என்று பெயர் பெற்றிருந்தது. அம்மலையிலிருந்து ஓர் அருவி கடலில் சென்று பாய்ந்து கொண்டிருந்தது. அவ்வருவி நீரில் அம்முனிவர் நீராடியதும் அவரது கீரி முகம் மறைந்து அழகான முகம் தோன்றியது. அந்தச் சிற்றாற்றில் பார்வதி, பரமசிவன், அர்ச்சுனன், நள சக்கரவர்த்தி ஆகியோர் முழுகியதாகப் புராணங்கள் கூறுகின்றன.

தஞ்சையை ஆண்டுவந்த சோழ அரசகுமாரி மாருதப்புரவீகவல்லி என்பாள் குதிரை முகம் உடையவளாயிருந்தாள். இந்தச் சிற்றாற்றின் மகிமையைக் கேள்விப்பட்டு இதில் வந்து நீராடினாள். அவள் குதிரை முகம் மாறி அழகிய முகத்துடன் தோன்றினாள். குதிரைமுகம் மாறினமையால் அவ்விடம் மாவிட்டபுரம் என்று பெயர் பெற்றது. அரசகுமாரி தமிழ் நாட்டினின்று முருகர்சிலை ஒன்றை வரவழைத்து அங்கே அதற்குக் கோயில் கட்டிப் பிரதிட்டை செய்தாள்.

அரசகுமாரியின் பேரழகைக் கேள்விப்பட்டு அருகிலுள்ள ஊரிலிருந்த அரசன் அவளை மணந்து கொண்டான். அவர்களுக்குப் பாலசிங்கன் என்ற மகன் பிறந்தான். அவன் காலத்தில் அந்தகக் கவி வீரராகவ முதலியார் ஊருக்குப் போந்து தமது யாழ் வாசிக்கும் திறத்தை அவனுக்குக் காட்டினார். பாலசிங்கன் அவருக்கு மணற்றிடமாயிருந்த பிரதேசத்தை அளித்தான். குருடராகிய வீரராகவருக்கு யாழ் வல்லமைபற்றி அளித்த ஊர் யாழ்ப்பாணம் என்று வழங்கியது. வீரராகவர் தமிழ் நாட்டிலிருந்து அங்கு வேளாளரையும் அந்தணரையும் குடியேற்றி நாட்டைச் சீர்திருத்தினார்.

வீரராகவர் இறந்த பின். பாண்டி நாட்டு இளவரசன் ஒருவனை உள்ளூர் வேளாளப் பிரபு தமிழகத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து அழைத்து வந்து அரசனாக்கினார். இவன் கைகளில் ஒன்று ஊனமாயிருந்தமையால் இவனுக்கு விஜய கூளங்கைச் சக்கரவர்த்தி என்று பெயர் ஏற்பட்டது. இவன் யாழ்ப்பாணத்தில் நல்ல பட்டணம் ஒன்றை நிறுவி அதற்கு நல்லூர் என்று பெயரிட்டான். ஊரில் பல சிவாலயங்கள் கட்டி, மக்களைக் கொண்டு வந்து குடியேற்றினான். இவன் சந்ததியார் ஆரிய சக்கரவர்த்திகள் என்ற பெயருடன் யாழ்ப்பாணத்தில் அரசு புரிந்து வந்தார்கள். இது வைபவ மாலை கூறும் வரலாறு.

அந்தகக் கவி வீரராகவர் மிகப் பிற்பட்ட காலத்தவர்; அவர் இலங்கையில் வந்து குடியேறியதாகக் கொள்ளுவதற்கு வேறு சான்றுகள் இல்லை. யாழ்ப்பாணத்தின் முதல் அரசன் விஜயகூளங்கைச் சக்கரவர்த்தி என்று கொண்டு மேலே செல்லுவோம்.

யாழ்ப்பாண இராச்சியம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிற்றென்றும், விஜயகூளங்கைச் சக்கரவர்த்தியின் ஆட்சிக்காலம் கி.பி. 1210-இல் தோன்றிற்றென்றும் ஒருவாறு யாழ்ப்பாண வைபவ மாலையைக் கொண்டு கூறுவர். அவனுக்குப்பின் பலர் அரசுபுரிந்தனர். ஓர் அரசன் காலத்தில் சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையே ஏற்பட்ட கலகம் காரணமாகச் சிங்களவர் அப்பகுதியை விட்டு ஓடிவிட்டனர்.

இரண்டாவது வரோதயசிங்க ஆரியன் காலத்தில் வன்னியர் தூண்டுதலால் சிங்களவர் கலகம் செய்தனர். இவ்வன்னியர் சோழருக்குப் படைத் துணையாக இலங்கைக்குச் சென்ற படையாச்சிகள் என்ற சாதியார். இவர்களில் சிலர் இலங்கையிலேயே தங்கி அநுராதபுரிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலுள்ள காட்டுப் பிரதேசங்களில் ஆட்சி செலுத்தி வந்தனர். வரோதய சிங்கன் வன்னியர் நாட்டின்மீது படையெடுத்துச் சென்று அவர்களைத் தோற்கடித்து ஊரைக் கொள்ளையடித்தான். இதனால் உள்ளூரில் சிங்களவர் கலகம் அடங்கிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் மதுரை யரசனுக்கு உதவியாகப் பாண்டி நாட்டுக்குச் சென்று எதிரிகளைச் சிதற அடித்து யாழ்ப் பாணத்துக்கு மீண்டான் என்று கூறப்படுகிறது. இவ் வாறு யாழ்ப்பாணப் பகுதியை இவனுக்குப் பின் பலர் ஆண்டு வந்தனர். சிங்க பாராசசேகரன் என்ற அரசன் காலத்தில் யாழ்ப்பாணத்தில் சைவ மதம் வளர்ச்சி அடைந்தது. அவன் நீதி தவறாது ஆண்ட அரசன். அவ னுடைய வைப்பாட்டியின் மகன் சங்கிலி என்பவன் மிகக் கொடியவன். தன் தமையன்மாரைக் கொன்றுவிட்டு அரச பதவியை அடைந்தான். இவன் போர்த்துகீசியரால் கொல்லப்பட்டதையும் யாழ்ப்பாணத்தின் பிந்தைய வரலாற்றையும் முன்னமே படித்துள்ளோம்.

## இலங்கையின் சிறப்பு

மிகப் பழமையும் அழகும் வாழ்ந்த தீவு இலங்கை. சுமார் இருபத்தைந்து நூற்றாண்டுகள் சிங்களவர் ஆட்சி இத்தீவில் இருந்தது. இவர்களது கடைசி மன்னன் கொடுங்கோலனாயிருந்தான்: எனவே 186 அரசர்கள் வரிசையாக ஆண்டு வந்த முடியாட்சியை ஒழித்துக்கட்டிப் பிரிட்டிஷ் ஆட்சியை ஏற்றனர் இலங்கை வாசிகள். இது நடந்தது கி.பி 1812-இல். இதன் பின் இலங்கைக்கு மேல் நாட்டுத் தொடர்பு அதிகமாயிற்று.

இராமாயண காலத்தில் இலங்கையில் திராவிட கலா சாரம் பெருகியிருந்தது. இராவணன் ஆட்சியில் இலங்கை சிறப்புற்று விளங்கியது. மீண்டும் விஜயன் காலத்தில் இக் கலாசாரம் பிரகாசிக்கத் தொடங்கியது. இலங்கை நாக ரிகம் பொருந்திய நாடாக விளங்கியதாக டாலமி கூறு கிறான். அது உள்ள இடத்தைப் பூகோளப் படத்தில் திருத் தமாக குறித்தான் பாசியான். இயான் த்சாங் என்ற சீன யாத்ரிகர் இலங்கையைப்பற்றிக் குறிப்புக்கள் எழுதிய தோடு பௌத்த மதம் அங்கே பரவியிருந்த வரலாற்றைப் பற்றியும் விரிவாகக் கூறியிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தீவு வடக்கு-தெற்காக 405 கி.மீ. நீளமுடையது. அகலம் மேற்கே கொழும்பிலிருந்து தெற்கே சங்கமம்வரை 210 கி.மீ. ஆகும். மேல் மாகாணம், மத்திய மாகாணம், தென்மாகாணம், ஊவாமாகாணம், வடமேல் மாகாணம், வடமத்தியமாகாணம், சுப்ரகமுவா மாகாணம் என்று பல பிரிவுகளாகஇருக்கிறது தற்போதைய இலங்கை. இலங்கையின் தலைநகர் கொழும்பு. இது மேல் மாகாணத்தில் இருக்கிறது. கொழும்புவின் ஜனத்தொகை நாலே கால் லட்சம். நகரம் மிகுந்த அழகு வாய்ந்தது. பிரயாண வசதிகள் இங்கே அதிகம்.

இதன் அமைப்பு இலண்டன் மாநகரை ஒத்திருக்கிறது என்கிறார்கள். ஏனெனில் இலண்டன் நகரை நிர்மாணித்த நகர்க்கலைச் சிற்பி சர் பேட்ரிக் ஆபர்கிராம்பியே இந்த நகரையும் நிர்மாணித்தார் என்கிறார்கள். நாற் சந்திகளையும் நேர் நேராகச் செல்லும் சாலைகளையும் இங்கே காணலாம். பதினெட்டாம் நூற்றாண்டில் இந் நகரம் ஆங்கிலேயர் கைக்கு வந்த பின் கொழும்புத் துறைமுகம் சீர்திருத்தம் செய்யப்பட்டது. பெரும்பாலான சர்க்கார் கட்டிடங்கள் கடற்கரை ஓரத்தில் இருக்கின்றன.

கொழும்புவில் உள்ள தொல்பொருள் கலைக் கூடத்தில் பழைய காலத்து நாணயங்கள், மட்பாண்டங்கள், மரச் சாமான்கள், சிற்பங்கள், விக்கிரகங்கள், சிலாசாசனங்கள் முதலியவற்றைக் காணலாம். இவை அனைத்தும் இலங்கையுடன் தமிழ் நாட்டிற்கு இருந்த தொடர்பை மறுக்கமுடியாத ஆதாரங்களாக இருந்து எடுத்துக்காட்டுகின்றன. இலங்கையை நாகரிக நாடாக்கிய புகழுக்குத் தமிழ் மன்னர்கள் உரியவர்கள் என்பதற்கு இக் கலைக் கூடம் சான்று பகரும். கொழும்புவில்உள்ள விலங்குவனம், இயற்கையாய் அமைந்த மலைகள் சோலைகள் ஆறுகள் முதலியவற்றுடன் விளங்குகிறது.

99863

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்குகள், பறவை இனங்கள், ஊரும் பாம்பு முதலிய ஜந்துக்கள் ஆகியவற்றிற்குத் தனித் தனி இயற்கைச் சூழல்களை அமைத்திருப்பது பாராட்டத் தக்கதாயுள்ளது. விலங்குகளுக்கு விளையாட்டுக்களும் பழக்கி வைத்திருப்பது இங்கே புதுமை. இந்த விலங்குகள் வனத்திற்குச் செல்ல அழகான பாதை அமைக்கப்பட்டிருக்கிறது. எத்தனையோ விருட்சங்களும், செடி கொடிகளும் நிறைந்த பூங்காவையும் இங்கே காணலாம்.

இலங்கையில் இரத்தினபுரியில் இரத்தினச் சுரங்கங்கள் இருக்கின்றன. இரத்தனபுரி சப்ரகமுவ மாகாணத்தின் தலைநகர். கொழும்புவிலிருந்து தென்கிழக்கே 84 கி. மீ. தூரத்தில் இருக்கிறது இரத்தினபுரி. கொழும்புவிலிருந்து அழகான மோட்டார்ப்பாதை மூலம் இங்கே செல்லலாம். பாதையின் இரு புறங்களிலும் பலாத் தோப்புகள், பாக்குத் தோப்புகள், நெல்வயல்கள் ஆகியவை நிறைந்திருக்கின்றன.

இரத்தினபுரி அமைதி நிறைந்த நகரம். அற்புதமான இயற்கைச் சூழலிடையே அமைந்திருக்கிறது இந்நகரம். கலு கங்கை இந் நகரை அழகுபடுத்திக் கொண்டு பாய்ந்து செல்கிறது. இரண்டு மலைகளுக்கிடையேயிருந்து ரஜநா அருவி முப்பதடி உயரத்திலிருந்து பாய்கிறது. அருவி நீர் தரையில் பாயும் இடத்தில் குளம் ஒன்று இருக்கிறது. இதில் நீராடுவது மிக இனிமையைத் தரும்.

இரத்தினபுரியில் இரத்தினம் எல்லா இடங்களிலும் பூமியின் அடியில் கிடைக்கும். கிணறுகள்போல் ஆழத் தோண்டிக்கொண்டு பூமிக்குள் செல்வார்கள். இந்தக் கிணறுகள் தோண்டப் பணம் கட்டி உத்தரவு பெறவேண்டும். சிலசமயம் மிகஆழமாகத்தோண்டவேண்டியிருக்கும். அடிக்கடி நீர் ஊற்றுக்களால் இடையூறு நேரும். தனிப்பட்டவர்கள் செய்யும் லாபகரமான தொழிலல்ல இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் கூட்டாகச் சேர்ந்து இந்தத் தொழிலில் ஈடுபடுவார்கள். ஆனால் இரத்தினங்கள் உள்ள இடங்களை மேலிருந்து பார்த்தே சொல்ல முடியும் என்கிறார்கள். சர்க்காருக்கு இதன் மூலம் வருமானம் கிடையாது.

## ஆதாம் மலை

இரத்தினபுரியிலிருந்து இருபதாவது மைலில் சிவன் ஒளி பாத மலை என்ற மலை இருக்கிறது. இதை 'ஆதாம்ஸ் பீக்' என்பார்கள். இதைச் சமயந்தோறும் நின்ற மலை எனலாம். மலையடிவாரம் காரணி எனப்படும். மலையிலே இருக்கும் இறைவன் திருவடியைத் தரிசிக்க மக்கள் மேலேறிச் செல்லுகின்றனர். சைவர்கள் இது சிவபெருமானின் ஒளி வீசும் திருவடியுள்ள மலை என்கின்றனர். பௌத்தர்கள் புத்தர் பெருமான் திருவடியுள்ள ஸ்ரீபாத மலை என்பர். முஸ்லிம்கள் ஆதாம் பாவா மலை யென்றும், கிறித்துவர்கள் ஆதாம் மலை யென்றும் கூறுவர். இவ்வாறுஒவ்வொருவரும்தத்தம் சமயத்துக்குரிய மலையாக இதைக் கருதுவர். மலையோ எம்மதமும் சம்மதமே யென்று மௌனப் பிரசங்கம் செய்துகொண்டு கம்பீரமாகத் தலை நிமிர்ந்து நிற்கிறது. மலை பூமி மட்டத்திலிருந்து ஏழாயிரம் அடி உயரம் இருக்கிறது. இலங்கையில் உள்ள இரண்டாவது பெரிய மலை இது என்பர். இந்த மலையில்தான் கலு கங்கை உற்பத்தியாகி நாடு செழிக்கப் பல பாகங்களுக்கும் பாய்ந்து சென்று கடைசியில் மேற்கு மாகாணத்தில் உள்ள பாணாத் துறையில் அரபிக் கடலில் கலக்கிறது.

மலை ஏறுவது கடினமாகத்தான் இருக்கும். ஆனால் வழி நெடுகக் கடைகள் இருக்கின்றன. இரவு முழுவதும் ஏறிச் சென்றால் அதிகாலையில் மலையுச்சியை அடையலாம். அங்கே சிமென்டால் செய்யப்பட்டு இரண்டடி நீளமும் ஒன்றரையடி அகலமும் உள்ள திருப்பாதம் இருக்கிறது. இதனை யாத்திரிகர் தொட்டு வணங்குவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீன யாத்திரிகரான பாகியானும், மார்க்கோ போலோ என்பவரும் இந்த மலையுச்சிக்கு வந்தார்கள் எனப்படுகிறது.

## கதிர்காமம்

கொழும்பிலிருந்து தென்கிழக்காக 250 கி. மீ.-ல் திசமகாராமை இருக்கிறது. வழியில் இரத்தினபுரி இருக்கிறது. இலங்கையின் தென்பகுதியில் ஊவா மாகாணத்தில் தீயனகம என்ற காட்டுப் பகுதியில் இருக்கிறது கதிர்காமம். திசமகாராமையிலிருந்து 18 கி.மீ. காட்டு வழியில் செல்ல வேண்டும் கதிர்காமத்திற்கு. கதிர்காமம் மிகச் சிறிய கிராமம். மாணிக்க கங்கையின் கரைமீது இருக்கிறது ஊர்.

சூரபதுமனைச் சங்காரம் செய்த பின்னர் வாகை சூடி மீளும்பொழுது கதிர்காமத்தை அடைந்தாராம் முருகக் கடவுள். அங்கே நவகங்கைத் தீர்த்தத்தை உண்டாக்கிச் சிந்தாமணி ஆலயத்தில் வள்ளி, தெய்வயானை ஆகியோருடன் தேவர்கள் புடை சூழ வீற்றிருந்ததாக ஐதீகம்.

மாணிக்க கங்கை வெயிற்காலத்தில் சிறு ஓடை போல் காணப்படும். இதைப் 'பாம்ப ஓய' என்று சிங்களவர் குறிப்பிடுகிறார்கள். கிராமம் மிகச் சிறியது. முக்கியமான தெருக்களும் சிலவே. அவற்றில் பெரும்பாலும் மடங்களும் சத்திரங்களுமே இருக்கின்றன. இராமகிருஷ்ண மடம் ஒன்று அங்கே இருக்கிறது. கோயில் இருக்கும் வீதி தெற்கு வடக்காக இருக்கிறது. முருகர் தெற்கு நோக்கி எழுந்தருளியிருக்கிறார். வள்ளியம்மை சந்நிதி கணவனைப் பார்த்தவண்ணம் வடக்கு நோக்கி இருக்கிறது. தெய்வயானை சந்நிதி கிழக்கு நோக்கி இருக்கிறது.

வளைந்த உத்தரமுடைய வாயிலைக் கடந்து சென்றால் திறந்த வெளியின் நடுவில் ஓட்டுக்கூரை மண்டபம் காணப்படும். அதுதான் முருகன் கோயில் கர்ப்பக்கிருகம். மேட்டில் ஏறிச் செல்லப் படிகள் உண்டு. கர்ப்பக்கிருகத்தின் வெளியே ஒரு திரையிட்டிருக்கிறார்கள். திரைக்கு வெளியேயிருந்தே பக்தர்கள் வழிபட வேண்டும். திரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகர் தம்முடைய தேவியருடன் அமைந்திருக்கும் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. அர்த்த மண்டபத்தில்குத்துவிளக்கு எப்போதும் எரிந்து கொண்டும் சாம்பிராணி சட்டி புகைந்து கொண்டும் இருக்கும்.

சுவாமிக்குப் பூசை செய்பவர்கள் சிங்களவர்களே. அவர்களைக் 'கப்புராளைமார்' என்பர். பக்தர்கள் அளிக்கும் கர்ப்பூரம், நைவேத்தியம் ஆகியவற்றை உள்ளே எடுத்துச் சென்று பூசை செய்வார்கள். மணி ஓசை கேட்கும்போது மக்கள் 'அரோகரா' என்று கோஷமிட்டுத் திரைக்கு அப்பாலிருந்து வணங்குவார்கள்.

கதிர்காமத்தில் ஆடி விழா மிகச் சிறப்பானது. கோயிலி லிருந்து ஒரு வஸ்துவைப் பெட்டியில் வைத்து யானையின் மீது ஏற்றி முருகன் சந்நிதியிலிருந்து வள்ளியம்மை சந்நி திக்கு உலா வருவார்கள். இந்த உலா 'பெரஹரா' என்று சிங்கள மொழியில் வழங்கும். கர்ப்பூரச் சட்டிகளுடன் பக்தர்கள் உலாவில் கலந்து கொள்ளுவார்கள்.

முருகர் ஆலயத்திற்கு மேற்கே விஷ்ணு ஆலயம் ஒன்று இருக்கிறது. இந்தக் கோயிலும் ஓட்டு வீடே. ஆலயத்தின் பின்னாலுள்ள அரச மரத்தைப் பௌத்தர்களும் முஸ்லிம் களும் வழிபடுகின்றனர். இவற்றிற்கு அப்பால் கிழக்கே யுள்ள தெய்வயானை கோயில் தமிழர் நிர்வாகத்தில் இருக் கிறது. எல்லாக் கோயில்களிலும் திரை உண்டு. அதற்குத் தான் பூசை நடைபெறும்.

கதிர்காமத்திலிருந்து 5 கி. மீ.ல் செல்லக்கதிர் காமம் இருக்கிறது. அது கரடுமுரடான மலைப்பகுதி. அந்த மலையையே முருகராக வழிபடுவது வழக்கு. இதுவே பழைய கதிர்காமம் என்பர்.

## பறவைத் தீவு

திசமகாராமையிலிருந்து நுவரேலியாவுக்குச் செல்லும் பாதையில் இரு புறமும் கண்ணுக்கெட்டிய தூரம் தண்ணீர் தேங்கி நிற்கும் பரப்பைக் காணலாம். இந்தத் தேக்கத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.



மத்தியில் ஒரு தீவு இயற்கையாக அமைந்திருக்கிறது. இந்தத் தீவிற்குப் படகுகள் மூலந்தான் செல்ல வேண்டும். தீவு கரடு முரடான காட்டுப் பிரதேசந்தான். ஆனால் இந்தமுள்ளும் கரடுமுரடான பிரதேசத்தில் உலகத்திலுள்ள எல்லாச் சாதிப் பறவைகளும் வாழ்கின்றன. சோலைகள் ஒருபுறம், முட்புதர்கள் ஒருபுறம், உயர வளர்ந்த கோரைகள் ஒருபுறமாகப் பலவிதச் சூழ்நிலைகளுக்கிடையே காடுவாழ் பறவைகள், வயல்வாழ் பறவைகள், நகர்வாழ் பறவைகள், கிராமம்வாழ் பறவைகள், ஆகாயத்திலே பறந்து திரியும் பறவைகள் ஆகிய பல சாதிப் பறவையினங்கள் கலந்து தனித் தனியே வாழக் காணலாம். எத்தனையோ விதமான நிறமும், மூக்கும், உடலமைப்பும் வாய்ந்த பலவிதப் பறவையினங்கள் இங்கே காணப்படுகின்றன. சென்னையிலிருந்து மதுராந்தகத்துக்குச் செல்லும் வழியில் உள்ள வேடந்தாங்கல் போன்ற பறவைக் காடு இது. ஒரே ஒரு வித்தியாசம் என்னவென்னில், வருடம் முழுவதும் பறவைகள் இங்கே இருக்கக் காணலாம்.

## சீதேலியா

நுவரேலியாவுக்குச் செல்லும் பாதையிலேயே கக்களைப் பூந்தோட்டம் இருக்கிறது. சுமார் ஐம்பத்தைந்து ஏக்கர் சுற்றளவு கொண்ட இந்த மலைத் தோட்டத்தில் உலகத்திலுள்ள எல்லாவிதப் பூச்செடிகளையும் காணலாம். அவை பூத்துக் குலுங்கும் காட்சியை வாயால் வர்ணிக்க முடியாது. அந்த இடத்தை 'மலர்ச் சுவர்க்கம்' என்று கூறலாம். கக்களைத் தோட்டத்திற்கு அருகிலே சிதேலியா இருக்கிறது.

பாதைக்குப் பக்கத்தில் பள்ளத்தில் ஒரு சிறு தடாகம் இருக்கிறது. அதற்குச் 'சீதைத் தடாகம்' என்று பெயர். அந்தத் தடாகத்திலிருந்து ஒரு சிறு ஓடை மலைச் சாரலில் சலசலத்துக் கீழே ஓடிக் கொண்டிருக்கிறது. அதைச் 'சீதை ஓடை' என்கிறார்கள். அதன் அருகில் குகை ஒன்று இருக்

கிறது. சீதாதேவி சிறையிருந்த குகையே அக்கோயில் என்கிறார்கள். பாதைக்கு அப்பால் உள்ள மலைதான் அசோகவனம் என்கிறார்கள். சுமார் அரை கி.மீ. தூரம் சென்றதும் ஒரு நீர்நிலை இருக்கிறது. அது சீதா தேவி தினந்தோறும் நீராடிய துறை என்பர். நீர் நிலையை அடுத்து ஒரு கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலில்தான் சீதா தேவி ஒவ்வொரு நாளும் இராமனைப் பூசித்து வந்தாளாம். சீதையின் கோயிலுக்கு அருகே வாசனையும் வடிவழகும் அற்ற மலர்கள் பூத்திருந்தன. அவற்றைச் சீதைப் பூ என்பர். இந்தப் பூக்களைக் கொண்டே இராமபிரானைச் சீதை அருச்சித்து வந்தாளாம். இலங்கையில் அந்த இடத்தில் தவிர அம்மாதிரியான பூ வேறெங்கும் கிடையாதென்று திடமாகக் கூறுகிறார்கள்.

..........................

வீங்குநீர் இலங்கை வெற்பின்
நற்பெருந் தவத்தளாய
நங்கையைக் கண்டே னல்லேன்

என்று கம்பன், அனுமான் சீதா பிராட்டியைக் கண்டதாகக் கூறும்'இலங்கை வெற்பு' இதுதான் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். இந்த மலைச் சோலையான அசோக வனத்திலேதான் இராவணன் சீதா பிராட்டியைச் சிறை வைத்திருந்தான். ஆள் நடமாட்டமில்லாத பிரதேசத்தில் சின்னஞ்சிறு குடிசையில் உள்ள இந்தக் கோயிலைத் தரிசிக்க ஆயிரக் கணக்கான தமிழர்களும் சிங்களவர்களும் வருகிறார்கள். இற்பிறப்பெனப்படுவது ஒன்றும், இரும்பொறை எனப்படுவது என்பதொன்றும், கற்பெனப்படுவது ஒன்றும் சேர்ந்து களிநடம் புரியும் இடமாதலால் அனைவரும் வணங்குதற்குரிய இடமாகத் திகழ்கிறது. சீதையின் தொடர்பையொட்டியே இடம் சிதேலியா எனப்படுகிறது.

## நுவரேலியா

இலங்கையின் செல்வச் சிறப்புக்கெல்லாம் காரணமான நகரம் நுவரேலியாதான். இங்கேயுள்ள தேயிலைத் தோட்டங்களால் பெரும் வருமானம் இலங்கைக்குக் கிடைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் நுவரேலியா சுவித்சர்லாந்தோடு ஒப்ப எண்ணப் படும் மலை வாசஸ்தலமாகக் கருதப்படுகிறது. இங்குள்ள அருவிகளும், தோட்டங்களும் சுவித்சர்லாந்தை நினை வூட்டுவனவாகக் கூறுகின்றனர். நகரத்துக்கப்பால் உள்ள பச்சைப் புல் வெளிகளைப்போல் எங்குமே கண்டிருக்க முடி யாது. நெடுந் தொலைவிற்கப்பால் பச்சைக் கம்பளம் விரித் தது போன்ற காட்சி கண்ணைக் குளிர வைக்கும். இந்த மரகதப் புல்வெளிக்கப்பால் கிரிகரி ஏரி இருக்கிறது. இதன் கரையில் நின்று சுற்றிப் பார்த்தால் சுவர்க்க லோகத்திலும் காணக் கிடைக்காத அற்புத இயற்கைக் காட்சிகளைக் காண லாம். இதைத் தாண்டியுள்ள பிதிருத்தலகாலா மலை இந்த அழகுக்கெல்லாம் சிகரம் போன்று விளங்குகிறது.

கிழக்குக் கடலிலே இங்கிலாந்தின் ஒரு சிறு பகுதி நுவ ரேலியா என்கிறார் ஒரு கவிஞர். இங்கிலாந்து தேசத்தி லுள்ள மிக அழகிய நகர்ப்புறங்களில் உள்ள காட்சிகளை இங்கே காணலாம். பூக்கள், பழங்கள், அருவிகள், பள்ளத் தாக்குகள், சீதோஷ்ண நிலை யாவும் அவற்றைப் போன்றே இருக்கின்றன என்கிறார்கள். நுவரேலியா என்ற சொல் லுக்கே ஒளி நகர் என்பது பொருள். அப்பெயர் இதற்குப் பொருத்தமாய் அமைந்திருக்கிறது. நகர்ப்புறங்களிலிருந்து ஓய்வு எடுப்பவர்களுக்கு மிகஅமைதியானஇடம் நுவரேலியா. மிக சுத்தமாகவும் புதிதாகவும் காணப்படுகிறது இந்நகரம். நகரத்தில் முதல் தரமான பிரயாண விடுதிகள் இருக்கின் றன. டென்னிஸ், கோல்ப் ஆகிய விளையாட்டிடங்கள் பல இருக்கின்றன. வேட்டையாடுவதற்குக் காடுகளும் இங்கே நிறைந்திருக்கின்றன. 'வான வில்' என்ற ஒரு வகைப் புது மையான மீன் இங்கே கிடைக்கிறது, வளைந்து செல்லும் பாதைகளில் காரில் பிரயாணம் செய்தால் இந்த அழகை யெல்லாம் நன்கு அநுபவிக்கலாம்.

தேயிலைஉற்பத்தியில் உலகில் இரண்டாவதாக விளங்கு கிறது இலங்கை. தமிழ்நாட்டின் இரண்டே மாவட்டங் களின் விஸ்தீரணம் உள்ள இலங்கையில் இரண்டாயிரத் துக்கு மேற்பட்ட தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைகளில் பெரும் பகுதி வெள்ளையர்களுடையது. அவர்களும் கூட்டுறவு முறையில் இவற்றை நடத்துகிறார்கள். சிங்களவர்களும் தமிழர்களுங்கூடத் தேயிலைத் தோட்டங்கள் வைத்திருக்கிறார்கள்: ஆனால் அவை சிதறிக் கிடக்கின்றன. தமிழர்கள் பலர் இந்தத் தோட்டங்களில் வேலை செய்கிறார்கள். அவர்களுடைய முயற்சியால் தேயிலைத் தோட்டங்கள் இலங்கையை செல்வச்சிறப்புடைய நாடாக்கியிருக்கின்றன. ஆனால் தமிழர்களுக்கு அந்நாட்டில் சம உரிமைகள் இல்லை. தேயிலைத் தோட்டங்களுக்கு அருகில் அவற்றைப் பதன் செய்யும் தொழிற்சாலைகள் இருக்கின்றன.

## கண்டி

கண்டி நகரம் சரித்திரப் பிரசித்தி பெற்றது: சிங்களவர்கள் ஆதிக்கத்திலிருந்து அந்நிய ஆட்சிக்கு மாறிய கடைசி நகரம் இது. இங்கு நடந்த சுதந்திரப் போர், இலங்கைச் சரித்திரத்தில் ஒரு நினைவுக் கல்.

'கண்டி' என்ற சொல்லுக்கு 'மலை' என்று பொருள். மலைமீதுள்ள நகரமானதால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டது என்பர். பசும்படாம் போர்த்த மலைமேல் கவினுற விளங்குகிறது கண்டி. தேயிலைப் பண்ணைகள், ரப்பர்த் தோட்டங்கள், பலாத் தோப்புக்கள் ஆகியவை நிறைந்து அமைதியுடன் விளங்குகிறது இந்த அழகு நகர். கண்டி நகரின் சாலைகள் நேரானவை. அவற்றில் இருபுறமும் உள்ள கட்டிடங்கள் கம்பீரமாகக் கலை நுணுக்கத்துடன் காட்சியளிக்கின்றன. கடைத்தெருவுக்கப்பால் உள்ள பரந்த ஏரி இந்த நகரின் அழகுக்கு அழகு அளிக்கின்றது. இலங்கையில் கடைசியாக அரசு செலுத்திய தமிழ் மன்னன் விக்கிரம சிங்கன் வெட்டிய ஏரி இது. பதினைந்தாம் நூற்றாண்டில் விக்கிரமபாகு என்ற மன்னனால் நிறுவப்பட்டது கண்டி நகரம். இங்கு வசிப்போர் பெரும்பாலோர் தமிழர்.

உலகெங்கும் சிதறிக் கிடக்கும் பௌத்தர்களுக்கெல்லாம் புண்ணியமான நகரம் கண்டி, புத்தரின் பல் வைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட புத்த தந்த ஆலயம் இங்கே இருக்கிறது. ஆலயத்தில் ஆறு கர்ப்பக்கிருகங்கள் இருக்கின்றன. அவற்றின் மத்தியில் உள்ள கருப்ப இல்லில் வெள்ளி மேசைமீது ஏழு அடுக்குகள் கொண்ட பேரிழையில் கடைசித் தங்கப் பெட்டியில் புத்தர் பல் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த இல்லின் கதவுகள் வெள்ளியானாலும் தங்கத்தாலும் ஆனவை. பக்தர்கள் பெட்டிக்கு முன்னால் வணங்கி மலர்களும் காணிக்கைகளும் செலுத்துவார்கள்.

கண்டிராஜனுடைய சிங்காதனம் கி.பி. 1815-ல் இங்கிலாந்து மன்னனான நான்காம் ஜார்ஜுக்குப் பரிசாக இலங்கைக் கவர்னராயிருந்த சர் ராபர்ட்பிரௌனிங் என்பவரால் அளிக்கப்பட்டது. ஆனால் அதைச் சமீப காலத்தில் கிளாஸ்டர் கோமகனார் இலங்கைக்குத் திரும்பக் கொணர்ந்து கொடுத்துவிட்டார். அதைத் தொல்பொருட் கலை மண்டபத்தில் காணலாம். கண்டிக்கோயிலில் நடக்கும் பெரஹாரா திருவிழா மிகச் சிறப்பானது. நாற்பது யானைகள் இந்த ஊர்வலத்தில் கலந்துகொள்ளும்; விசித்திர வாத்தியங்களுக்கிடையே கண்டியின் பிரசித்தி பெற்ற நடனகோஷ்டி பின் செல்லும்.

## இலங்கையின் புதைந்த நகரங்கள்

### டம்புல்லா (தம்புள்ளை)

டம்புல்லா, சிகிரியா, பொலந்நறுவை ஆகிய இடங்களுக்குச் செல்லுபவர்கள் கண்டியிலிருந்து மடலேவுக்கு ரெயில் மார்க்கமாகச் செல்லலாம். மடலே கண்டி மாவட்டத்தின் ஒருபகுதி. மடலே கடைத் தெருக்களில் வியாபாரம் அதிகமாக நடைபெறுகிறது.

சரித்திர பூர்வமாகப் புத்தருடைய உபதேசங்கள் முதன் முதலில் பொறிக்கப்பட்ட இடம் அலுவிகாரை. புத்தபடிமங்களும் யந்திரங்களும் அங்கேயிருக்கின்றன.

கொழும்புவிலிருந்து 140 கி. மீ. தூரத்தில் இருக்கிறது டம்புல்லா. இலங்கையில் உள்ள சிறந்த கற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்கள் இங்கேதான் இருக்கின்றன. மலைமேல் ஏறிப் பார்த்தால் கற்கோயில்களையும் காப்பித் தோட்டங்களையும் கண்ணுக்கினிய இயற்கைக் காட்சிகளையும் காணலாம். மலைமேல் நேரான பாதையிலும் மேடான கற்களின் மீதும் ஏறிச் சென்றதும் செங்கல் வாயிலை அடையலாம். இங்கிருந்து டம்புல்லாவுக்குக் குறுகிய கரடு முரடான பாதை செல்லுகிறது. வாயிலின் கூரை மேலும் பக்கச் சுவர்களிலும் பழைய எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

முதலாவது ஆலயத்திற்குச் செல்லும் வழி கல்வெட்டுகளுக்கு அருகே இருக்கிறது. இதன் வாயில் ஆர்ச் வடிவில் மகர தோரணங்களுடன் விளங்குகிறது. இந்தக் கோயில் தேவராஜ விகாரை எனப்படும். உள்ளே ஒரே இருள் கப்பிக் கொண்டிருக்கிறது. சிறிது நேரங்கழித்துத்தான் உள்ளே நன்றாகப் பார்க்க முடியும். ஒரே கல்லால் செய்த 47 அடி நீளம் கொண்ட புத்தர் சிலை சயன கோலத்தில் கிடக்கிறது. அதன் பாதத்தில் தாமரைப்பூ செதுக்கப்பட்டிருக்கிறது. தலைப்புறத்தில் மரத்தால் செய்த விஷ்ணு மூர்த்தியின் சிலை இருக்கிறது. இந்த ஆலயம் வலகம்பாகுவால் கி. மு. 80-இல் கட்டப்பட்டது என்கிறார்கள். மலபாரிகள் இலங்கைமீது படையெடுத்து வந்தபோது வலகம்பாகு டம்புல்லா குகைகளில் ஒளிந்து கொண்டான். படையெடுப்புத் தவிர்ந்த பின் அதன் நினைவாகப் புத்தரையும் விஷ்ணுமூர்த்தியையும் அங்கே பிரதிட்டை செய்தான் என்கிறார்கள். விஷ்ணுவின் சிலை மிகுந்த சக்தி வாய்ந்தது. இச்சிலையின் முன்னால் எண்ணெய்க் கொப்பறையில் கையிட்டுப் பிரமாணம் செய்வது வழக்கமாம்.

டம்புல்லாவில் உள்ள ஐந்து ஆலயங்களில் மகாவிகாரை தான் மிகப் பெரியது. 23 அடி உயரம், 160 அடி நீளம், 50 அடி அகலம் கொண்டது கோயில். கூரையின் ஒருபுறம் சரிவாகப் பூமி மட்டத்துக்கு நாலு அடி உயரத்தில் சாய்ந்திருக்கிறது. இந்தக் குகைக் கோயிலையும் இருள் கப்பிக்கொண்டிருக்கிறது. கூரையில் பல வண்ணச் சித்திரங்கள் புத்தரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றைக் காட்டுகின்றன. பல புத்தர் சிலைகளும் ஒரு சமாதியும் அங்கே இருக்கின்றன. வலகம்பாகுதான் இக் குகைக் கோயிலைக் கட்டத் துவங்கியவன் என்கிறார்கள். பின்னாலுள்ள சுவரில் விபீடணன், கணேசர் ஆகியோர் ஓவியங்கள் இருக்கின்றன. அசோக மரத்தின் கிளை இலங்கையில் நாட்டப் பெற்ற காட்சியும் ஓவியங்களிடையே இருக்கிறது.

மகா அலுத்விஹார், பாஸ்பிலைம் விஹார் என்ற குகைகளும் டம்புல்லாவில் இருக்கின்றன.

## சிகிரி அல்லது சீயகிரி

டம்புல்லாவிலிருந்து பதினொரு மைல் தூரத்தில் இருக்கிறது சிகிரி. சுமார் 1500 ஆண்டுகட்கு முன் தந்தையைக் கொலை செய்த காசியபன் பிரஜைகளின் பகைமைக்கு அஞ்சி ஓடி ஒளிந்து கொண்ட இடம் இது.

சிகிரிக் கல்மலை பூமி மட்டத்திலிருந்து சுமார் 600 அடிக்கு மேல் உயர்ந்திருக்கிறது. மலையின் பக்கங்கள் செங்குத்தாயிருப்பதால் அதன் உச்சிக்கு ஏறிச் செல்ல முடியாது. ஒடுக்கமான ஒரு பாதை வளைந்து வளைந்து மலையுச்சி வரை செல்லுகிறது. சுமார் அறுபது படிகள் ஏறியவுடன் ஒரு குகை இருக்கிறது. இந்தக் குகையிலிருந்து 40 அடி உயரத்தில் மற்றொரு குகை இருக்கிறது. செங்குத்தான இரும்பு ஏணிப் படிகள் இந்தக் குகைக்குச் செல்லுகின்றன. இந்தக் குகையில்தான் உலகப் பிரசித்தி பெற்ற வண்ண ஓவியங்கள் இருக்கின்றன. இந்த ஓவியங்கள் மதத் தொடர்புடையவை அல்ல. மனிதனுடைய உணர்ச்சியைத் தூண்டும் பெண்களின் உருவங்களே இவை. சுமார் ஐந்நூறு பொன் வண்ணப் பெண்டிர் ஓவியங்கள் இருந்ததாகக் கூறப்பட்டாலும் இப்போது காணப்படுவனஇருபத்திரண்டு சித்திரங்களே. அவற்றுள் பல இரட்டைப்பெண்டிர் சித்திரங்கள் உண்டு. அவர்கள் நிர்வாணமாக இருப்பது போல் காணப்பட்டாலும் மிக மெல்லிய ஆடையை அணிந்திருப்பது கூர்ந்து நோக்கின் தெரிய வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் ஏந்தி நிற்கும் பெண்மணி, தட்டேந்தி நிற்கும் பெண்மணி ஆகிய பல பெண்மணிகளின் உருவங்கள் மிக அழகுடனும் அங்கலட்சணங்களுடனும் விளங்குகின்றன. கந்தர்வ லோகத்தில் உள்ள அட்ஸர மங்கைகள் போல் அந்தச் சித்திரங்கள் காட்சி அளிக்கின்றன. மேடும் பள்ளமுமான பாறைச் சுவரிலே எழுதப்பட்ட சித்திரங்கள் இன்னும் ஒளி மங்காமல் வர்ணம் மாறாமல் ஜீவகளையுடன் இப்போதுதான் எழுதப்பட்டவைபோல் காட்சியளிக்கின்றன. கோட்டைக் காவலாளிகளால் எழுதப்பட்டவையே அச்சித்திரங்கள் என்பர் சிலர். காசியபனுடைய அரண்மனைப் பெண்டிரின் உருவங்கள் அவை என்பர். மேக வர்ணப் பெண்டிரும், மின்னல் வர்ணப் பெண்டிரும் சித்திரங்களில் உருவாகியிருக்கின்றன. மின்னிடை கொண்டு நீண்ட கூந்தலையுடைய இம்மடந்தையர் கோயிலுக்குச் செல்லுகிறார்கள். ஆனால் ஓவியங்களுக்குக் கால்கள் இல்லை.

குகையை விட்டுக் கீழே இறங்கி வந்து முன் குகையைத் தாண்டி மீண்டும் மலைமீது ஏறத் தொடங்கினால் படிகளுக்குப் பக்கத்தில் இரு புறமும் சிங்கத்தின் பாதங்கள் மூன்று நகங்களுடன் இருக்கின்றன. இந்த நகங்கள் மாத்திரம் நாலடி நீளம் கொண்டவை. கோட்டை ஒரு பயங்கரமான சிங்கம் நிமிர்ந்து படுத்துக்கொண்டிருப்பது போலக் கட்டப்பட்டிருக்கிறது. இதன் பொருட்டே இதற்குச் சீயகிரி அல்லது சிங்க மலை என்று பெயர் வழங்கி வருகிறது.

சிங்க வாயில் வழியாகத்தான் மலையுச்சிக்குச் செல்ல வேண்டும். வடக்கேயுள்ள தொட்டிக்குப் பக்கத்தில் மேலுள்ள கல் மாடத்திற்குப் படிகள் செல்லுகின்றன. மலையைச் சுற்றி மண்டபசாலை வழியாகப் படிகள் உச்சிக்குச் செல்லுகின்றன. தண்ணீர்த் தொட்டிக்குக் கீழே தர்பார்கூடம் இருக்கிறது. கீழே உள்ள கோயிலில் புத்தர் சிலை இருந்தது என்கிறார்கள். தர்பார் கூடம் கல்லில் குடையப்பட்டது. அதில் ஒரு கல் சிங்காதனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது. மலைமேல் பழைய மண்டபங்களும், படிக்கட்டுகளும், ஸ்நான அறைகளும் இடிந்து பாழாய்க் கிடக்கின்றன. பழைய கட்டிடத்தின் அஸ்திவாரங்களை நன்கு காணலாம். தண்ணீர்த் தொட்டிக்குத் தண்ணீர் வரும் இடத்தை நம்மால் கண்டு பிடிக்க இயலாது. இடிந்து கிடக்கும் கற் குவியல்கள் பெரிய அதிசய நகரத்தை நம் கண்ணுக்கு முன்னால் கொண்டு வருகின்றன. 1500 ஆண்டுகளுக்கு முன்னைய கட்டிடக் கலையையும், ஓவியக் கலையையும் பல கல்வெட்டுக்களையும் நமக்கு அறிவித்திருக்கின்றன சிகிரிக் குகைகள்.

## அநுராதபுரம்

தலை மன்னாரிலிருந்து கொழும்புக்குச் செல்லும் புகை வண்டிப் பாதையில் 200 கி மீ. தூரத்தில் புகைவண்டி நிலையமாக இருக்கிறது அநுராதபுரம். சுமார் 2000 ஆண்டுகட்கு முன்னர்ச் சிறப்புற்றிருந்த இந்நகர் இன்று 'இறந்தவர்கள் பட்டணம்' என்று அழைக்கப்படுகிறது.

அசோகரின் மகள் சங்கமித்திரை கௌதம புத்தர் ஞானோதயம் பெற்ற அரச மரத்தின் கிளையை இங்கே கொண்டு வந்து நட்டு வைத்தாள். அது பின்னர் வளர்ந்து பெரிய மரமாயிற்று. அந்த மரத்தை இன்றும் தழைகளுடன் காணலாம். 'மகா விகாரம்' என்ற புத்தர் கோயிலின் பிராகாரத்தில் இம் மரம் இருக்கிறது.

இந்த விகாரத்துக்குச் சற்றுத் தூரத்தில் பழுப்பு நிறமுள்ள 4600 தூண்கள் நிற்கின்றன. இவை 900 அறைகளைக் கொண்ட ஒன்பது உப்பரிகைகளையும், தந்த சிம்மாசனத்தையும், விலையுயர்ந்த பொக்கிஷங்களையும் தாங்கிக்கொண்டிருந்தன என்கிறார்கள். இந்த மாளிகை 'பிரகாசிக்கும் அரண்மனை' (Brazen Palace) என்று பெயர் பெற்றிருந்தது.

தீசன் என்ற மன்னன் புத்தரின் வலது கழுத்துப் பட்டையைத் தலைமீது சுமந்து வந்து மகிந்தரின் (அசோகர்

மைந்தர்) முன்னால் அதை இறக்கி அதன்மீது தூபாராம கோபுரம் என்ற தகோபாவைக் கட்டினான். அதுவும் இதற்கருகில் இருக்கிறது.

தென்னாட்டு மன்னரைப் போரில் வென்ற வட்ட காமினி (கி. பி. 29) அபயகிரி கோபுரத்தைக் கட்டினான். இதன் உயரம் 450 அடி. இங்கிலாந்தில் உள்ள செயின்ட் பால் மாதாகோயில் கோபுரத்தைவிட இது 200 அடி அதிக உயரம் கொண்டதென்று கூறுகிறார்கள். சீன யாத்திரிக ரான பாகியான் இந்தக் கோபுரத்தைக் கண்டு தரிசித்தார் என்கிறார்கள்.

மகாசேனன் என்ற அரசன் கட்டிய ஜேதவனாராம கோபுரமும் அநுராதபுரத்தில் இருக்கிறது. இதன் குறுக்களவு 367 அடி. இதற்கு உபயோகப்படுத்தப்பட்ட செங்கற்களைக் கொண்டு, லண்டன் மாநகரிலிருந்து எடின் பரோ வரை ஓர் அடி கனத்தில் 10 அடி உயரமுள்ள ஒரு சுவர் கட்டலாம் என்று சர் எமர்சன் டெனண்ட் கூறுகிறார்.

கி. பி. 831-இல் தென்னாட்டிலிருந்து வந்த பாண்டு என்ற மன்னன், படையெடுத்து இந்த நகரத்தைப் பாழ் படுத்தி இதன் செல்வங்களைக் கொள்ளையடித்துச் சென்று விட்டான். இன்று அநுராதபுரத்தில் இலங்கைச் சர்க்கார் பல சீர்திருத்தங்கள் செய்து பழைய சின்னங்களைப் பாதுகாத்து வருகிறார்கள்.

## பொலந்நறுவை

கொழும்புவிலிருந்து 200 கி. மீ. தூரத்தில் இருக் கிறது பொலந்நறுவை. இந்நகரம் அடர்ந்த காட்டுக்குள் மறைந்து கிடந்தது. சுமார் 90 ஆண்டுகட்கு முன்னர் காட்டில் வேட்டையாடச் சென்ற ஓர் ஆங்கிலேயர் இங்குள்ள சிற்பங்களையும் சிதைந்த கோயில்களையும் கண்டார். அதன் பின்னரே இலங்கைச் சர்க்கார் இந்தச் சின்னங்களைப் பாதுகாக்க முன் வந்தனர். முதலாம் பராக்கிரமபாகு காலத்தில் இந்த நகரம் சீரும் சிறப்பும் பெற்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியில் புலஸ்திய நகரம் என்று வழங்கி வந்த இந்நகரம் இராசராசன் காலத்தில் சனநாதபுரம் என்று பெயர் பெற்றது. அதன் பின்னர்ச் சிங்கள மன்னரின்கீழ் இது வந்தது. அப்போதுதான் பொலந்நறுவை என்ற புதுப் பெயர் கொண்டது இந்நகர் என்பர். இந்நகர் பல சதுரமைல் விஸ்தீரணம் கொண்ட தென்றும் கனத்த மதில்கள் சூழ்ந்ததென்றும் கூறப்படுகிறது.

சோழர்கள் காலத்துச் சிவாலயங்கள் பல இங்கே இருந்தன. அவற்றில் இரண்டு கோயில்கள் ஓருவாறு சிதைவுறாமல் காணப்படுகின்றன. ஒரு கற்கோயில் சிவலிங்கம், நந்தி தேவர், விமானம் ஆகியவற்றுடன் காட்சியளிக்கிறது.

நகரின் நடுவில் 'விஜயந்தா' என்ற அரச மாளிகை ஏழு மாடிகள், ஆயிரம் விசாலமான அறைகளுடனும் பொன், வெள்ளி ஆகிய சிகரங்களுடனும் விளங்கிற் றென்கிறார்கள். இப்பொழுது காணப்படுபவை ஒன்பது அடி கனங் கொண்ட செங்கற் சுவர்களே. அரண்மனைக்குப் பின்னால் 'ராஜ மாளிகபவா' என்ற அரச சபையின் சீரணமான பாகங்கள் காணப்படுகின்றன. அவற்றில் யானை வரிசை, சிங்க வரிசை, பெண் வரிசை உருவங்கள் கலை விருந்தாக விளங்குகின்றன.

இங்கு ஆலயங்களில் மிகச் சிறந்தது 'இலங்கா திலகம்' என்ற ஜேதவனாலயம். 170அடி நீளம், 66 அடி அகலம் கொண்ட இந்த ஆலயத்தின் சுவர் 55 அடி உயரம் நிமிர்ந் திருக்கிறது. மார்பளவுக்கு மேல் பின்னம் அடைந்த பிரம்மாண்டமான புத்தர் சிலை ஆலயத்தின் நடுவில் இருக்கிறது. புத்த பகவானால் கபிலவஸ்துவில் கட்டப் பட்ட ஆலயத்தைப் பின்பற்றி இது கட்டப்பட்டதென்பர். மூலஸ்தானத்தில் உள்ள புத்தர் சிலை மூன்று வளைவு களுடன் இருப்பதனால் இதற்குத் திரிவங்க புத்தர் என்று பெயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலுக விகாரத்தில் புத்தர்பிரான் உயிர் நீத்த கோலத்தில் வலப்பக்கம் திரும்பித் தலையணையின்மேல் வலக்கையை வைத்துப் பள்ளி கொண்டிருக்கிறார். இந்தச் சிற்பம் 45 அடி நீளம் கொண்டது. மகா அற்புதமாக முக பாவத்தையும், ஆடை நெளிவு, தலையணை முதலியவற்றையும் செய்திருக்கிறான் சிற்பி. தலைப்புறத்தில் அவரது சீடர் ஆனந்தர் துக்கத்தால் கண்ணீர் வடிக்கும் கோலத்தில் நின்றுகொண்டிருக்கிறார். இச் சிலையின் உயரம் 26 அடி. வனத்தினிடையே கருங்கல்லால் நிருமிக்கப்பட்ட விகாரை இது. நிம்மதியையும் சலனமற்ற நிலையையும் இங்கே காணலாம்.

சற்றுத் தூரத்தில் பராக்கிரமவாகுவின் சிலை இருக்கிறது. நீண்ட தாடியுடன் கத்தியை உறையிலிடும் கோலத்தில் இருக்கிறது இந்தப் பிரம்மாண்டமான சிலை. போரை வெறுத்துத் துறவியாகும் கோலம் போலும்!

வட்டடகே ஆலயத்தில் நான்கு வாயில்களின் முன்னால் அர்த்த சந்திர வடிவுடைய சந்திர காந்தக் கற்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நான்கு திக்குகளையும் பார்த்தவண்ணம் ஒவ்வொரு வாயிலிலும் புத்த விக்கிரகங்கள் அமைதியுடன் விளங்குகின்றன. ஒவ்வொரு வாயிலிலும் துவாரபாலகர் சிலைகள் இருபுறமும் இருக்கின்றன. படிகளில் மிக நுணுக்கமான சிற்ப வேலைகள் செய்யப்பட்டுள்ளன.

27 அடி நீளமும் நாலரை அடி அகலமும் உள்ள ஒரு கற்பலகை பிரிக்கப்பட்ட ஓலைச் சுவடி வடிவில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் பழைய காலத்து எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அதன் நிறை 25 டன் என்பர்.

காலம் கடந்தும் அந்தச் சிற்பங்கள் அழிந்த நிலையிலும் தமது பெருமையை நமக்குப் பறை சாற்றி நிற்கக் காணலாம்.

99863

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிகிந்தலை

அநுராதபுரம் ரெயில் நிலையத்திற்குக் கிழக்கே சுமார் 12 கி.மீ.ல் இருக்கிறது மிகிந்தலை. அசோக சக்கரவர்த்தியின் மைந்தர் மகிந்தர் முதன்முதலில் இலங்கையில் இறங்கிப் பௌத்த மதத்தின் அஸ்திவாரக் கல்லை நாட்டிய இடம் மிகிந்தலை.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் (கி.மு.307) இலங்கையில் அரசு புரிந்து வந்த தேவனாம்பிய தீசா என்ற அரசன் வேட்டையாடுவதில் பிரியமுள்ளவன். மிகாசா என்ற மலை சூழ்ந்த காட்டை அவன் மான் வேட்டைக்கென ஒதுக்கி வைத்திருந்தான். 40,000 மக்களுடன் இந்த வனத்தில் அவன் வேட்டையாடச் சென்றிருந்தான். அப்போது மிக அழகுடைய மானொன்று அவன் கண்ணில் பட்டது. அது அவனை ஆட்டங் காட்டி மகிந்தர் தங்கியிருந்த மலைக்கு அழைத்துச் சென்றுவிட்டது. அரசன் அம்பெய்யக் குறி பார்த்தபோது மகிந்தர் அவனைப் பெயரிட்டு அழைத்தார்.

அற்புத வசீகர சக்தியால் கவரப்பட்ட மன்னன் அவரிடம் பௌத்த மதக்கொள்கைகளைக் கேட்டறிந்து 40,000 மக்களுடன் பௌத்தனானான். மன்னனும் மகிந்தரும் சந்தித்த இடத்தில் 'அம்பாஸ்தலே கோபுரம்' எழுப்பப்பட்டது. மகிந்தர் அமர்ந்திருந்த கற்பலகை அப்படியே இரும்பு வளையங்களால் பாதுகாக்கப்பட்டு வரப்படுகிறது. மலையுச்சியிலே மகிந்தர் நிர்வாணம் அடைந்த இடம் இருக்கிறது. தேவனாம்பியதீசன் அங்கே எழுப்பிய விகாரைகள், கோபுரங்கள், மாடங்கள் அனைத்தும் இடிந்து காணப்படுகின்றன. பௌத்த சந்நியாசிகள் உபந்நியாசம் செய்த இடங்கள், மேடைகள் குளிப்பதற்கென அமைக்கப்பட்ட நீர் ஊற்றுக்கள் அனைத்தும் கற் குவியல்களாக இருக்கின்றன. புத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதத்தின் சட்ட திட்டங்கள் 7 அடி நீளம் 4 அடி அகல முள்ள ஒரு கற்பலகையில் செதுக்கப்பட்டிருக்கின்றன.

## இலங்கையில் சைவம்

இலங்கையில் பௌத்தமும் சமணமும் நிலை பெற்றன. ஸ்ரீரங்கநாதரது விக்கிரகத்தை விபீடணாழ்வார் இலங்கைக்கு எடுத்துச் செல்ல விழைந்தார். ஆனால் அரங்கநாதர் காவிரிக் கரையிலே ஸ்ரீரங்கத்தில் புடை பெயராது சயனித்துவிட்டார். தேவியைப் பிரித்த பாவியின் ஊராகையால் இலங்கைக்குச் செல்ல அவர் விரும்பவில்லை போலும். ஆழ்வார்கள் பாடல் பெற்ற தலம் அங்கில்லை. ஆனால் இலங்கையில் உள்ள திருக்கோணமலை, மாதோட்டம் என்ற இரண்டு சிவத்தலங்கள் நாயன்மார்களின் பாடல்களைக் கொண்டுள்ளன.

இலங்கையின் கிழக்குக் கடற் கரையோரமாகக் கொழும்புலிருந்து 270 கி.மீ. தூரத்தில் இருக்கிறது திருக்கோணமலை. திருக்கோணமலை சிறந்த துறைமுகம். கடலுக்குள் மிக நீண்டு கிடக்கும் பாறை பல இருக்கின்றன. அவற்றின் நடுவில் உள்ள பாறைமீது இருக்கிறது கோணேசர் கோயில். பரங்கியர் இங்கே கோட்டை கட்டும்போது கோணேசர் கோயில் விக்கிரகங்கள் தம்பை நகர்க்கு மாற்றப்பட்டன. ரெயில் நிலையத்திலிருந்து கோணேசர் பாறைக் கோயில் 2 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. பழைய பாறைக் கோயிலுக்குள் திங்கள், வெள்ளி ஆகிய தினங்களில் மாலைவரையில் பக்தர்கள் அநுமதிக்கப்பட்டு வருகிறார்கள்.

படை வீரர்களுடன் சென்றே கதவைத் திறந்து கோணேசரின் மூல இலிங்க மூர்த்தத்தைச்சேவிக்க முடியும். கடலுக்குள் நீண்டு கிடக்கும் பாறையில் அலைகள் மோதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்திய குடைவில் ஒரு கல் நிற்கிறது. அதுதான் கோணசர் இலிங்கம்.

கோயிலும் பிணியும் தொழில்பால் நீங்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலை யமர்ந்தாரே

என்பது சம்பந்தர் தேவாரம். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தர் இராமேச்சரத்திலிருந்தே இத் தலத்தைப் பாடினார் என்கிறார் சேக்கிழார்.

கொழும்புவிலிருந்து ரெயிலேறி மன்னாருக்குச் சென்று அங்கிருந்து 10 கி.மீ. சென்றால் மாதோட்டம் இருக்கிறது. சம்பந்தரும் சுந்தரரும் இத் தலத்தைப் பாடியுள்ளனர். ஆனால் அவர்கள் இத் தலத்திற்குச் சென்று பாடியதாகத் தெரியவில்லை. இராமேச்சரத்திலிருந்தே பாடினார் என்பர்.

மாதோட்டத்தர் மன்னு
பாலாவியின் கரைக் கேதீச்சரம்

என்பது அவர் பாடல். முன்னீசுவரம், நகுலேசுவரம் என்ற பிரபல சிவாலயங்களும் இலங்கையில் இருக்கின்றன.

முதலாம் இராசராசன் பொலந்நறுவையில் ஒரு சிவாலயத்தைக் கட்டுவித்தான். வானவன் மாதேவி ஈசுரமுடையார் என்பது இச் சிவாலயத்தின் பெயர்.

முற்றும்

PUBLIC LIBRARY
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது புதிய வெளியீடுகளிற் சில...

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ராமமூர்த்தி | எஸ்.வி.வி. | ரூ. | 28-00 |
| 2. | கோபாலன் ஐ.ஸி.எஸ் | ,, | | 17-00 |
| 3. | உல்லாச வேளை | ,, | | 22-00 |
| 4. | சம்பத்து | ,, | | 22-00 |
| 5. | செல்லாத ரூபாய் | ,, | | 11-50 |
| 6. | தீபாவளிக் கதைகள் | ,, | | 7-25 |
| 7. | வாழ்க்கையே வாழ்க்கை | ,, | | 12.00 |
| 8. | பொம்பி | ,, | | 7-00 |
| 9. | At a DInner | ,, | | 16-00 |
| 10. | Marriage | ,, | | 12-00 |
| 11. | Soap Bubbles and More soap Bubbles | ,, | | 18-00 |
| 12. | பெரிய புராண விளக்கம பகுதி I | கி.வா.ஜ. | | 26-25 |
| 13. | ,, ,, II | ,, | | 37-50 |
| 14. | ,, III | ,, | | (அச்சில்) |
| 15. | வழி காட்டி | ,, | | 15-00 |
| 16. | இந்துமத உபாக்கியானம் | எ.கிருஷ்ணசாமி | | 15-00 |
| 17. | கனகாம்பரம் | கு.ப.ரா | | 11-50 |
| 18. | ஆத்ம சிந்தனை | ,, | | 7-50 |
| 19. | டால்ஸ்டாய் வாழ்க்கையும் உபதேசமும் | ,, | | 11-50 |
| 20. | மங்கையர்க்கரசியின் காதல் | வ.வே.சு.ஐயர் | | 11-00 |
| 21. | சந்தனக் காவடி | -தி.ஜ.ர. | | 11-50 |
| 22. | ஐரோப்பியச் சிறுகதைகள் | - க.நா.சு. | | 13-00 |
| 23. | காட்டு மல்லிகை (நாடோடிப் பாடல்கள்) | -தி.நா.சுப்ரமணியம் | | 9-00 |
| 24. | பல்லவ மஹேந்திரவர்மன் | ,, | | 9-00 |
| 25. | கன்யா குமாரி | த.நா.குமாரசாமி | | 15.00 |
| 26. | குறுக்குச் சுவர் | ,, | | 10.00 |
| 27. | மஹாபாரதக் கதைகள் | பி.ஸ்ரீ. | | 32-50 |
| 28. | மூன்று தீபங்கள் | ,, | | 7-50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. அருணகிரி நாதர்
-வாழ்க்கை வரலாறு பி.ஸ்ரீ. (அச்சில்

30. கம்பதாசன் வாழ்வும் பணியும்
,சிலோன் விஜயேந்திரன் 15

31. கம்பதாசன் கவிதைதிரட்டு 25-

32. மங்கல வாழ்வுக்கு மணியான யோசனைகள்
Dr.K.K. ராமலிங்கம் 10.00

33. தெய்வத்தின் அருள் வாக்கு ,, 9-00

34. இருபதாம் நூற்றாண்டின்
.சங்கீத மேதைகள் சு.ரா. 22-0

35. ஆசிய ஜோதி ஜவாஹர் தி.ஜ.ர. 22-0

36. தியாகி சத்திய மூர்த்தியின் P.L.ராஜேந்திரன் 9-0
தீரச் செயல்கள்

37. எல்லைக் காந்தி கஃபார்கான் ,, (அச்சில்

38. தென்னாட்டுக் கோயில்கள் I ம.ராதாகிருஷ்ண
பிள்ளை 12.00

39. ,, II ,, (அச்சில்)

40. சுகர் கூறிய கண்ணன் கதை ,, 12-00

41. பாகவதக் கதைகள் ,, 12-00

42. பிற்கால வைணவம் ,, 10-00

43. இலங்கையின் கதை ,, 8-25

44. தமிழர் வீரம் ,, (அச்சில்

45. அவதாரமும் கம்பரும் ,, (,,)

46. வரலாற்றுக் கதைகள் ,, 7 50

47. கன்றுங் கனியுதவும் எல். உலகநாத பிள்ளை 5-

---


'வாகீச கலாநிதி' கி. வா. ஜ. அவர்கள் எழுதிய

**பெரியபுராண விளக்கம்**

பல தொகுதிகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. உங்கள் பிரதிக்கு முந்துங்கள். மற்றும் இவ்வாசிரியரின்

**நாடோடி இலக்கியங்கள்**


என்ற நூலும் பல தொகுதிகளில் வெளிவரும்.

---

**அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை-4.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



எம். ராதாகிருஷ்ண பிள்ளை
(1911-1974)

இவர் 1936-ல் மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ் இந்திய நாட்டின் விடுதலைக்காக போராடுவது என்று உறுதி கொண்டார். அவரது நேர்மை, எளிமை நாட்டுப்பற்று, செயலாற்றும் திறன் நிதானம் ஆகியவை போற்றத் தக்கது. அவரது வாழ்க்கையை அரசியல், சமூகம், இலக்கியம், சமயம், கல்வி என்று ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவர் தமது வாழ்நாள் முழுவதும் ஓய்வு தேடாமல் உழைத்தார்.

இவர் 33வது வயதில் (1914) மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் மேயராக இருந்தபோது பல சீரிய பணிகள் நடைபெற்றன.

பிள்ளையவர்கள் பச்சையப்பன் அறநிலைய ஆட்சிக் குழுவின் தலைவராக சிறப்பாகப் பணியாற்றியவர் தமிழ் நாட்டிலும், ஆந்திர, கர்நாடக, கேரள மற்றும் இதர பகுதிகளிலும் பாடல் பெற்ற, பாடல் பெறாத பல திருக்கோயில்களுக்குப் பலமுறை அவர் யாத்திரை சென்றிருக்கிறார். ஆலயங்கள் நமது நாகரீகத்தின் அறிகுறியாக விளங்குபவை என்றும் நம் முன்னோர்களுடைய வாழ்க்கை ஆலயங்களைச் சுற்றிப் படர்ந்தது என்றும் அவர் கருதினார்.

தேசிய நெறியாளர்; வைணவத் தொண்டர்; ஆசார மற்ற பொது வாழ்வுக்கு இலக்கணம் வகுத்த மாமனிதர். ராதாகிருஷ்ண பிள்ளையின் திரு நாமம் வாழ்க!

பிள்ளையவர்கள் இளம் வயதிலேயே சமய இலக்கியங்களை மிகவும் விரும்பிப் படித்தார். அவர் தமிழ் நாட்டில் ஆலயங்களின் புனர் நிர்மாணத்திற்கும் பொறுப்பேற்றும் செயல் பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை-4